

ஆசை
ஆசை
ஆசை
ரமணிசந்திரன்

# ஆசை...
# ஆசை...
# ஆசை...

## 1

இனிமையான நாதஸ்வர இசை! கம்பீரமும் குழைவு மாகக் கேட்பதற்கு மிகவும் அற்புதமாக இருந்தது!

ஆனாலும் ஒரு குறை! ஓடிக் கொண்டிருந்தது, டேப்! பெரிய வித்வானின் வாசிப்புதான் என்றாலும், அந்தப் பெரிய திருமண மண்டபத்துக்கும், அதில் நடக்க இருக்கும் விழாவுக்கும், டேப் ரிகார்டருக்கும் சற்றும் ஒத்து வராதது போல, மதிவதனிக்குத் தோன்றியது!

அதுவும் கொஞ்சம் விலை மலிவான ப்ளேயர்! அத்தை வீட்டில் விலை உயர்ந்ததும் இருக்கத்தான் செய்கிறது!

ஆனால், மண்டபத்துக்கு அதைக் கொணர்ந்து திருட்டுப் போய்விட்டால்?

அந்த ஒரு காரணத்துக்காகவே கொண்டு வரப்பட்டது, இது! அதற்காக, இது திருட்டுப் போனால் பரவாயில்லை என்பதல்ல!

''அதன் மேல் ஒரு கண் வைத்துக்கொள், வதனிக் கண்ணு! திருமணமும் அதுவுமாக உருப்படியான ஒரு பொருள் தொலைந்து போனால் நல்லதில்லை! அதனால் தான் பார்த்துக்கொள் என்று உன்னைச் சொல்லுகிறேன்! உனக்குத் துணையாகத்தான், உன் சித்தி, மாமா, பெரியம்மா, அவர்கள் பிள்ளைகள் என்று பெரிய கூட்டமே வந்திருக்கிறார்களே! ஒரு கண் வைத்துக் கொள்ளும்படி, எல்லாரிடமும் சொல்லி வைத்துவிடு!'' என்று சொல்லி விட்டுத்தான் அத்தை நகர்ந்தாள்.

''எங்கள் அண்ணி கூப்பிட்டிருக்கிறார்கள். வராவிட்டால் தப்பாகி விடும். அதனால், குடும்பத்தோடு எல்லோருமே வந்துவிடுங்கள்'' என்று மதியுடைய அன்னை சொல்லித்தான், அவள் வழி உறவினர் எல்லோரும், இந்த மாப்பிள்ளை அழைப்பும் பட்டுக் கட்டுவதுமான முந்தைய நாள் விழாவுக்கே வந்ததே!

இப்போது, அதையுமே மட்டம் தட்டுவது போலப் பேசுவதா என்று, மதிவதனிக்குச் சற்றுக் கோபம்தான்! அத்தையின் பேச்சு எப்போதுமே, இப்படித்தான்! தரம் சற்றுக் குறைவுதான்!

இந்த டேப் ரிக்கார்டரைப் போல!

கொஞ்சம் இரண்டாவது நிலையில் உள்ள நாயனம் என்றாலும், ஒத்தும், தவிலும், தாளமுமாக, அந்தக் கம்பீரத்

தோற்றமே, திருமணத்தை அழுத்தத்துடன் முன் மொழி வது போல இருக்குமே!

அதை விட்டு, இருந்திருந்து, இதில் போய்ப் பெரிதாகச் சிக்கனம் பிடிக்கிறார்களே, இந்த அத்தை! இதில் மட்டுமல்ல! அவர்களால் முடிந்த எல்லாவற்றிலும்!

மதிவதனியுடைய தந்தைகூட, அவருடைய தங் கையும், மணப் பெண்ணான மோனி என்கிற மோகனா வுடைய தாயுமான சுந்தரியிடம் சொல்லிப் பார்த்தார்!

"போங்கண்ணா! நானே பெரிய இடத்தில் பெண்ணைக் கொடுக்கிறோமே என்று, தங்கமும் வெள்ளியுமாகப் பெரும் செலவில் மாட்டிக் கொண்டு தவிக்கிறேன்! இந்த மண்டபத்துக்கே எவ்வளவு பணம்! உங்களிடம் பணம் இருந்தால், நல்லதாக ஒரு நாதசுர செட்டை நீங்களே ஏற்பாடு பண்ணுங்கள்! என்னால் ஆனது இவ்வளவுதான்!" என்று முடித்துவிட்டு, "எனக்கு எவ்வளவு வேலை கிடக் கிறது? உதவிக்கு ஒரு நாதி இல்லாமல் நான் பாடாய்ப் பட்டுக் கொண்டிருக்கிறேன்! என்னை நிறுத்தி வைத்துப் பேசுகிறீர்களே!" என்று குறைப்பட்டவாறே, அங்கிருந்து போய் விட்டாள்.

உதவிக்கு ஒரு நாதி இல்லாமலா?

வேர்த்து வடிய, இங்குமங்கும் ஓடி, மண்டபத்துக்கு முன்னதாக வந்துவிட்ட உறவினர்களை வரவேற்பதும், உணவு பானம் அளித்து உபசரிப்பதும், இடையிடையே சுந்தரியின் அழைப்புகளுக்கு ஓடுவதுமாகப் பம்பரமாகச் சுழன்று கொண்டிருந்த மனைவியைப் பார்க்கையில், சுதர்சனத்துக்கே பாவமாக இருந்தது!

அதே போல, மகள் மதிவதனியும், மண்டபத்துக்கு வந்த தில் இருந்து வேலைதான் செய்து கொண்டிருக்கிறாள்!

அவள் மட்டுமல்ல! அவளுடைய தாய்வழி உறவுப் பெண்களும், அவளோடு வந்து, மாப்பிள்ளை அழைப்புக்கான ஆரத்தித் தட்டுகளை விதம் விதமாக அலங்கரித்து அடுக்கிக் கொண்டிருந்தார்கள்!

ஆரத்தித் தட்டு அலங்காரத்துக்கு, இது வேண்டும், அது வேண்டும் என்று, அவர்கள் கேட்பதையெல்லாம், வாங்கிக் கொடுத்துக்கொண்டு, அங்கேயே நின்றார், சுதர்சனம்!

ஏனெனில், ''எப்போது பொறுப்பை ஒப்படைத்து விட்டேனோ, அப்புறம் எதற்கும் 'ஞை ஞை' என்று என்னைக் கூப்பிடக் கூடாது. எல்லாப் பொறுப்பும் உன்னதுதான்! எதை வாங்குவாயோ, என்ன செய்வாயோ? எல்லாம் உன் அப்பா மூலமாகப் பார்த்துக்கொள்!'' என்று சுந்தரி அத்தை தீர்மானமாகச் சொல்லியிருந்தாளே! அதற்கு மேல், எதையாவது வாங்க வேண்டும் என்று அத்தையிடம் போய்க் காசு கேட்க, அவளுக்கென்ன கொம்பா முளைத்திருக்கிறது?

பதினைந்து தட்டுகள்!

கடைசியாக ஆல நீர் கரைத்துக் கற்பூரம் காட்டுவதற்கான தட்டு, தவிர, பதிநாலு விதமான அலங்காரங்கள்! எல்லாவற்றிலும், நடுவில் தீபம் ஏற்றுவதாகத் தயாராக வைக்கப்பட்டிருந்த விளக்குகள்!

திரி, எண்ணெய் கூடப் போட்டுத் தயாராக இருந்தன!

''ஏய். நம்மையெல்லாம்கூட, ஆலம் எடுக்கச் சொல்வார்களா, மதி?'' என்று பெரியம்மா மகளின் காதில், ரகசியமாகக் கேட்டாள் சௌமினி.

''ஏய், இதையெல்லாம் கொஞ்சம் சத்தமாகக் கூடக் கேட்கலாம்பா! யாரும் அடிக்க வர மாட்டார்கள். அத்தோடு, என்ன சொல்கிறாய் என்பது புரியும்! ஆமாம், நீ என்ன கேட்டாய்? நீயும் ஆலம் எடுக்கலாமா என்றா?'' என்று

கடைசி வாக்கியத்தை வேண்டுமென்றே மதிவதனி உரக்கக் கேட்டாள்!

"ஐயோ! ஐயோ! மெள்ளப்பா!" என்று, வதனியின் வாயைப் பொத்தி, ''நம்மை எடுக்கச் சொல்லுவார்களா என்று கேட்டால், என்னவோ, நான் ஆலம் சுற்ற ஆசைப்படுகிற மாதிரிப் பேசுகிறாயே! யாரேனும் கேட்டால், என்னைப் பற்றி என்ன நினைப்பார்கள்!'' என்று முடிக்குமுன், சௌமினியின் முகம் சிவந்து, கண்கள் கலங்கிவிட்டன!

''ஏய், ஏய் சௌமி, என்ன இது? அதற்குள் என்ன அழுகை? சீக்கிரமாகக் கண்ணைத் துடை! எங்கள் அத்தை மட்டும் இப்போது இங்கே வந்தார்களோ, அப்புறம் கல்யாண வீட்டில் அபசகுனம் போலக் கண்ணீரா, என்று உன்னைக் கூறு கிழித்து மாலையாகப் போட்டுக் கொள் வார்கள்!'' என்று மதிவதனி சொல்லிக் கொண்டிருக்கும் போதே, ''என்னது கூறு?'' என்று கேட்டபடி, சுந்தரியே அங்கே வந்து நின்றாள்.

அவசரமாகக் குனிந்து, ஒரு தட்டைச் சீர் செய்கிறவள் போல சௌமினி குனிந்து சமாளிக்க, ''கூறுதானே, அத்தை? இதோ இந்தத் தட்டுக்கான பூவை அப்பா, கூறு ஐந்து ரூபாய் என்று, மூன்று கூறுகள் வாங்கினாராம்! இந்த மஞ்சள், சிவப்பு ரோஜாக்கள், இருபது ரூபாய்! மொத்தம் முப்பத்தைந்து ரூபாய் ஆகிறது! எவ்வளவு சரியாகக் கணக்கைக் கைவிரல் நுனியில் வைத்திருக்கிறேன், பாருங்கள்! அப்புறம், இந்தச் சின்ன நீர் வீழ்ச்சிக்குள் இருக்கும் மோட்டாரின் விலை...'' என்று அவள் முடிக்கும் முன்பாகவே, அத்தையம்மாள் குறுக்கிட்டாள்!

''சரிதான் போ! நீ சொல்லுகிற ஆட்டுக்குட்டி கதை யெல்லாம் கேட்டுக்கொண்டு நின்றேன் என்றால், என்

கதை இப்போது கந்தலாகிவிடும்! எதெது சொல்ல அவசியம் என்று இல்லாமல் கதை அளக்கிறாயே! பக்கத் தில் உன் சித்தி பெண் சௌமினியைப் பார்! கருமமே கண்ணாக, வாயை மூடிக் கொண்டு எப்படி வேலை செய் கிறாள்! எப்படியோ, சீக்கிரமாக வேலையை முடியுங்கள்! இன்னும் அரை மணி நேரம்தான் இருக்கிறது! அதற்குள் எனக்குத் தலைக்கு மேலே வேலை! எல்லாம் ஒருத்தி யாகச் செய்ய வேண்டும்!'' என்று அங்கிருந்து அகன்றாள், சுந்தரி!

மதிவதனி ஓசையற்று நகைக்க, லேசான முறுவலுடன் நிமிர்ந்தாள் சௌமினி.

''ஆமாம்! இப்போது சிரி! உன் அழுகையை மறைப்ப தற்காக அத்தையை விரட்ட, நான் இத்தனை பணக் கணக்கு சொல்ல வேண்டியதாயிற்று! ஏதோ வழியில், இது அப்பா காதுக்குப் போனால், எனக்கு மண்டகப்படி விழும்! தங்கையை விட்டுக் கொடுக்கப் பிடிக்காமல், இந்தச் சில்லரைச் செலவை எல்லாம், அத்தையிடம் ஏனம்மா சொல்லுகிறாய் என்று, என்னைக் கேட்பார்!''

''பின்னே, நீ பேசியதில், ஆலத்திப் பரிசுக்காக நான் அலைகிற மாதிரித் தோன்றாதா? யாராவது தப்பாக நினைத்து விடுவார்களோ என்று பயமாக இருந்தது!''

''ஆமாம், இவ்வளவு யோசி! ஆனால் நீ மட்டும்தான் இப்படி நுணுக்கி நுணுக்கி யோசிப்பாய்! அத்தை பாட்டில், மாப்பிள்ளை வீட்டுக்காரர்களிடம், குறைந்தது பதினைந்து பேர் ஆலம் சுற்றுவார்கள் என்று சொல்லி விட்டார்கள்! இன்னும் எத்தனையோ வரும். ஆனால், இத்தனையோடு நிறுத்தப் போகிறேன் என்று ஜம்பம் வேறு! ஆனால், அத்தையுடைய புகுந்த வீட்டு உறவில், மொத்தமே ஆறு

தேறவில்லையாம்! மோனாவின் அந்த வகை அத்தை, சித்திகளைச் சேர்த்தாலும் வந்திருப்பவர்களில் பத்துப் பேர்தான் ஆகிறதாம். நானும் இன்னும் சித்தப்பா மகளும் சேர்த்து, பனிரண்டு! இந்தப் பக்கம், நீ, கோகி, மஞ்சு சேர்ந்தால், பதினைந்து ஆகிவிடும். பட்டியலில் பாட்டி களையும் சேர்க்குமுன், இந்தப் பேச்சு யார் காதிலாவது விழாதா என்றுதான் சத்தமாகச் சொன்னேன்! அதற்குள், ஓட்டைத் தண்ணீர்க் குழாய் மாதிரி, சொட்டுச் சொட்டாய் வடிக்கத் தொடங்கி விட்டாயே!'' என்று விளக்கம் சொன்ன பெரியன்னை மகளிடம் அசடு வழிய, ''சாரி'' சொன்னாள் மற்றவள்!

மதிவதனியின் கணிப்பு சரியாகி, சற்று நேரத்தில் மணப் பெண்ணுடைய தந்தை வந்து, ''மதிக்குட்டி, உன் அம்மா வழியில் ஒரு மூன்று பெண்களை ஆலத்தி காட்டத் தயார் பண்ணும்படி, அத்தை சொல்லச் சொன் னாளம்மா! முகம் கிகம் கழுவி, அலங்காரம் பண்ணிக் கொண்டு தயாராக இருக்கச் சொல்லும்மா!'' என்று கூற வும், ''சரி மாமா, இதோ சொல்லி விடுகிறேன்!'' என்று பணி வுடன் உரைத்துவிட்டு, அவர் மகிழ்ச்சியோடு சென்றதும், அருகில் இருந்தவளிடம் கண் சிமிட்டிச் சிரித்தாள்.

அடுக்கிய தட்டுகளை ஓரமாக எடுத்து வைத்துவிட்டுத் தந்தையை அழைத்து, ''அப்பா, நீங்கள்தான் காவல்! யாரும், எதையும் தொட்டு விடாமல் பார்த்துக் கொள்ளுங் கள்! நாங்கள் உடை மாற்றிக் கொண்டு வந்து விடுகிறோம்!'' என்று சௌமினியைப் பிடித்து இழுத்துக் கொண்டு, மற்ற உறவுத் தோழிகளை நாடிச் சென்றாள்.

திருமண விழாவுக்காக, ஏற்கனவே 'பேஷியல் பெடிக் யூர்' எல்லாம் செய்து விட்டிருந்தால், பளிச்சென்றிருந்த

முகத்திற்கு லேசான ஒப்பனையோடு, சம வயதுத் தோழி யர் நால்வரும், விரைவிலேயே அலங்கரித்துக் கொண்டு, வந்து விட்டனர்!

தந்தையைத் தயாராகுமாறு அனுப்பிவிட்டு, நாலு பேருமாக ஏதோ பேசிச் சிரித்தபோது, யாரோ ஆலத்தித் தட்டுகள் அருகே வந்து நின்று கொண்டு, தட்டுகளில் உள்ள விளக்குகளை ஏற்ற முற்பட்டனர்.

''ஏ. ஏ. ஏ. யார் நீ? அதையெல்லாம் தொடக் கூடாது!'' என்று, வேலைக்காரம்மா போன்று தோன்றிய அந்தப் பெண்ணைத் தடுத்து நிறுத்தினர் நால்வருமாக.

''அம்மாதான் சொல்லி அனுப்பினாங்க! அல்லாத் தியும், ஏத்தி அணைச்சு வைன்னு, சொன்னாங்களே..!'' என்று அவள் தொடர்ந்து கூறவும், நாலு இளம் பெண் களுமே, திகைத்துப் போனார்கள்!

''ஏற்றி அணைப்பதா? அபசகுனமில்லை? அதெல் லாம் வேண்டாம்! நீ போ!'' என்று அவளைத் திருப்பி அனுப்பி வைத்தார்கள், சின்னப் பெண்கள்.

ஆனால் சற்று நேரத்தில், நங்கு நங்கென்று சுந்தரி வந்து நின்றாள். ''என்ன வதனி, இது? நான் ஒரு வேலை சொல்லி அனுப்பினால், அதைச் செய்ய விடாமல் திருப்பி அனுப்புவது? ஆங்?'' என்று எரிச்சலை மறையாது காட்டி னாள்.

மதிவதனியும் அப்படி ஒன்றும் பேசப் பயப்படுகிற வள் கிடையாது! அதிலும், நியாயம் சொல்லத் தயங்கவே மாட்டாள்.

எனவே, அத்தையின் பின்னே நின்று, தணிந்து போகும்படி சைகை காட்டிய தந்தையைக் கவனியாதவள்

போல, "பின்னே என்ன அத்தை, நம் மோகி நன்றாக இருக்க வேண்டாமா? அபசகுனம் மாதிரி, ஆலத்தி விளக்குகளை ஏற்றி அணைத்து வைக்க வேண்டுமாம்! வந்து நிற் கிறாளே, அந்த வேலைக்கார ஆயா! அதனால்தான் வேண் டாம் என்றேன்! மோகனா சந்தோஷமாக வாழ வேண்டும் என்று நான் நினைத்தது தப்பா, அத்தை?" என்று அவள் சலுகைக் குரலில் குறைப்பட்டபோது, சுந்தரியின் சில வினாடி ஒன்றும் சொல்ல முடியாமல் வாயடைத்து நின் றாள்!

ஆனால், தோல்வியை எளிதாக ஒத்துக் கொள்கிறவள் அவள் அல்லவே!

எனவே, "அபசகுனமாவது, மண்ணாங்கட்டியாவது? பெரிய பாட்டியம்மா மாதிரி சகுனப் பேச்செல்லாம், உனக்கு எதற்கு? விளக்குகளை ஏற்றி அணைத்து வைத் தால், மறுபடியும் ஏற்றும்போது இலகுவாகப் பற்றிக் கொள் ளும்! மாப்பிள்ளை வீட்டுக்காரர்கள் வரும்போது அவசர மாக ஏற்ற வசதியாக இருக்கும்! அதை விட்டு, மாப் பிள்ளையைக் காத்து நிற்க வைத்துவிட்டு, இங்கே விளக்குகளை ஏற்றுகிறேன் பேர்வழி என்று தட்டித் தடவிக் கொண்டிருக்கக் கூடாது என்று மோகி கட்டாய மாகச் சொல்லியிருக்கிறாள்! என்றைக்கோ தலையில் எழுதி வைத்தது! இதிலேயா மாறப் போகிறது? அதனால், சகுனம், சாஸ்திரம் என்று உளறிக் கொண்டிராமல், நான் சொன்னபடி செய்யுங்கள்!" என்று உத்திரவிட்டுவிட்டுத் திரும்பினாள்.

சற்றுமுன், ஒரு பழைய டேப் ப்ளேயர் தொலைந்து விட்டால் கெட்ட சகுனம், அது இது என்று அளந்தீர்களே என்று எண்ணியபோதும், அதையெல்லாம் சொல்லி

அத்தையோடு மல்லுக் கட்டும் நேரம் இதுவல்ல என்று உணர்ந்து, ''அத்தை, அத்தை வேண்டாம் அத்தை! அதை விட, விளக்குத் திரி முனையில் கொஞ்சம் கற்பூரத்தை அமுத்தி வைத்துவிட்டால், ஏற்றும்போது, உடனே பற்றிக் கொள்ளுமாம். என் தோழி வீட்டுத் திருமணத்தில் செய்யப் பார்த்தேன்! அதுபோலச் செய்யலாம்! கற்பூரம் கூட, நீங்கள் தனியாக வாங்க வேண்டாம்! பக்கத்துப் பிள்ளையார் கோயிலில் நானே வாங்கி வந்து விடுகிறேன்! ப்ளீஸ் அத்தை!'' என்று கொஞ்சிக் கெஞ்சினாள்.

தனக்குச் செலவில்லை. பிரச்சினையும் இல்லை என்று ஆகவும், சுந்தரியின் முகத்தில் சிரிப்பு வந்தது! அண்ணன் மகளின் கன்னத்தில் லேசாகக் கிள்ளி, ''நினைத்தால், ஒன்றை விட மாட்டாயே! சரி சரி, செய்! ஆனால், ஒன்று நினைவு இருக்கட்டும்! இந்தக் கல்யாணத்தைத் தடுக்க முயற்சி செய்தவர்கள், மாப்பிள்ளை வீட்டில் இருக்கிறார் கள். அவர்களுக்கு எரிச்சல் வரும்படியாகப் பார்த்துக் கொள்ள வேணும்! மாப்பிள்ளை வந்துவிட்டால், அப்புறம் காக்க வைக்கக் கூடாது! அது உன் பொறுப்பு!'' என்று விட்டுப் போனாள்.

மதிவதனி கற்பூரம் வாங்குவதற்காகத் தெருமுனை யில் இருந்த பிள்ளையார் கோயிலுக்குக் கிளம்பினாள்.

இரண்டெட்டு எடுத்து வைத்தவள் சற்றே யோசித்து, ''ஏய் சௌமி, நீயும் வருகிறாயா?'' என்று சித்தி மகளை அழைத்தாள்.

''ஐயோ, சேலை நகையெல்லாம் போட்டுக் கொண்டு... ஊகூம், நான் வரவில்லைப்பா!'' என்றாள் சௌமினி சற்று மிரண்ட குரலில்!

''சேலை நகையெல்லாம் போட்டுக் கொண்டு இருப்ப தால் நீ வரவில்லையா? அப்போது நான் மட்டும் என்

னத்தை அணிந்து கொண்டு நிற்கிறேனாம்? கோணச் சாக்கையும், படுதாத் துணியையுமா? தனியாகப் போகப் போரடிக்கும். கொஞ்சம்கூட வாடி என்றால், பயங்கரப் பிகு பண்ணுகிறாயே! சும்மா வாப்பா! ப்ளீஸ்யா! சௌமி, சௌமி, ப்ளீஸ் சௌமி!'' கெஞ்சலாகக் கேட்கவும் அவளும் மனமிளகி, மதிவதனியுடனே கூடப் போனாள்!

சௌமினி எப்போதுமே இப்படித்தான்! இரண்டு தரம் கெஞ்சினால், தலையாட்டி விடுவாள்! எதிலும் உறுதியாக நிற்கத் தெரியவில்லையே, நாளைக்குக் கல்யாணம் ஆகும்போது, புகுந்த வீட்டில் எல்லாவற்றையும் விட்டுக் கொடுத்து விட்டு, 'ஞே' என்று நிற்பாளோ என்று சித்திக் குக் கவலை கூட உண்டு! அப்போதைக்கு அவளுக்கு வசதிதான் என்றாலும் இந்தக் குணம் நல்லதல்ல என்று சௌமிக்குச் சொல்லிக் கொடுக்க வேண்டும் என்று மன துள் குறித்து வைத்தாள் மதிவதனி.

இருவருமாகப் பிள்ளையார் கோயிலை அடைந்த போது, ''என்ன அய்யர், இன்னும் என்னென்ன வேண்டும்? ஒரு தடவையாகச் சொல்லி விடுங்கள்! எல்லாவற்றை யும் மொத்தமாக வாங்கி விடலாம்!'' என்று அங்கிருந்த ஒரே பெட்டிக்கடை முன்னே நின்று, சற்று எரிச்சலான குரலில் சொல்லிக் கொண்டிருந்தான், சற்று உயரமான ஓர் இளைஞன்.

இருப்பதோ, ஒரே கடை! அதைக் கிட்டத்தட்ட மறைத் துக் கொண்டு, இவன் ஒவ்வொன்றாகக் கேட்டுக் கேட்டுச் சொல்லி முடிக்குமுன், அடுத்த நாளாகி விடும்!

''மிஸ்டர், கொஞ்சம் வழி விடுங்கள்! ஹலோ, கடைக்காரர்! எங்களுக்கு ஒரே ஒரு சாமான்தான்! இரண்டு ரூபாய்க்குக் கற்பூரம் கொடுங்கள். போதுமானது!'' என்று

சில்லரையாகப் பணத்தை எடுத்துக் கடைக்காரரிடம் நீட்டினாள் மதிவதனி.

அதாவது, நீட்ட முயன்றாள் எனலாம்!

ஆனால், மெல்லியலான ஒரு பெண், அவள் கேட்ட ஒரே ஒரு சாமானை வாங்கிக் கொண்டு போகட்டுமே என்கிற நாகரீகம், மனிதாபிமானம் எதுவுமே இல்லாமல், அவனை இடிக்காமல் கடைக்காரரிடம், அவளால் காசைக் கொடுக்கவோ, பொருளை வாங்கவோ என்கிற விதமாக நின்று கொண்டு, ''இதுதான் இந்த நாட்டைப் பிடித்த சாபக் கேடு!'' என்று சத்தமாகச் சொன்னான் அந்த இளைஞன்!

ஆத்திரத்துடன் அவன் முதுகை வெறித்தாள் மதிவதனி!

அதற்குள், ''வா, போய் விடுவோம்! அங்கே போய், அத்தை சொன்னது போலவே செய்து விடுவோம்!'' என்று மதிவதனியின் கையைப் பிடித்து இழுத்தாள் சௌமினி.

அவளுக்குக் கொடுப்பதற்காகப் பெரிய கற்பூர வில்லை களை வைத்திருந்த பாட்டிலை எடுத்த கடைக்காரர், அதை மீண்டும் பழைய இடத்திலேயே வைத்துவிட்டு, அவனுக் கான பொருட்களை எடுப்பதைக் கவனித்த மதிவதனி யின் சீற்றம் பெருகியது!



# 2

ஒரே ஒரு சாமான்!

அந்தப் பொருளுக்கு விலை கணக்கிட வேண்டும் என்பதுகூடக் கிடையாது! சும்மா இரண்டு ரூபாய்க்

கற்பூரக் கட்டி ஒன்றை எடுத்துக் கொடுத்துவிட்டு, அவள் தயாராக நீட்டிக் கொண்டிருந்த சரியான சில்லரையைக் கடைக்காரர் வாங்கிக் கொள்ள வேண்டியதுதான்!

மிஞ்சி, மிஞ்சி, வெறும் அரை நிமிஷ நேரம் ஆகக் கூடும்! முப்பதே வினாடிகள்!

அதற்கு இடம் கொடாமல் மறைத்துக்கொண்டு, இந்த ஆள் இப்படி நிற்கிறானே! நாட்டைப் பிடித்த சாபக்கேடு என்று வேறு சொல்லிக்கொண்டு!

ஆனால்... சேச்சே, அவன் வேறு யாரையாவது சொல்லியிருப்பான்! மற்றபடி இரண்டு அழகான பெண் களை... அதுவும் மணமகனுக்கு ஆலம் சுற்றுவதற்காக அலங்காரம் செய்துகொண்டு தேவதைகள் மாதிரி நிற்கும் அவர்களைப் போய்ச் சாபக்கேடு என்று நல்ல பார்வை உள்ள கண் படைத்த யாராலாவது சொல்ல முடியுமா, என்ன?

முன்னே நிற்கும் ஆள், அவர்களைப் பார்த்திருக்க மாட்டான்!

ஆனால், அப்படியெல்லாம் எண்ணி அவள் நிம்மதி அடைந்துவிடக் கடாது என்று எண்ணியவன் போல, ''கண்ட சினிமாக் கதாநாயகிகள் கனவுக் காட்சியில் வருகிற மாதிரி, ஜிகினா அலங்காரம் செய்யத் தெரிகிறது! ஒரு கடைக்குப் போனால், எப்படி நாகரீகம் காப்பது என்று ஒரு மண்ணும் தெரியவில்லை!'' என்று தெளிவாகவே முணுமுணுத்தான் அந்த இளைஞன்.

ஜிகினாவா? அவள் அணிந்திருப்பது நல்ல வைரமாக் கும்! அதைக் கூடக் கண்டு பிடிக்கத் தெரியாதவன் எல்லாம் என்னமோ தனக்குத்தான் எல்லாம் தெரியும்

WIN 1 9 8 1

போலப் பேசுகிறானே என்று உள்ளூர ஆத்திரப்படும் போதே, நாகரீகம் பற்றி அவன் பேசியது காதில் விழுந்து, வதனியின் முகம் சினத்தில் சிவந்தது!

அப்படி அநாகரீகமாக அவள் என்ன செய்து விட் டாளாம்? அவனை இடித்துத் தள்ளிக் கொண்டே முன்னே சென்று விட்டாள்?

''போய் விடலாம்!'' என்று கிசுகிசுத்த சௌமினியின் கை இழுப்பை அலட்சியப்படுத்தி, ''ஹல்லோ மிஸ்டர், என்ன பேச்சு ரொம்ப அதிகப்படியாகப் போகிறது? இங்கே நாகரீகம் இல்லாமல் என்ன நடந்து விட்டதாம்?'' என்று ஆத்திரத்துடன் வினவினாள் மதிவதனி.

அப்போதும் நகராமலே, ''நாகரீகம் பற்றி ஏதாவது தெரிந்திருந்தால், இந்தக் கேள்விக்கே இடம் இருந் திராதே!'' என்றான் அவன் ஏளனமாக.

''போகட்டும்! எனக்குத்தான் எதுவும் தெரியவில்லை! நீங்கள்தான் அதில் டாக்டர் பட்டமே வாங்கி இருப்பீர்கள் போல இருக்கிறதே! எடுத்துச் சொல்வதுதானே?'' என்றாள் அவளும் அதே ஏளனத்துடன். ''ஒருவேளை, சொல் வதற்கு ஒன்றும் இல்லையோ, என்னவோ?''

''நான் சொன்ன எல்லாவற்றையும் எடுத்து வைத்து விட்டு, விலையைக் கணக்குப் போடுங்கள்!'' என்று கடைக் காரரிடம் சொல்லிவிட்டு, அவள் புறமாகத் திரும்பினான், முன்னே நின்றவன். ''இல்லாமல் என்ன பெண்ணே! ஒரு கடையில் கூட்டமாக இருந்தால், வந்த வரிசைப்படி நின்று பொருட்களை வாங்குவது, மரபு! ஒருவர் பொருட் களை வாங்கிக் கொண்டிருக்கும்போது, இடையில் புகுந்து குட்டை குழப்பாமல், அவர் வாங்கி முடித்த பிறகு, பின்னே வந்தவர் வாங்குவதும் அப்படித்தான். இதில் எந்த

நாகரீகத்தை நீ கடைப்பிடித்தாய் என்று உனக்கே தெரிந்தால், சொல்ல முடியுமா?'' என்று நக்கலாகக் கேட்டான் அவன்!

கால் பெருவிரலைத் தரையில் அழுத்தி முகச் சிவப்பை அடக்க முயன்றவாறே, அவசரமாக யோசித்து, ''எதையும் இல்லைதான்! ஆனால், அப்படிப் பார்த்தால் பெண்களுக்கே முன்னிடம் கொடுப்பதும் நாகரீகம்தான் தெரியுமா? நீங்கள் அதைக் கடைப் பிடித்தீர்களாக்கும்?'' என்று கேட்டாள் மதிவதனி.

சொல்லும்போதே, அவளுக்குப் பிடிக்கவில்லைதான். பஸ் பயணங்களில் யாரேனும் எழுந்து இடம் கொடுத்தாலே அவளுக்குப் பிடிக்காது! 'ஏன்? இவனைப் போல எனக்கும் கால்கள் இல்லையா? நிற்கத்தான் முடியாதா?' 'ஆணுக்குப் பெண் இளைப்பில்லை காண்' என்று அன்றே பாரதியார் எழுதி வைத்திருக்கிறாரே, அப்படி இருக்க, கால் ஒடிந்து விழுந்து விடுவாள் போல, அவளுக்கு மட்டும் என்ன சலுகை, என்பாள்.

அதைச் சொல்லிச் சண்டை போட மாட்டாளே தவிர, அப்படித் தரும் இடத்தில் உட்காரவும் மாட்டாள். மரியாதையாகவே மறுத்து விடுவாள்!

ஆனால், இப்போது இந்தச் சண்டைக்காரனின் வாயை அடைக்க வேறு ஒன்றும் தோன்றாததால், மனமற்றுத்தான் என்றாலும், அதைத்தான் சொல்ல வேண்டியதாயிற்று!

ஆனால், ''என்னது? எந்தப் பெண்களுக்கும்மா?'' என்று நக்கலாகவே திருப்பிக் கேட்டான் அந்த இளைஞன். ''எதிலும், நாங்களும் ஆண்களுக்குச் சமம் என்று போட்டி போடுகிறீர்கள்! பல சமயம் மிஞ்சிக்கொண்டு வேறு

போகிறீர்கள்! உங்களுக்கு முன்னிடமா? அதெல்லாம், பழைய காலத்து மெல்லியலாரான பெண்களுக்குத்தானே தவிர, நிச்சயமாக உங்களுக்கில்லை!'' என்று முடித்தான்.

அவளுக்கே ஓரளவு அந்த எண்ணம் இருந்ததால், மதியும் அவன் பேச்சை மறுத்துப் பேசவில்லை! அத்தோடு, அடுத்த காரணத்தையும் அவள் கண்டு பிடித்திருந்தாள்.

எனவே அதைச் சொன்னாள். ''எந்த நேரத்தில் எது முக்கியம் என்று அறிந்து, அதற்கேற்ப நடந்து கொள்வதும் கூட, நாகரீகத்தில் சேர்த்திதான். தெரியுமா, சார்! இந்தக் கற்பூரம் ரொம்பவும் சீக்கிரமாகவே அவசியம் என்றுதான் நாங்களே ஓடி வந்தோம்! நீங்கள் ஒதுங்கிக் கொண்டிருந்தால், அப்போதே, வாங்கிக் கொண்டு சென்றும் இருப்போம்! இப்போது, தாமதமாகி விடும்!'' என்று கைக்கடிகாரத்தைப் பார்ப்பது போலப் பாவலா செய்தாள் மதிவதனி.

''ஏன்? அவசரம் உங்களுக்கு மட்டும்தானா?'' என்றவன், தானும் கைக்கடிகாரத்தைப் பார்த்து, ''சரியானபடி பார்த்தால், எனக்குமே, இப்போது ஐந்து நிமிஷம் தாமதம் தான்!'' என்றபடி கடைக்காரர் பக்கம் திரும்பினான் அவன். ''என்ன எல்லாம் தயாரா?'' என்று அவரிடம் கேட்டான்.

''என்ன கடைக்காரர், இனியாவது எங்களுக்கு எடுத்துத் தரலாமில்லையா?'' என்றாள் மதிவதனி சலித்த குரலில்.

குரல் மாறுதல் அவனுக்காக!

ஆனால், ''இரண்டு பேருக்குமே சாமான் எடுத்து வைத்து விட்டேன்! நீங்கள் சண்டை போட்டு முடித்து விட்டால், பணத்தைக் கொடுத்துவிட்டுப் பொருளை எடுத்துப் போகலாம்!'' என்று சற்றுக் கிண்டலாக கடைக்காரர்

கூறியது, மதிவதனிக்கு இன்னமும் எரிச்சலைத்தான் அதிகமாக்கியது!

எரிச்சலோடு காசை டொப்பென்று வைத்தால், அது உருண்டு கீழே விழுந்து, அது வேறு ஆத்திரமூட்டியது.

உருண்டு ஓடிய காசை, அந்த வில்லன் முன்னிலையில் ஓடிச் சென்று எடுக்க வேண்டிய கட்டாயம் வேறு!

நல்லவேளையாக சௌமினி காசை எடுக்க ஓடினாள்.

அதே சமயம், எதிர்ப்புறமாகக் காரை நிறுத்திவிட்டு, இறங்கி வந்த ஓர் இளைஞன். அவளைப் பார்த்து முகம் மலர, ''சௌமினி! சௌமினிதானே, நீங்கள்? கல்யாணப் பெண்ணுக்குச் சொந்தம்? என்னை நினைவிருக்கிறதா?'' என்று ஆவலாகக் கேட்க, ''ம். மிஸ்டர் ரஞ்சன்!'' என்று வெட்கத்தோடு கூறி, முகம் சிவந்தாள் சௌமினி!

அதற்குள் நெடியவன் கடையில் பணம் கொடுத்து விட்டிருக்க, ''சார், இரண்டு ரூபாய் மிச்சத்துக்கு, என்னிடம் சில்லரை இல்லை. அவர்களிடம் வாங்கிக் கொள்ளுங்கள்!'' என்றார் கடைக்காரர்.

அதற்குள், ரஞ்சன், சௌமினி பேச்சை அவனும் கவனித்திருந்ததால், உதட்டோரம் ஓர் ஏளன வளைவுடன், ''ஒன்றும் வேண்டாம்! இந்தத் திருமணத்தின் பெண் வீடுதான் போலத் தெரிகிறது! எத்தனையோ கொடுப்பதில், இதுவும் சேர்த்து விட்டுப் போகட்டும்! இந்தக் கணக்கிலேயே, அதையும் சேர்த்து, எடுத்துக் கொள்ளுங்கள்!'' என்று, அர்ச்சனைக்கான பொருட்கள், மாலை, வஸ்திரம் எல்லாம் அடங்கிய பையை வாங்கிக் கொண்டான் அவன்!

பையை அய்யரிடம் கொடுத்து, ''நீங்கள் பூஜைக்கு வேண்டிய ஆயத்தங்களைச் சற்று வேகமாகச் செய்

யுங்கள். மாப்பிள்ளைப் பையன் வந்ததும், அர்ச்சனையை மட்டும் செய்து கிளம்புகிற மாதிரிப் பண்ணுங்கள்! இப் போதே, தேவையற்றுக் கொஞ்சம் தாமதமாகி விட்டது!'' என்றான்.

அவன் விடுவதாக இல்லை போலும்! அத்தோடு, இப்போது மாப்பிள்ளை வீட்டுக்காரன் என்கிற கொம்பு வேறு இருக்கிறதே! திருப்பிக் கொடுக்க முடியாதே!

ஆனாலும், என்ன ஏளனம்!

நேர் மாறாக ''நீங்கள் எல்லாரும் வருவீர்கள் என்று நினைத்துக் கொண்டே வந்தேனா, பார்த்தால் தேவதை மாதிரி கண்ணெதிரேயே நிற்கிறீர்கள்!'' என்று உற்சாகம் காட்டி வழிந்தான் வந்தவன்.

இன்னும் அதிகமாக முறுவலித்து, ''நாங்கள் எல் லோரும் மத்தியானமே வந்து விட்டோம். ஆலத்தித் தட்டு எல்லாம் அடுக்க வேண்டும் என்று!'' என்றாள் சௌமினி.

இன்னமும் முகம் மலர்ச்சியுற, பற்கள் அத்தனையும் காட்டி, ''ஓ! அப்படியானால், நீயும், சாரி, நீங்களும் ஆலத்தி எடுப்பீர்கள்தானே?'' என்று கேட்டான் அந்த ரஞ்சன். ''திருமணம் சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகள் எல்லாவற்றிலும், மைத்துனிமார் ஆலம் சுற்றுவதுதான் மிகவும் அழகானது!'' என்று அறிவிப்பு வேறு!

அப்பட்டமான வழிசலை உணர்ந்து, ஒரு முறுவ லோடு பேச்சை முடித்துவிட்டு வருவாள் என்று பார்த் தால், அவனுக்கு மேல் வழிந்து, ''நான் எல்லாமே மோகனா வுக்குத் தங்கை முறை இல்லை! என் பெரியம்மா மகள், கல்யாணப் பெண்ணுக்கு மாமா மகள். இன்னும் ஏதோ முறையிலும் சொந்தம் என்று நெருங்கிப் பழகுவதால்,

அத்தையும் அழைத்து, நாங்களும் எல்லோருமே முதலிலேயே வந்து விட்டோம்! நிச்சயத்துக்கு வந்த மாதிரி'' என்று விம்பார் போட்டு விளக்கிக் கொண்டிருந்தாள், சௌமினி!

நேரமாகிறதே., அங்கே அத்தை கடுப்பாகப் போகிறாளே என்று உள்ளூரப் பொறுமையிழந்தாலும், இந்த உரையாடலில் குறுக்கிட்டு, 'வா' என்று சித்தி மகளை அழைப்பதும் மதிவதனிக்குச் சரியாகப் படவில்லை!

தாமதம் பற்றி நினைவுபடுத்தி அழைப்பது, அந்த இளைஞன் முன்னிலையில் சௌமினியைத் தாழ்த்திக் காட்டுவது போல ஆகாதா? அவளே சீக்கிரமாகப் பேச்சை முடித்துக் கொண்டு வந்தால் நன்றாக இருக்கும்!

சும்மாவே, குறுக்கிட முடியாமல் அவள் தவிக்கையில், ''என்னவோ குடி முழுகிப் போகிற அவசரம்., சீக்கிரமாகப் போக வேண்டும் என்று அளந்தாயே! இப்போது ரசனையில் நேரம் பற்றிய நினைவே இல்லை போலத் தெரிகிறதே!'' என்று எரிகிற தீக்கு எண்ணெய் வார்த்தான் பழைய தகராறுக்காரன்.

பெரீய்ய மாப்பிள்ளை வீட்டுக்காரன்!

''இருவர் உரையாடும்போது, கூப்பிடாமல் குறுக்கிடுவது நாகரீகம் இல்லை என்று நின்றால், அதற்குப் பேர் இப்படியா? ஏன்? நீங்களும்தான், அப்போதே ஐந்து நிமிஷம் தாமதம் என்று பொரிகிற பாப் கார்னாகக் குதித்தீர்கள்! இப்போது பார்த்துக்கொண்டு சும்மா நிற்பதன் காரணம், ரசனை என்று, நீங்கள் சொன்ன பிறகுதானே, எனக்கே தெரிகிறது!'' என்று நக்கலாகப் பதில் கொடுத்தாள் மதிவதனி.

''ரசனையா? குடும்பத்தில் இன்னொருவன் முட்டாளாக்கப் படுவதைப் பார்த்தால், ரசிக்கவா தோன்றும்? கண்ணறாவி!'' என்று வெடுவெடுத்துவிட்டு, ''நீங்கள் எல்லாம் சீக்கிரமாகத் தயார் பண்ணுங்கள், அய்யர்!'' என்று உரக்கக் கூறினான் அவன்.

அந்தக் குரலில் திரும்பிப் பார்த்த ரஞ்சனிடம், ''என்னடா, உதயன் கிளம்பிவிட்டானா இல்லையா? ஒரு நேரம் சொன்னால், அதைக் கடைப்பிடிக்க வேண்டாமா?'' என்று எரிச்சலைக் குரலில் காட்டியே கேட்டான்.

அங்கே ஒருவன் நிற்பதே அப்போதுதான் நினைவு வந்ததுபோல, சௌமினியிடம் ''அப்புறம் பார்ப்போம்!'' என்று பல்லைக் காட்டித் தலையாட்டிவிட்டு, மற்றவனிடம் விரைந்தான். ''அவன் அப்போதே ரெடி, வசி! விட்டால், பையன் கல்யாண மண்டபத்திற்கே போய் உட்கார்ந்து விடுவான்! ஆனால், ஏதோ தட்டு அடுக்கு கிறோம் என்று அத்தைதான் நேரமாக்கிக் கொண்டிருக் கிறார்கள்!'' என்று விளக்கம் அளித்தபடி.

''போவோமா?'' என்று சித்தி மகளிடம் சென்றாள் மதிவதனி.

''ஓ!'' என்று அவளோடு இரண்டெட்டு வைத்த சௌமினி நின்று, ''காசு...'' என்று திரும்பினாள்.

''அதை எடுக்காதே!'' என்றாள் மதிவதனி அடிக் குரலில்.

''கடைக்கு...?''

''அவர்களே கொடுத்துவிட்டார்களா! இந்தக் காசைப் பார்த்து அவர்களே எடுத்துக் கொண்டால், கணக்குத் தீர்ந்தது! இப்போது திரும்பிப் போய், அந்தக் காசை எடுத்தால், நப்பித் தனமாகத் தோன்றும்!''

"வேறு யாராவது எடுத்து விட்டால்?"

"போகிறது! நாம் ஒன்றும் அடுத்தவர் பணத்துக்கு அலையும் நப்பிகள் அல்ல என்பதுதான் இப்போது முக்கியம். அதனால், பேசாமல், திரும்பிப் பாராமல் வா!" என்று சற்று அழுத்தமான குரலில் மதிவதனி கூற, மற்றவள் அதற்குப் பணிந்து நடந்தாள்.

அவளது இயல்பு அதுதான். தகராறு பண்ணத் தைரியம் கிடையாது! பெரும்பாலும் விட்டுக் கொடுத்து விடுவதும் இனிமையாகச் சிரித்த முகமாகப் பழகுவது மாக, 'நீயும் சௌமி போல இருந்தால் என்னடி' என்று அம்மா கூடக் கூறுவதுண்டு! அப்புறம் எல்லோரும் தலையில் மிளகாய் அரைத்து விடுவார்கள் என்று வதனி பதிலிறுப்பதும் வழக்கமே!

ஆனால், அதென்ன இன்னொருவன் முட்டாளாக்கப் படுவது?

அதாவது, இந்தத் திருமணத்தின் மணமகன் உதயன் முட்டாளாக்கப்பட்டதாக, அவன் முட்டாளாக்கப் பட்ட தால்தான், மோகனா, உதயன் திருமணம் நடப்பதாகச் சொல்லுகிறான்!

அப்படியானால், அந்த 'வசி' என்று அழைக்கப் பட்டவ னுக்கு இந்தத் திருமணம் பிடிக்கவில்லை!

அருமையான காதல் திருமணம் என்று, நிச்சயத் தின்போது மோகனாவை எவ்வளவு கேலி செய்தார்கள்!

ஒருவருக்கொருவர் சாக்லேட் கொடுத்ததும், மோதிரம் போடுகிற சாக்கில் கையைப் பிடித்ததும், கேலியும் சிரிப்பு மாக எவ்வளவு சந்தோஷமாக இருந்தது!

இந்த 'வசி'யை அன்று பார்க்கவில்லை!

வரவில்லை போலும்! வந்திருந்தால், திருமணத் தையே நிறுத்தியிருப்பானோ?

அவனுக்குப் பிடிக்காதது, இந்தத் திருமணம் மட்டுமா? அல்லது காதல் என்றாலே கடுப்பவனா?

அல்லது, இந்தக் குடும்பத்தோடு சம்பந்தம் வைப்பது தான் பிடிக்கவில்லையா?

அப்படியென்ன அவர்கள் குடும்பம் அவனுக்குக் குறைவாகத் தெரிந்துவிட்டது?

மனதில் குழப்பமும், எரிச்சலுமாக, யோசித்தபடியே சென்றால், அங்கே மதிவதனிக்கு ஆத்திரமூட்டும்படியாக இன்னொன்று நடந்து கொண்டிருந்தது!

அத்தையின் மேற்பார்வையில், மறுபடியும் தீக்குச்சியை எடுத்துக் கொண்டிருந்தாள், அத்தை வீட்டு வேலைக்கார ஆயா!

''ஏய்.. ஏய்.. நிறுத்து!'' என்று அங்கே ஓடிச் சென்று, தீப்பெட்டியைப் பிடுங்கினாள் மதிவதனி. ''அபசகுனம் என்று சொல்லியும், நான் கற்பூரம் வாங்கி வருமுன், என்ன அத்தை அவசரம்?'' என்று ஆத்திரமாகக் கேட்டாள்.

''அடபோடி பொண்ணே, நீயொரு பக்கம் அபசகுனம், ஆட்டுக்குட்டி என்று கொண்டு! பிறந்த அன்றைக்கு எழுதினது! இன்றைக்கு இந்த விளக்குகளை ஏற்றி அணைப்பதிலா கெட்டுவிடப் போகிறது?'' என்றாள் சுந்தரி அலட்சியமாக.

''ஆனாலும் என் சினேகிதி வீட்டில் அப்படிச் சொல் லித்தான், இந்த மாதிரிக் கற்பூரம் வைக்கச் சொன்னார்கள்! மோகனாவுக்கு நல்லது என்றுதானே சொல்கிறேன்! அதைக்கூடக் கேட்கக் கூடாதா?'' என்று மதிவதனி வருத்தமாகக் கூறவும், அந்தம்மாளின் முகமும் இளகியது!

''அச்சோ! கேட்கக் கூடாது என்று இல்லை, கண்ணு! அங்கே மாப்பிள்ளை வீட்டிலே இருந்து கிளம்பி விட்டார்களாம். தகவல் வந்தது! உன்னையும் காணோமா? கட்டிக் கற்பூரம் கிடைக்கவில்லையோ என்று, ஏற்றச் சொன்னேன். கற்பூரம் கிடைத்து விட்டால், மடமட வென்று, நீ சொன்னது போலச் செய்யேன்! மாப்பிள்ளை வந்து காத்து நிற்கக் கூடாது என்பதுதான், எனக்கு! வேறென்ன?'' என்று அனுமதி கொடுத்ததோடு நில்லாமல், ''ரொம்ப அலைந்தாயா, செல்லம்? முகம் வாடிக் கிடக்கிறதே! குளிர்ச்சியாக எதையேனும் குடிக்கிறாயா? கொண்டு வரச் சொல்லுகிறேன்!'' என்று கனிவாகவும் பேசினாள்.

''அவர்கள் இன்னும் பிள்ளையார் கோயிலுக்கே வந்து சேரவில்லை, அத்தை! மாப்பிள்ளை வந்து பிள்ளை யாருக்குப் பூஜை செய்து முடித்துவிட்டு இங்கே வருமுன், நான் எல்லாம் தயாராக வைத்து விடுகிறேன்'' என்று விட்டு, கற்பூரத்தைக் கொஞ்சம் கொஞ்சமாகப் பிட்டு, பிட்ட துண்டுகளை, விளக்குத் திரிகளின் எரிமுனையில் அழுத்தமாக அப்பி வைத்தாள்.

வேகமாகவும்!

அந்த வசி என்பவனின் ஏளனப் பார்வையை இன்னொரு தரம் சந்திப்பதற்கு, அவளுக்கு மட்டும், ஆசையா, என்ன?

அதே சமயம் ஒன்று மட்டும், அவளுக்கு நிச்சயம்!

திருமணச் சடங்குகளில் ஒரு சிறு தாமதம், தவறு ஏற்பட்டாலும், அந்த வசி, அவர்களை ஏளனமாகப் பார்ப்பது என்னவோ, சர்வ நிச்சயம் என்று அவளுக்குத் தோன்றியது!

கூடவே, அந்த ஆள் என்ன நினைத்தால் எனக்கென்ன? நான் ஒன்றும் அந்த ஆளுக்காக, இப்போது அவசர அவசரமாக, இதைச் செய்யவில்லை! திருமண நிகழ்ச்சிகளில், சிறு குறையும் நேர்ந்து விடக் கூடாது என்று மோகனாவுக்காகவும், அத்தைக்காகவும்தான், இந்த வேகவேலை என்று எண்ணியவாறே, கடைசி விளக்குத் திரியில் கற்பூரம் வைத்து முடித்தாள் மதிவதனி!

# 3

மற்றவர்களைப் போலவே, மதிவதனியும் விரும்பி வேண்டிக்கொண்ட விதமாக, பாண்டு வாத்தியம் முழங்க மாப்பிள்ளை வீட்டார், மண்டபத்துக்கு வந்ததில் ஆகட்டும், வரிசையாகப் பெண்கள் மணமகனுக்கு ஆலம் சுற்றியதில் ஆகட்டும், ஒரு குறையும் சொல்வதற்கின்றி, எல்லாம் நல்லபடியாகவே நடந்தன.

ஆலத்தி எடுப்பதற்காக முதலில் முன் வந்திருந்த சற்று மூத்த தலைமுறைகூட, மதிவதனி ஜாடையாகக் கொடுத்த யோசனையின்படி, அவரவருடைய சின்னச் சின்ன பேத்திகள் கையில் தட்டைக் கொடுத்து, அவர்களும் பிடித்துக்கொண்டு சுற்றியது. மனதை ஈர்த்து எல்லோரையும் மகிழ்விப்பதாகவே அமைந்தது! ஆலத்தி எடுத்ததற்கான பரிசைத் தங்கள் பிஞ்சுக் கைகளால் வாங்கிக் கொண்டதும், அப்படித்தான்!

எல்லோர் முகங்களும் மலர்ந்த விதத்தில், இனியும் எங்கள் குடும்பத்தைக் குறை சொல்ல முடியுமா என்பது

போல ஒரு சவால் பார்வையை அந்த வசியிடம் செலுத் தவும் மதிவதனியால் முடிந்தது!

கண்கள் லேசாக இடுங்கியது தவிர அவனிடம் மாற்ற மில்லை!

கடைசி திருஷ்டி சுற்றி, ஆலம் கரைத்த நீரில் மணமக னுக்குப் பொட்டு வைத்து, ஆலநீரை வெளியே கொட்டச் செல்லும்வரை, எல்லாம் நன்றாகவே நடந்தது!

அதன் பிறகும், மற்ற யாருக்கும், எதுவும் தோன்ற வில்லைதான்! ஆனால், தப்புக் கண்டுபிடிப்பதற்காகவே தேடிக் கொண்டிருப்பவர்களுக்குத் தெரியும்தானே?

ஆலம் சுற்றி முடித்ததும், வருங்கால மருமகனுக்கு தங்கச் சங்கிலியும், மாலையும் மாமா அணிவிக்க, மைத் துனன் மோதிரம் போட்டுக் கையைப் பிடித்து உள்ளே அழைத்துச் செல்கிற, மாப்பிள்ளை அழைப்பின் கடைசி யும் முக்கியமானதுமான நிகழ்ச்சி!

மாமனார் மாலை போடும்போது, இவ்வளவு நேரமும் பின்னணியில் இனிமையாகக் கேட்டுக் கொண்டிருந்தது. ‘டேப்’பிலிருந்து வந்தது என்று அறியாமல், யாரோ ‘‘கெட்டி மேளம்’’ என்று சந்தோஷமாகக் குரல் கொடுத்தார்கள்!

‘டேப்’ எங்கிருந்து, திடீரென்று கேட்பதற்கிணங்க கெட்டி மேளம் வாசிக்கும்?

நல்லவேளையாக, மதன் மோதிரத்தை அணிவித்துக் கையைப் பிடித்துக் கூட்டிச் செல்லவும், ‘‘ஒற்றை மோதி ரத்தைப் போட்டுப் பிடித்துக் கொண்டு போகிறான்ப்பா!’’ என்றும், ‘‘அவன் பிடிப்பானேன்? இவன்தான் தானாகவே ஓடுகிறானே!’’ என்று பலவிதமாகக் கேலிப் பேச்சுகள் எழ, ‘கெட்டிமேளம்’ கேட்ட குரல், அதில் அடங்கிப் போயிற்று!

அப்பாடி என்று ஆறுதலுற்றபோதும், ஒரு சந்தேகத்துக்கு ஓரக் கண்ணால் அந்த வசியைப் பார்த்தால், அவனது கண்களும் அதே ஐய உணர்வுடன், மண்டபத்தை வலம் வந்து கொண்டிருந்தன.

அத்தோடு நில்லாமல், தேடியதைக் கண்டு பிடித்தும் விடவே, மதிவதனிக்கு அறிமுகமாகி விட்டிருந்த ஏளன வளைவு, மீண்டும் அவனது உதட்டோரத்தில் வந்து ஒட்டிக் கொண்டது!

அது மட்டுமல்ல!

அந்த ஏளன வளைவுடனேயே, 'என்ன' என்பது போல அவளை ஒரு பார்வை பார்த்துவிட்டே அவன் பார்வை வேறு பக்கம் திரும்பியது!

முன்னெப்போதையும் விட, அத்தையின் சிக்கன நடவடிக்கைகளில் அதிக ஆத்திரம் கொண்டதோடு, அவமானமாகவும் உணர்ந்தாள் மதிவதனி!

அந்த வசியின் பார்வையில், குடும்பத்தைக் கீழிறக்கி விட்டாளே!

இந்த அத்தை, இன்னும் என்னென்ன பண்ணப் போகிறாளோ?

அத்தை சுந்தரி அடுத்து என்ன செய்யப் போகிறாள் என்று மதிவதனிக்கு உடனேயே தெரிந்து போயிற்று!

யோசித்தபடி நின்றவளின் கையிலிருந்து ஆலத்தி எடுத்ததற்காக மணமகன் கொடுத்த பரிசை யாரோ பிடுங்கவும், திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தால், சுந்தரி அத்தை தான்!

''என்ன அத்தை?'' என்று மதிவதனி சற்றுத் திகைப்புடன் கேட்கவும், ''உள்ளே என்ன வைத்திருக்கிறார்கள்

என்று பார்க்கிறேன்!'' என்று, பரிசுப் பெட்டியை அழகாகச் சுற்றியிருந்த அலங்கார ரிப்பனையும், காகிதத்தையும் அவசரமாகப் பிய்த்தெறிந்தாள், பெரியவள்.

''ஷ், அத்தை! எல்லாம் நம் அறைக்குள் போய், எடுத்துப் பார்க்கலாம்! யாராவது பார்த்தால், இதற்காகப் பறக்கிற மாதிரி அசிங்கமாகத் தோன்றும்...'' என்று அடிக்குரலில் கூறி அத்தையைத் தடுக்க முயன்ற சின்னவளுக்குத் தோல்விதான்.

தோல்வி அதில் மட்டுமல்ல!

தவிப்புடன் சுழன்ற விழிகளில், உதட்டோடு ஒட்டியே வைத்து விட்ட மாதிரியான ஏளனப் பிதுக்கலைக் காண வும், அவளுக்குப் பூமிக்குள்ளேயே புதைத்து விடலாம் போல இருந்தது!

பிரித்தது அத்தைதான் என்றாலும், அவளும் ஆவ லாகக் கூட நின்றதாகத்தானே தோன்றும்?

அத்தோடு, அத்தையோ அவளோ, இந்தக் குடும்பம் மோசம் என்றுதானே நினைப்பான்!

எண்ணமிடும்போதே, மதிவதனிக்கு எரிச்சலும் உண் டாயிற்று!

எவனோ ஒருத்தன்! அவன் என்ன எண்ணினாலும் அவளுக்கென்ன வந்தது!

இன்னொரு தரம், அவனோடு பேசக்கூட நேராமல் போகலாம்! எனவே, அவன் என்ன நினைப்பானோ என்று மனதை உழப்பிக் கொள்வது மடத்தனம்!

இப்படியெல்லாம் நினைத்து வதனி தன் மனதை அமைதிப்படுத்திக் கொண்டிருக்கும்போது, ''அட கிறிஸ்டல்!'' என்றாள் சுந்தரி ஆச்சரியமாக!

(198)

ஒட்டிப் பாய்ந்த இரு அழகான கிறிஸ்டல் டால்பின்கள்! மற்றது மறந்து, ஆவலாக அதைத் தொட்டுப் பார்த்தாள் மதிவதனி!

மோதிரம் போடுகிற அன்று உதயனுக்குக் கொடுக்க ஒரு பரிசு வாங்கவென்று எல்லோரையும் கூட்டிக் கொண்டு, மோகனா ஊரெல்லாம் அலைந்தாள். கிறிஸ்டல் கடைகளிலும் பார்த்தார்கள்.

விலையைக் கேட்டுவிட்டு, "அவ்வளவு விலை கொடுத்த பொருள் போலத் தோன்றாது" என்று சொல்லிவிட்டு, வேறு எதையோ வாங்கிப் பரிசளித்தாள் அவள்.

இப்போது, அவளுடைய தாயாரும் அதையே சொன்னாள். "வெறும் கண்ணாடிச் சாமான்! இதற்குக் கொடுத்த விலைக்கு, வெள்ளியில் வாங்கிருந்தால், உருப்படியாக இருந்திருக்கும்! என்றைக்கும் காசு!"

இதுவே பிடித்திருக்கிறது என்றால், உலகம் தெரியாமல் உன் அம்மா வளர்த்து விட்டாள் என்பாள் அத்தை! எரிச்சல் வரும்!

எதற்கு வீண் வம்பு என்று அவள் வாய் மூடி நிற்க, "சரிசரி, உடைந்து விடாமல் உள்ளே எடுத்து வை! எனக்கு ஆயிரம் வேலை! இங்கேயே நிற்க முடியாது!" என்று அவள் கையில் டால்பினைத் திணித்துவிட்டு, வேறெங்கோ விரைந்தாள் சுந்தரியம்மாள்.

என்னவோ நான்தான் நின்று இதைப் பிரித்துப் பார்க்கச் சொன்ன மாதிரி என்று எண்ணியவாறே, குனிந்து, அத்தை பிரித்துப் போட்ட அலங்காரக் காகிதத் துண்டுகள், ரிப்பன் முதலியவற்றைப் பொறுக்கி எடுத்தாள் மதிவதனி.

"பட்டுக் கட்ட எப்போது வரலாம் என்று, மணமகனுடைய அம்மா கேட்டுவரச் சொன்னார்கள்!" என்ற

குரலில் தூக்கிவாரிப் போட்டுக் கொண்டு அவள் நிமிர, கையிலிருந்த பொருட்கள் சிதறி விழலாயின.

கிறிஸ்டல் டால்பினும்!

ஆனால், அது கீழே விழுமுன் பிடித்துவிட்ட அந்த வசி, ''கிறிஸ்டலைக் கொஞ்சம் கவனத்துடன் கையாள வேண்டும்! உடைந்து போகும். அவர்கள் சொன்னது போல, வெள்ளியாக இருந்தால், பிரச்சினை இல்லை என்பதோடு, எங்களுக்கும் இதை விட விலை குறைவாக முடிந்திருக்கும்! நசுங்கினாலும் உங்களுக்கும் காசு மதிப்புக் குறையாது! ஆனால், இது பழுதானால் பேரீச்சம் பழம் கூடக் கிடைக்காது!'' என்று கூறி, டால்பினை அவளிடம் கொடுத்தான்!

இப்போதும், முகத்தில் அதே ஏளனம் காட்டும் உதட்டு வளைவு!

அல்லது, அவனது முக அமைப்பே அப்படித்தானோ? பேச்சை அதற்குச் சரியாக மாற்றிக் கொண்டான் போல! அப்படியானால், இவனுக்கு நண்பர்களே இருக்க மாட்டார்களே, பாவம்!

தன்னிச்சையாக ஓடத் தொடங்கிய எண்ணங்களைக் கட்டுப்படுத்தி, நிகழ்காலத்துக்கு வந்த மதிவதனி, அவன் உடையாமல் மீட்டுத்தந்த டால்பினுக்காக முதலில் அவனுக்கு நன்றி தெரிவித்தாள்.

அடுத்து, ''பட்டுக் கட்டுகிற வேளை, என் அத்தையிடம், அதாவது, மணப்பெண்ணுடைய அம்மாவிடம் கேட்டுச் சொல்கிறேன்'' என்று சுந்தரி சென்ற பக்கமாகத் திரும்பினாள்.

"என்னது? ஒரு நிமிஷம்... மணப்பெண்ணுடைய அம்மா, உன் அத்தையா?'' என்று சிறு வியப்புடன் விசாரித்தான் அவன்.

''ஆமாம். என் அப்பாவுடைய தங்கை! ஏன்?'' என்று சற்று மிடுக்காகவே கேட்டாள் அவள்!

இதில் ஆச்சரியப்பட என்ன இருக்கிறது? அத்தையோ, அவளோ, யார், யாருக்குப் பொருந்தவில்லை? பொருத்தி னாலும், பொருந்தாவிட்டாலும், அவர்கள் குடும்பத்தைப் பற்றி, இவன் என்ன சொல்வது?

''ஒன்றுமில்லை. நான் இங்கேயே நிற்கிறேன். விவரம் கேட்டு வந்து சொல்!'' என்றான் அவன்.

எரிச்சல் வந்தது அவளுக்கு! அதென்ன 'வந்து சொல்' என்று ஒருமைப் பிரயோகம்? மாப்பிள்ளை வீட்டுக்காரன் என்கிற பெருமையா? இதே, அந்த ரஞ்சன் எவ்வளவு மரியாதையாக சௌமினியிடம் பேசினான்! அவள் சின்னவள் என்பதால் இடையிடையே ஒருமையில் பேச வாய் வந்தாலும், உடனே மாற்றிக் கொண்டானே! அவனும் இவனும், வா, போ ஒன்று பழகுகிற சொந்தம் போலத்தான் தெரிகிறது! ஆனால், இவனுக்குத் திமிர் அதிகம்!

அத்தையிடம் கேட்டு, வேறு யாரிடமாவது சொல்லி அனுப்பி விடலாமா என்று யோசித்தாள். பிறகு, அது நன்றாயிராது. வேண்டாம் என்று முடிவு செய்து, அவளே வந்து, ''இன்னும் பத்து நிமிஷங்களில் தொடங்கி விட லாம் என்று அத்தை சொன்னார்கள்!'' என்று, அவன் கேட்ட விவரம் தெரிவித்தாள்.

''நன்றி. பத்து நிமிஷங்களில் சீர்த் தட்டுகளுடன் தயா ராக இருக்குமாறு, என் அத்தையிடம் சொல்லி விடு

கிறேன்!'' என்று, அவனது 'அத்தை'யில் ஓர் அழுத்தம் கொடுத்துக் கூறியவன், ஒரு வினாடி தயங்கி, ''மணமகனுடைய அம்மா, என் அத்தை!'' என்று, ஓர் அரைப் புன்னகையோடு விவரம் தெரிவித்துவிட்டுப் போனான்.

மதிவதனிக்கு அதிர்ச்சி தந்தது, அவனது மாப்பிள்ளை வீட்டு உறவா? அல்லது அவனது புன்னகையா? எதுவாக இருந்தாலும், சற்று நேரம் அவள் திகைத்து நின்றது, நிஜம்!

ஆனால், அந்தப் புன்னகை ஒன்றும் மனமார்ந்து செய்யப்பட்டது அல்ல! பிரியமற்று செய்யப்பட்ட அரைப் புன்னகையே! அதே போல, உறவு முறையும் விருப்பத்தோடு சொல்லப் படவில்லை! சற்று யோசித்து, எப்படியும் தெரியப் போகிற விஷயம்தான் என்ற ரீதியில் சொன்னதுதான்!

இதற்குப் பெரிதாக முக்கியத்துவம் கொடுக்கத் தேவையில்லை என்று அவளுக்கு நன்றாகவே புரிந்தது! ஆனால், உதட்டோரத்தில் ஏளன வளைவின்றி, வரிசைப் பற்கள் லேசாகத் தெரிய, அவன் சிறு புன்னகை புரிந்தது, ரொம்பவே நன்றாகத்தான் இருந்தது!

ஆனால்; அதற்குமேல் ஒன்றுமில்லை!

''மதீ, மதிம்மா...!'' என்று அழைப்புக் குரல் பெண் வீட்டார் தங்கியிருந்த பகுதியில் இருந்து, வெளிவந்தது!

அவளுடைய தாயார் பூமாவின் குரல்! பொறுமையிலும், அம்மா பூமாதேவிதான். மற்றபடி, பக்கத்திலேயே இருக்கும் இந்த அத்தைக்கு ஈடுகொடுத்து, இவ்வளவு காலம் பிரச்சினையின்றி வாழ்ந்திருக்க முடியாது!

''என்னம்மா?'' என்று பதில் குரல் கொடுத்தவாறே, அன்னையின் குரல் வந்து பக்கமாக ஓடிப் போனாள் மகள்.

மகளை ஏற இறங்கப் பார்த்த தாயின் பெருமிதம் முகத்தில் தெரிந்தது! "நலுங்குக்கு முன்னால், முகத்தில் லேசாக 'டச்சப்' மட்டும் பண்ணிக்கொள். அப்புறம், மோகனாவுக்கு நலுங்கு வைப்பவர்களுக்குக் கொடுப்ப தற்கு வெற்றிலை பாக்கு எடுத்து வைக்கவில்லை போலத் தெரிகிறதும்மா! அப்பாவிடம் சொல்லி, நம் காரிலிருந்து பெரிய காஷ்மீர் தட்டு மூன்றையும் எடுத்து வா. அதில் வெற்றிலை, பாக்கு, உருட்டு மஞ்சள் இரண்டு, பூ, பழம் எல்லாம் சேர்த்து, வரிசையாக அடுக்கி வைக்க வேண்டும். நான், சௌமி, கோகியைக் கூப்பிட்டு, மொத்த சாமானும் எடுத்து வைக்கிறேன். எல்லோருமாகச் சேர்ந்து வேகமாக அடுக்கி விடலாம்! முதலில் நீ போய்த் தட்டு களை எடுத்து வா!" என்று அனுப்பினாள்.

அத்தை என்றால், அத்தைதான்! இதெல்லாம் பாரா மலே, அங்கே நேரம் சொல்லியாயிற்றே!

"பத்து நிமிஷத்தில், பட்டுக் கட்ட வரலாம் என்று மாப்பிள்ளை வீட்டில் சொல்லியாயிற்று, அம்மா!" என் றாள் பெண் கலக்கத்துடன்.

அதுவும், அவனிடம்!

"பரவாயில்லைம்மா. அவர்கள் சீர்த்தட்டு கொண்டு வந்து வைத்து, சேலை கொடுத்து, மோகனா அதை மாற்றி வருமுன் எல்லாம் அடுக்கி முடித்து விடலாம்! நீ போய்த் தட்டுகளை எடுத்து வா!" என்று மகளை அனுப்பினாள் பூமா.

சின்னவர்கள் சேர்ந்து தட்டுகளில் தாம்பூலம் எடுத்து வைக்கும்போதே, பூமா நலுங்கு வைப்பதற்குத் தேவை யான பன்னீர், சந்தனம், உதிரிப் பூக்கள், கல்கண்டு,

சுண்ணாம்பு கரைத்த மஞ்சள் நீர் எல்லாம் எடுத்து, தயார் செய்தாள்.

வரலாமா, வரலாமா என்று பத்துப் பத்து நிமிஷ இடைவெளி விட்டு, மாப்பிள்ளை வீட்டார் மூன்றாவது தரம் கேட்கும்போது, மோகனாவும் மேடைக்கு வந்து சேர்ந்தாள்.

பார்லர் அலங்காரத்தோடு சந்தோஷமும் சேர்ந்துகொள்ள, பேரழகியாகத் தோற்றமளித்தாள்.

அவளது கடைக்கண் பார்வையில், உதயன் தலை சுற்றிக் கீழே விழாதது ஆச்சரியமே! கிட்டத்தட்ட விழுந்த மாதிரிதான்!

''மாப்பிள்ளை முகத்தைப் பாருப்பா, 'ஈ...' என்று வேடிக்கையாக இல்லை?'' என்று பக்கத்தில் நின்ற சௌமினியைக் கேட்டால், அவள் வேறு எங்கோ பார்த்துக் கொண்டிருந்தாள்.

ஆனால், பெரியம்மா பெண்ணின் குரலில் உடனே திரும்பி, என்னவென்று கேட்டு, ''ஆமாம். கதைகளில் தேன் குடித்த நரி என்று எழுதுவார்களே, இது போலத்தான் இளிக்குமோ என்னவோ?'' என்று அவள் கூற, அந்த இளம் பெண்களுக்கிடையே, 'கிளுகிளு'வென சிரிப்புச் சத்தம் இனிமையாகப் பரவலாயிற்று!

''ஷ்! மோகனா காதில் விழுந்து, அவளுடைய அவரை 'நரி' என்கிறாயா என்று கோபப்படப் போகிறாள்!'' என்றாள் மற்றொருத்தி.

''ஐய்யோ கோகிக்கா, இதே வார்த்தை, நிச்சயத்தன்று மோகனாக்கா சொன்னதுதான்! மோதிரம் போடும்போது, அவர் முகம் அப்படி இருந்ததாம்! சொன்னாள்! அத

னால்தான் எனக்கே சட்டென்று அந்த வார்த்தை வாயில் வந்தது!'' என்று சௌமினி விளக்க, மறுபடியும் சிரிப் பலை எழுந்தது!

அதற்குள், நாத்தனார் கொடுத்த சேலைத் தாம் பாளத்தை வாங்கிக் கொண்டு, ''இருங்களடி. அவரவர் திருமணம் வருமல்லவா? அப்போது பார்த்துக் கொள்ளு கிறேன்!'' என்று சந்தோஷமாக மிரட்டியவாறே, உடை மாற்றும் அறைக்குக் கிளம்பினாள் மோகனா.

ஒன்றுக்குள் ஒன்றான உறவு என்பதோடு, ஒரே பள்ளி, கல்லூரி என்று படித்ததும், இந்தப் பெண்கள் தடை யற்றுப் பேச வசதியாக இருந்தது!

மதிவதனியைக் கடக்கையில், ''மதி, அத்தையை வரச் சொல்லு. சீக்கிரமாகச் சேலையை மாற்ற வேண்டும்!'' என்ற நாத்தனார் பெண்ணின் ரகசியக் குரலில், பூமா, அவள் கூடவே ஓடிப் போனாள்!

பெண்ணுக்கு நலுங்கிடும் சடங்கு நல்லபடியாக நிறைவேறியது.

இரவு விருந்தும் அப்படித்தான்.

ஒரு சின்ன சலசலப்பாக, மனைவியின் காதுக் கடிப் புக்குப் பணிந்து, மணப் பெண்ணுடைய தந்தை பரிசாரகர் களிடம் பக்கத்திலேயே நின்று, ''கொஞ்சமாக வை. அரைக் கரண்டி வை'' என்று சொல்லலானார்.

உணவருந்திக் கொண்டிருந்த இரண்டு மூன்று பேர் முகம் சுளிப்பதைக் கவனித்து, அங்கே ஓடிப்போன சுதர்சனம், உடனே விஷயம் புரிந்து, தங்கை கணவரைத் தள்ளி அழைத்துச் சென்று, ''சாப்பாடு செய்து வைத்தது நிறைய இருக்கிறது, அத்தான். எல்லோரும் நன்றாகச்

சாப்பிட்டால்தான் காலி ஆகும். அப்படி இல்லாமல், மிச்சம், மீதி என்று ஆனால், இந்த ராத்திரியில் அதைத் தூக்கிக் கொண்டு எங்கே கொடுப்பது என்று அலைய முடியாது! இங்கேயே வைத்திருந்தாலும் கெட்டு, நாற்ற மடிக்கும்! பரிமாறுகிறவர்களே, இருப்புக்குத் தக்கப் பார்த்துப் பரிமாறுவார்கள். நீங்கள் வாருங்கள்!'' என்று கூற, அதன் பிறகு பந்தி பிரச்சினையின்றி நடந்தது!

காலையில் திருமணம் என்றதால், மண்டபத்திலேயே தங்கி விட்ட நெருங்கிய உறவினருள், மதிவதனியின் குடும்பமும் ஒன்று! எப்போதும் போல, சௌமினியும் அவளோடு அங்கேயே இருந்தாள்.

மற்றவர்கள் காலையில் வருவதாகச் சொல்லி விடை பெற்றுக் கிளம்பினர். சென்றவர்களை வழியனுப்பி விட்டுத் திரும்புகையில், மற்றவர்கள் அறைக்குச் சென்று விட, சுற்றிப் பார்த்தவாறே, மதிவதனி மெல்ல நடந்தாள்!

சற்று முன், கூட்டமும் கலகலப்புமாக இருந்துவிட்டு, இந்த அமைதி விசித்திரமாக இருந்தது! நாளைக் காலை யில் மீண்டும் கூட்டமும் கோலாகலமும் ஆகிவிடும்!

ஒரு புறமாக மணமேடைக்கான் பூ அலங்கார வேலை நடந்து கொண்டிருந்தது!

தனியான பலகை ஒன்றில், பின்னணியில் நல்ல அடர் மஞ்சள் நிற செண்டுப் பூக்களைப் பதித்துக் கொண்டிருந் தார்கள். பக்கத்தில் குவியலாக வாடாமல்லி மலர்கள்!

மதிவதனி பக்கத்தில் போய்ப் பார்க்கவும், ''இது வாச லிலே வைக்கிற போர்டு அம்மா. இந்தச் செண்டோட பின்னணியிலே, பொண்ணு மாப்பிள்ளை பேர்களை வாடாமல்லியாலே ஒட்டி, கீழே இரண்டு கை சேருகிற

மாதிரி, வெண் சம்பங்கியிலே தைத்து விடுவோம்!'' என்று, அதைச் செய்து கொண்டிருந்தவர் விளக்கினார்!

முதல் நாள் பூ வேலைக்காரர் வந்து, வடிவமைப்பு, பணக்கணக்கு எல்லாம் பேசியபோது அவளும் கூட இருந்தாள் என்று தெரியாமல், அறிவிப்பு போர்டு செய்கிறவர் பேசியதைக் கேட்கையில், அவளுக்கு உள்ளூரச் சிரிப்பு குமிழியிட்டது!

ஆனால், வேலை நடுவே வந்தாள் என்று எரிச்சல் படாமல், அவர் பொறுமையாக விளக்கியது நெஞ்சைத் தோட, கவனத்துடனேயே கேட்டுக் கொண்டிருந்தாள்.

சற்று நேரம் வேடிக்கைப் பார்த்துவிட்டு, மதிவதனி மெல்லத் திரும்பியபோது, அந்த 'வசி' அங்கே வரக் கண்டாள்.

நில்லாமல் போனால், தப்பாக நினைப்பானோ?

பயந்து ஓடுவது போலக் கூட எண்ணலாம்!

ஆனால், அவளுக்கென்ன பயம்?

சொல்லப் போனால், நலுங்கும், இரவும் உணவும் எப்படி என்று கேட்டு, அவன் வாயாலேயே பாராட்ட வைக்கலாமே!

அசையாமல் நின்றாள் அவள்!

# 4

அவள் நிற்பதே அந்த 'வசி'க்குச் சற்று யோசனையாக இருக்கும் என்று மதிவதனி நினைத்தால், அவன்,

அவளைப் பார்த்து, ஓர் அறிமுகமான புன்னகை புரிந்து, ''ஹலோ'' என்றவாறு மேலே சென்றது, அவளுக்குத் திகைப்பாகிப் போயிற்று!

பூ அலங்காரம் செய்கிறவர்களிடம் இவன் எதற்காகப் போகிறான்? எதையும் மாற்றச் சொல்லப் போகிறானா?

ரொம்பவும் யோசித்து, எல்லாம் ஜோடி, ஜோடியாகத் தெரியும்படி, அவளும் மோகனாவுமாக, நிறைய யோசித்து மணமேடை அலங்காரம் செய்யச் சொன்னார்களே! அதைப் போய், இவன் கெடுத்து வைக்கப் போகிறானா?

அவள் யோசிக்கையிலேயே, ''இங்கே பூ அலங்காரத் துக்குப் பொறுப்பு யார்?'' என்று அவன் கேட்கவும், விஷ யம் அதுதான் என்று அவளுக்கு நிச்சயமாகிப் போயிற்று!

இதை அனுமதிக்க முடியாதே! செலவு செய்கிறவர்கள் பெண் வீட்டுக்காரர்கள்! என்ன மாதிரி அதைச் செய்ய வேண்டும் என்று தீர்மானிக்கும் உரிமையும், அவர்களது தானே?

அதிலெல்லாம் அத்து மீற விடக்கூடாது என்று எண் ணியவளாகத் தானும் அருகில் போய், சற்று நிமிர்வுட னேயே நின்று பார்த்தாள்!

''சார் அதோ இருக்கிறார்!'' என்றதோடு, ''மாமா, இந்த சார் உங்களைத் தேடி வந்திருக்கிறார்!'' என்றும் பூ ஒட்டிக் கொண்டிருந்த ஒருவன் குரல் கொடுக்க, எதையோ மேற்பார்வை பார்த்துக் கொண்டிருந்த அவரே ''என்ன சார், என்ன வேண்டும்?'' என்று கேட்டு இவர்களிடம் வந்தார்.

அறிமுகத்தின் அடையாளமாக அவளிடம் ஒரு தலை யசைப்புடன்.

''ஒன்றும் வேண்டாம், சார். ஆனால், ஒரு சின்ன விஷயம் சொல்லலாம் என்று வந்தேன்!'' என்றான் வசி.

அதிகாரம் இல்லை. ஆனால், செய்ய வைக்கும் குரல்!

இவன் ஒன்று சொல்லி, அதை அவள் மாற்ற முயன்றால் நடக்குமா? அல்லது, அப்பாவைத் தான் அழைத்து வர வேண்டியிருக்குமா? இவன் அதிகப் பிரசங்கம் செய்தால், அதுதான் வழி!

குறுக்கிடும் நேரம் வரவில்லை என்று, அவள் இன்னமும் மௌனமாகப் பார்த்துக் கொண்டு நிற்கையில், ''மணவறையைச் சுற்றிலும் வளைவு வளைவாகச் சரங்களைத் தொங்கவிடுவீர்கள் அல்லவா? அதைக் கொஞ்சம் கையெட்டாத உயரத்திலேயே தொங்க விட முடியுமா, சார்? ஏனென்றால், தாலி கட்டி முடிந்ததும், பக்கத்தில் நிற்கும் நெருங்கிய உறவினர்களே, மணமக்களுக்குப் பூத்தூவுவதற்காக, அந்தச் சரங்களைப் பிய்த்து எறிந்து விடுகிறார்கள்! மணமக்கள் சுற்றி வந்த பிறகு பூ அலங்காரத்தைப் பார்த்தால், பரிதாபமாக இருக்கும்! அதுவும், மேடையில் வைத்துதானே பரிசளிப்பதும்! அத்தனை போட்டோவிலும், பின்னணி அலங்கோலமாகத் தெரியும்! பூ எட்டாத உயரத்தில் இருந்தால், இந்த அசட்டுத்தனம் நடக்காதில்லையா?'' என்றான் அவன்.

அவன் சொல்வது சரிதானே என்று சபாஷ் போட்டது, அவள் மனம்!

தாடையைச் சொறிந்தார் பூ வேலைக்காரர்!

''நீங்கள் சொல்வது, ரொம்பவும் சரிதான், சார். செய்யலாம்தான்! ஆனால், அப்புறம் நான் பூவில் மிச்சம் பிடித்து விட்டேன் என்று பேச்சு வருமே! கல்யாண வீட்டுக்காரர்கள் அப்படிப் பேசினால், என் தொழில் என்ன ஆகும் சொல்லுங்கள்! சும்மாவே, அந்த அம்மா...''

அத்தையைச் சொல்கிறார்!

அவசரமாகக் குறுக்கே புகுந்தாள் மதிவதனி. ''மண மேடை அழகாகத் தெரிகிறபோது, யாரும், உங்களை எதுவும் சொல்ல மாட்டார்கள், சார்! அதற்கு நான் உத் திர்வாதம்! அல்லது ஒன்று செய்யுங்கள்! மணவறையைச் சுற்றிலும் நாலு தூண்கள் இருக்கிறதல்லவா? அவைகளில் நிறையச் சரங்களைத் தொங்க விட்டு விடுங்கள். பூவைப் பிய்த்தெடுக்கிற குரங்குகள், அதிலிருந்து உருவிக் கொள் ளட்டும்!''

''ம்ம்ம். அதில்கூட, தூண்களின் முன்புறத்தில், இதோ, இதுபோல ஏதாவது அழகான டிசைனில் பூவை ஒட்டி விடுங்கள்! உட்புறமாகச் சரங்கள் தொங்கட்டும். அந்தச் சரங்களில் எவ்வளவு பூக்களை எடுத்தாலும், கடைசி வரை, மேடை அலங்காரம் கலையாது!'' என்றான் அவன்.

இருவரையும் ரசனையுடன் நோக்கினார் பூ வேலைக் காரர்! ''இருவருமே அருமையாக ஐடியாக்களை அள்ளித் தருகிறீர்களே! சம்மதம் என்றால் வேலை தருகிறேன். இந்த மாதிரி, பூ ஒட்டி, மாலை கட்டுகிற வேலை அல்ல! ஏசியில் உட்கார்ந்து, டிசைன் பண்ணுகிற வேலைதான். நட்சத்திர ஹோட்டல் விழா அலங்காரங்கள் நிறைய வருகிறது! புதுப் புது டிசைனுக்கு நல்ல வரவேற்பு இருக் கும்!'' என்று அவர் புன்னகையோடு கேட்க, இருவரும் சிரித்துவிட்டுக் கிளம்பினார்கள்.

அவளை ஓரக்கண்ணால் பார்த்து, ''இப்படிக் கெட்டிக் கார உதவியாள் கிடைத்தால், இது ஒரு தொழில் தொடங்க லாம் போல இருக்கிறதே!'' என்றான் அவன்.

இவனுக்கு அவள் உதவியாளா? அதிலும் பூக்கள் தொடர்பான தொழிலில்!

''அட, நான் கூட அதையேதான் நினைத்தேன்!'' என்றாள் வேண்டும் என்றே!

''ஆஹா, நான், உனக்கு உதவியாளா?'' என்று கேட்டான் அவன்.

''என்னை மட்டும் சொன்னீர்கள்?''

சிரித்துவிட்டு, ''அதற்காகத்தான் இருக்கும் என்று நினைத்தேன்! போகட்டும். அப்படி ஒரு தொழில் தொடங்கும்போது, சம பங்குதாரர்களாகத் தொடங்கலாம்! ஆனால், அதற்கு முன்னால், உன் பெயரைத் தெரிந்து கொள்ளலாமா?'' என்று கேட்டான் அவன். ''மதி என் கிறார்கள், வதனி என்கிறார்கள். என்ன பெயர், இப்படி யெல்லாம் துண்டாடப் படுகிறது?''

''துண்டாடுவதாகச் சொல்வானேன்? ஹரி என்றாலும், கிருஷ்ணா என்றாலும் ஹரிகிருஷ்ணா என்றாலும் ஒரே சுவாமியைத்தானே?''

''இன்னமும் பெயரைச் சொல்லவில்லையே!''

''இரண்டையும் சேர்த்துப் பார்த்தால், தானாகத் தெரியும்!''

''வதனி... மதி... ஓகோ, மதிவதனி!''

''ஆமாம்! அவரவர் விருப்பம்போலக் கூப்பிடுவார்கள்'' என்று அவள் முறுவலித்தாள்.

''ஓகோ, அப்படியா? நான் வேறு நினைத்தேன்'' என்றான் அவன் சாதுவக.

அவள் யோசனையோடு திரும்பிப் பார்க்கவும், ''மதி இல்லை என்று தெரியும்போது வெறும் வதனியாகி விடு கிறாயோ என்று...'' என்று முடிக்காமல் இழுத்தான் அவன்.

''என்...னது?'' என்று மிரட்டுவது போலக் கேட்டாலும், அவளுக்குத் தன்னை மீறிச் சிரிப்பு வந்தது.

சேர்ந்து சிரித்துவிட்டு, ''நீங்கள் எப்படியோ? வசி வசி என்றால், இந்த மரா மரா என்று வால்மீகி சொல்லிப் பழகியது ராம ராம என்றானது போல, சிவ சிவ என்பது இப்படி, வசியாக மாறிவிட்டதா?'' என்று வினவினாள் மதிவதனி.

''என் பெயரை ரொம்ப நேரம் ஆராய்ந்தாய் போல...'' என்றவன் முடிக்குமுன், ''நீங்கள் 'மதி'யையும், 'வதனி'யையும் வைத்துக் குழம்பியதைவிடக் குறைவாகத்தான் இருக்கும்!'' என்று பட்டெனப் பதில் கொடுத்தாள் அவள்.

''யப்பா!'' என்று தோளைக் குலுக்கினான் அவன். தொடர்ந்து ''என் பெயர் வசீகரன். பொருத்தமாக இருக்கிறதல்லவா?'' என்று காலரைத் தூக்கி விட்டுக் காட்ட, அவளுக்கு மறுபடியும் சிரிப்பு வந்தது!

கண்ணில் சிரிப்புடனேயே, ''பா... வம்! இல்லை என்றால் ரொம்ப வருத்தப்படுவீர்கள்! அதனால், ஐயோ பாவம் என்று அரை.. ஊகூம், கால் மனதாக ஒத்துக் கொள்கிறேன்!'' என்று அவள் கூற, இருவருக்குமே மீண்டும் சிரிப்பு வந்தது!

சிரித்து முடித்துவிட்டு, அவ்வளவு நேரம் இருந்த மனநிலை மாறும்படியாக, வசீகரன் சொன்னான். ''உன் அத்தைதான் கஞ்சப் பிசுநாரி என்று பார்த்தால், நீயும் அப்படித்தான் என்று தெரிகிறது!'' என்றான் இலகுவான கேலிக் குரலிலேயே!

சட்டென முகம் மாற, ''அப்படி அத்தை எதிலே பிசுநாரித்தனம் செய்தார்களாம்'' என்று ஆத்திரமாகக் கேட்டாள் அவள்! ''நலுங்குக்குச் சட்டைத் துணி வைத்துக்

கொடுத்திருக்கிறார்கள்! இரவு விருந்து நன்றாகச் செய் திருக்கிறார்கள்! குறையே சொல்ல முடியாது! நானே சுவைத்தது! நன்றாக, ஒரு வெட்டு வெட்டிவிட்டேன், தெரியுமா?''

''நலுங்கு சட்டைத் துணி, உன் அம்மாவின் ஏற்பாடு என்பது எனக்குத் தெரியும்! சாப்பாடு. உண்மையைச் சொல்லு, நீ சாப்பிடும்போது, யாரும்... நிஜமாகவே, காய்க் கூட்டு, பொரியலை எல்லாம், கால் ஸ்பூன் வை, அரை ஸ்பூன் வை என்று யாருமேயா, குறைந்த பட்சமாக உன் மாமாவேனும் வந்து, பரிசாரகன் பக்கத்திலேயே நின்று, கையைப் பிடிக்காத குறையாகத் தடுக்கவில்லை என்றா சொல்கிறாய்?'' என்று கிண்டலாகக் கேட்டான் அவன்.

''மா... மாமாவா? அதெப்படிச் சொல்லியிருப்பார்? எல்லாம் தான் நிறைய, நிறையச் செய்திருந்ததே!''

''அதற்கென்ன? குப்பைத் தொட்டியில் கொட்டி னாலும் கொட்டுவேன். அடுத்தவர் என் சோற்றை உண்டு விடக் கூடாது என்ற உயர்ந்த உள்ளம் காரணமாக இருக்கக் கூடும்!''

அதே ஏளனம்! ஜெராக்ஸ் காப்பி போல, அப்படியே திரும்பி வந்து விட்டதே!

''அப்படியெல்லாம் கிடையாது...'' என்றவளுக்கு, முடிக்குமுன் சத்தம் தேய்ந்து விட்டது!

மாமாவாக அப்படி பிச்சுப் பிசுக்கி நுணுக்கிக் கொண் டிருப்பது இல்லை என்றாலும், அத்தை ஒன்று சொன் னால், அதை அப்படியே செயலாற்றுகிறவர்தான்! இவன் சொன்னது போல நடந்திருக்காது என்று ஒரேயடியாக, அடித்துப் பேச முடியாது!

''என்னவோ, உன் அப்பா வந்து அவரை இழுத்துப் போகவே, இது தெரியாதவர்களாலேனும் சாப்பிட முடிந்தது! நல்லவேளையாக, அதற்குப் பிறகு, உதி மாமனார் பந்தி விசாரணைக்கு வரவும் இல்லை!''

இப்போது, அவனது குற்றச்சாட்டை, அவளால் நம்பவே முடிந்தது. ஏனெனில், சுதர்சனம், தன் அக்கா கணவருடன் தனியிடத்தில் நின்று ஏதோ முக்கியமாகப் பேசியது, போகிற போக்கில், அவள் கண்ணில் பட்டிருந்தது! அந்த முக்கியமாக பேச்சு, இதுவாகவும் இருக்கலாம்! இதுவாகத்தான் இருக்க வேண்டும்! அப்புறம் மாமா, கடைசிப் பந்தியில் சாப்பிடத்தானே வந்தார்!

என்னதான் சமாளிக்க முயன்றும், மதிவதனியின் முகத்தில் வாட்டம் தெரிந்து விட்டது!

என்ன எண்ணினானோ? ''ஆனால், நானெல்லாம் உன் மாதிரி கஞ்சன் இல்லைம்மா! உண்மையை அப்படியே விளம்பி விடுவேன்! உன் பெயர், உனக்கு சூப்பர் பொருத்தம்! பார்த்துப் பார்த்துப் பெயர் வைத்தவர்களைப் பாராட்ட வேண்டும்!'' என்று மனதாரச் சொன்னான்!

நிறையப் பேர் சொன்னதுதான். ஆனாலும் முகத்தில் சூடேறுவதை உணர்ந்தவளுக்கு, நல்லவேளை, இது இரவு நேரம் என்று தோன்றியது! முகச்சிவப்பு அவ்வளவாகத் தெரியாதல்லவா?

இரவு நேரம். சீக்கிரமாகத் தூங்கி, காலையிலும் சீக்கிரமாக விழித்துத் தயாராக வேண்டும் என்று தாயார் சொன்னதும் நினைவு வந்தது.

பெரிதாக விடை பெறுகிற மாதிரி அவனிடம் சகஜம் காட்டவும் மனமின்றி, ''நாளைக்கு அப்பா, அம்மாவைப்

பார்க்கிறபோது, நினைவிருந்தால் சொல்லுங்கள்!'' என்று சாதாரணமாகச் சொல்லிவிட்டு, பெண் வீட்டார் தங்கியிருந்த பகுதிப் பக்கமாகத் திரும்பி நடக்கலானாள் மதிவதனி.

கூடவே நடந்தபடி, ''கட்டாயம் சொல்லுவேன்! ஏனெனில், நான் எதையும் லேசில் மறப்பவன் அல்ல! ஞாபக சக்தி அதிகம் என்பதைப் போல, வெளிப்படைப் பேச்சும் என் அடையாளமே. எங்கள் குடும்பதில் இன்னொருவன் முட்டாளாக்கப் படுவது பற்றி அப்போதே சொன்னேனில்லையா? இன்னொரு தரம், அது பற்றி நான் எச்சரிக்க நேராதபடி, தயவு செய்து பார்த்துக் கொள்! வருகிறேன்'' என்று, சற்று இறுகிய குரலில் கூறிய வசீகரன் அதற்கு மேல் நில்லாமல், மாப்பிள்ளை வீட்டார் அறைகள் பக்கமாக, வேகமாக நடந்து சென்று விட்டான்!

பனியையும் வெயிலையும் மாறி மாறி உணரும் விதமாக எப்படிப் பேசுகிறான்! பாராட்டுகிற மாதிரிப் பேசும் போதே, பட்டென்று குட்டி விடுகிறானே!

இவனுடன் கலகலப்பாகப் பேசுவது நன்றாக இருக்கிறது என்று நினைப்பதற்குள், இரண்டு போடு, போட்டு விட்டான்! தலையே சுற்றும் அளவுக்கு!

ஒன்று அத்தை! அதில் மறுத்துப் பேச ஒன்றும் இல்லை! அத்தைக்குக் கொஞ்சம் சில்லரைத்தனம் எப்போதும் உண்டு!

ஆனால், அவன் சொன்ன இரண்டாவது முட்டாள் படலம்?

மோகனாவின் நிச்சயதார்த்தத்தின்போது ஏற்பட்ட அறிமுகம்!

இப்போது பார்த்தால், நின்று இரண்டு வார்த்தை பேச மாட்டார்களா?

என்னமாகக் குற்றம் சாட்டுகிறான்!

மோகனா, உதயனை முட்டாளாக்கி... அதாவது, மயக்கி மணக்கிறாளாம்!

இப்போது சௌமினி அதேபோல ரஞ்சனுக்கு வலை வீசுகிறாளாம்!

இப்படிச் சொல்ல, அந்த வசீகரனுக்கு எவ்வளவு திண்ணக்கம் இருக்க வேண்டும்?

இருந்திருந்து இந்த சாதுப்பெண் சௌமினியைப் போய், என்ன வார்த்தை சொல்லுகிறான்?

பாவம்! அவளுக்கு இப்போதுதான் வேலை கிடைத்து, அப்பாடி என்று, சித்திகூடக் கொஞ்சம் சிரித்த முகமாக இருக்கிறார்கள்! அவளைப் போய்... சே!

சரி... வைத்துக் கொள்ளலாம்! இரண்டு பேருமே கொஞ்சம் வழிந்தார்கள்தான்!

ஆனால், அந்த ரஞ்சன், சௌமியைவிட, நாலைந்து ஆண்டுகளாவது பெரியவனாக இருப்பானே! அவனுக் காய் புத்திகித்தி ஒன்றும் கிடையாதா?

அப்படியே, இவனுக்குப் பிடிக்கவில்லை என்றால், இவனுடைய சொந்தக்காரன், அந்த ரஞ்சனை அடக்கி வைப்பதுதானே?

அதைவிட்டு, இவன் என்ன, அவளிடம் வந்து, பெரி தாக எச்சரிப்பது?

அப்படியென்ன, தலை முடியைப் பிடித்து இழுத்துச் செல்ல விடுவதற்கு, இவன் குடும்பத்தில் எல்லா ஆண்

களும் அறிவற்றவர்கள்? அவளுடைய குடும்பப் பெண்கள், வசதியானவர்களுக்கு வலை வீசும் தரமற்றவர்கள்?

அவள் வீட்டுப் பெண்களைப் பற்றி, அவளிடமே தப்பாகப் பேசுகிறோமே என்று, வசீகரனுக்குத் தோன்றவே இல்லையா?

நலுங்கிடலில் தொடங்கி, மனதில் இருந்த குதூகலமான மனநிலை மாறி, சிறு வாட்டத்துடன், மதுவதனி அறைக்குள் சென்றாள்.

காலையில் குளித்து அணிவதற்கான நகை, உடைகளை மகளுக்கும், தங்கை மகள் சௌமினிக்கும் தனித் தனியாக எடுத்து வைத்துக் கொண்டிருந்த பூமா, மகளைப் பார்த்து ''என்னம்மா?'' என்று வினவினாள்.

உடம்பை முறுக்கி சோம்பல் முறித்தவாறே, ''தூக்கம், அம்மா!'' என்றாள் பெண்.

''நகைகளைக் கழற்றித் தந்துவிட்டுப் படு! சௌமியைப் பார். அப்போதே தூங்கி விட்டாள். நீயும், அவள் பக்கத்தில் கட்டிலில் படுத்துக்கொள். இவ்வளவு நேரம் எங்கே சுற்றினாய்? கோகி, மஞ்சு கூட இல்லையே! மோகனாவைப் பார்க்கப் போனாயா?''

''இல்லைம்மா! பூ அலங்காரத்தைப் பார்த்துக் கொண்டிருந்தேன்!'' என்றாள் மகள். உடனேயே ஒரு பெரிய கொட்டாவியை விட்டு, வேகமாகக் கழற்றிய நகைகளைத் தாயிடம் தந்துவிட்டு, ஓரமாகக் கட்டிலில் படுத்துக் கண்களை மூடிக் கொண்டாள்!

மூடிய கண்களுக்குள் அந்த வசீகரன் வந்து, ''பொருத்தமான பெயர்'' என்றான்.

பெயர் வைத்தவர்களைப் பாராட்ட வந்தவனிடம், ''எங்கள் பெண்ணை, நீ முட்டாளடிக்க முயற்சிக்காதே!''

என்று அவளுடைய பெற்றோர் அதட்ட, 'சபாஷ்... சரியான பதில்' என்று உள்ளூர மெச்சிக் கொண்டாள் பெண்!

காலையில் விழிக்கும்போதும், அதே பாராட்டுதலான முறுவலுடன்தான் எழுந்தாள்.

''என்னடி, பெண்ணரசி எழுந்திருக்கும் போதே, ஒரே இளிப்பு?'' என்று தானும் முறுவலித்தவாறே, வினவினாள் பூமா!

அவளுடைய கண்ணின் மணி ஆயிற்றே, இந்தப் பெண்! பூமாவுக்குப் பிறகு நாலு ஆண்டுகள் கழித்துத் திருமணமான அவளுடைய தங்கைக்கு சௌமினியும், பூமாவுக்கு மதிவதனியும் பத்து நாள் இடைவெளியில் பிறந்தவர்கள்! அதுவும் எத்தனையோ வழிகளில் வசதியாக, இரட்டைக் குழந்தைகள் போல, இருவரும் ஒட்டிக்கொண்டே அலைவார்கள்!

அன்னையின் கேள்வியில், மதிவதனிக்கு, இன்னமும் அதிகச் சிரிப்பு வந்தது! ஆனால், அதை எப்படி அன்னை யிடம் சொல்வது?

எனவே, ''சொப்பனம், அம்மா! சொப்பனம்! ஆனால், என்னவென்று கேளாதீர்கள். அப்புறம் பலிக்காது'' என்று எச்சரித்தாள் மதிவதனி!

''அப்படியானால், பலித்தாக வேண்டிய கனவு போலி ருக்கிறது!''

''நிச்சயமாய்!''

''ம்ம்ம்... அவ்வளவு முக்கியமாக, அது என்னவாக இருக்கக் கூடும்?'' என்று யோசிப்பது போலப் பூமா பாவனை செய்ய, கண்களை விரித்து, ''அதுவாம்மா, வந்தும்மா நேற்று...'' என்று எதையோ பெரிதாக விளக்கப் போவது

போலப் பாவனை செய்து விட்டு, "சொல்ல மாட்டேனே!" கூந்தல் சுருள்கள் அசையத் தலையசைத்துச் சிரித்தாள், பெண்!

"வாலு, வாலு!" என்று பூமா சிரிக்கும்போதே, குளியலறைக் கதவு திறந்தது!

"ஓடுஓடு! சௌமி குளித்துவிட்டாள். நீ மட்டும்தான் பாக்கி. உங்கள் இருவருக்கும் பார்த்துவிட்டேன் என்றால், அப்புறம் மோகனாவைப் பார்க்கப் போக வேண்டும்! அங்கே போனால், அப்புறம் வர முடியாது! அதனால் சீக்கிரம் வா!" என்று மகளைத் துரிதப் படுத்திவிட்டு, "நீ வாடாம்மா, சௌமி!" என்று தங்கை மகளுக்கு அலங் காரத்தைத் தொடங்கினாள் பூமா.

கலைத்திறனோடு, இரு பெண்களின் அணிமணி களையும், பூமா தேர்வு செய்திருந்தாள்.


ஒரே ஜரிகையாகக் கட்டினால், மணப் பெண்ணுக்கு இணையாகத் தெரியும் என்று, பார்டர் தவிர ஜரிகை இல்லாத பட்டுச் சேலைகளையே இரு பெண்களுக்கு கட்டி விட்டிருந்தாள்! ஆனால், பளிச்சென்ற நகைகள்! இடுப்பில் ஒட்டியாணம்!

இரு பெண்களும் மணப்பெண்ணோடு தோழியராகக் கூடச் சென்றபோது, "இந்தக் குடும்பத்தில் எல்லாப் பெண் களுமே அழகாக இருக்கிறார்கள்!" என்று யாரோ கூறியது கேட்டது!

பெருமிதத்தோடு ஓரக் கண்ணால் பார்த்தாள் மதிவதனி.

அவள் எதிர்பார்த்தது போலவேதான், மணமகனை ஒட்டியே மேடையில் வசீகரனும் நின்றிருந்தான்.

அவன் முகத்தில் இருந்த மலர்ச்சி, அவள் அவ்வளவாக எதிர்பார்த்திராததுதான்! ஆனால், அவள் அடுத்த அடி எடுத்து வைத்து, மறுமுறை பார்த்தபோது, அந்த மலர்ச்சி மாறி, அவன் முகத்தைச் சுளித்த விதம்தான் அவளுக்குக் கொஞ்சமும் பிடிக்கவில்லை!



# 5

மோகனாவுக்கும் உதயனுக்கும், பெரியோர் சம்மதத்துடன் நடக்கும் இந்தக் காதல் திருமணம் சற்றும் பிடிக்காதவன் அந்த வசீகரன்.

அதேபோல, இன்னொரு திருமணமும் நடந்துவிடக் கூடாது என்பதில், வெகு கவனமாக இருப்பவன்!

அப்படி இருக்க, அவளது அழகையே அவன் பாராட்டுவானா என்று சந்தேகத்தோடுதான் ஏனெனில், மதிவதனியும், அதே குடும்பத்தைச் சேர்ந்தவள் ஆயிற்றே!

முன் தினம், பூவேலைக்காரரிடம் அவனை ஒட்டிப் பேசினாள் என்றோ, என்னவோ, அவளும் அழகி என்று சொல்லிவிட்டான்!

அவளைப் போலவே, அவனும், அந்த நிகழ்ச்சி பற்றி மனதில் அசை போட்டிருந்தால், ஆகா, அந்தக் குடும்பத்துப் பெண்ணின் அழகைப் பாராட்டிவிட்டேனே, அவள் மனதில் ஏதாவது திட்டம் போட்டுவிடக் கூடாதே என்றும் எண்ணியிருப்பான்தானே?

அதனாலேயே, தன் அழகைப் பற்றிய இன்னொரு பாராட்டை மதிவதனி, வசீகரனிடம் அதிகமாக எதிர்பார்க்கவில்லை எனலாம்!

எனவே, 'பிரமாதம்' என்று சொல்லாமல் சொல்வது போன்ற அவனது ஆர்வம் கலந்த முகமலர்ச்சி அவளுக்கு ஓரளவு வியப்பையே அளித்தது எனலாம்!

வியப்போடு, அளவிட்டுச் சொல்ல முடியாத சந்தோஷத்தையும்!

ஆனால், ஒரு கையால் அவளைப் பற்றியிருந்த மோகனா அதற்குள் அடுத்த எட்டு எடுத்து வைத்து விட, அவளது கையிழுப்புக்குச் சரியாக இவளும் முன்னே பார்த்து ஓர் எட்டு நடந்து விட்டு, ஆவலோடு மீண்டும் பார்த்தால், அதற்குள் அவன் முகம் கடுத்து விட்டிருந்தது!

மிஞ்சி, மிஞ்சிப் பத்து வினாடிகள்! அதற்குள் என்ன ஆகியிருக்கும்?

ஆனால், யாரிடம் கேட்பது?

நின்று அதைப் பற்றி யோசிக்கக் கூட முடியாமல், மோகனாவோடு மணமேடைக்குச் செல்ல வேண்டியிருந்தது! அங்கே, அவள் உட்காரும்போது, சேலை மடிப்புகளை அழகாக எடுத்து விட வேண்டியிருந்தது!

இன்னும், அங்கே நின்று கொண்டிருந்த மணமகனுடைய சகோதரி ஏதோ கேட்க, அவளுக்குப் புன்னகையோடு பதில் சொல்ல வேண்டியதாகவும் இருந்தது!

நல்லவேளையாகத் துடிப்புள்ள பெண் என்பதால், அதற்குள் அவளது மனமும் திருமணச் சடங்குகளிலும், சூழ இருந்தோரின் கேலிப் பேச்சுகளிலும் ஈடுபட்டு விட, இந்த உறுத்தலை மறந்து, அவளும் மகிழ்ச்சியுடனேயே அதில் கலந்து கொண்டாள்.

அதற்கேற்ப, திருமாங்கல்யத்தைக் குங்குமமிட்டு, தாம்பாளத்தில் இருந்த மஞ்சள் தடவிய தேங்காய் மீது வைத்துத் தூக்கி, "யாராவது கொண்டு போய்ப் பெரியவர்களிடம் ஆசீர்வாதம் வாங்கி வாருங்கள்" என்று நீட்டினார்.

ஆனால், அவர் தட்டைத் தூக்கியதுமே, தன்னிடம் தான் தாலியைத் தருகிறாரோ என்று அதை எடுப்பதற் காகக் கைகளை நீட்டிவிட்ட உதயன், அவரது பேச்சைக் கேட்டதும் அசடு வழியக் கைகளை இழுத்துக் கொள்ள, எல்லோருக்கும் சிரிப்பு வந்தது!

''என்ன உதி, அவ்வளவு அவசரமா?'' என்று அவ னுடைய தமக்கையே சிரித்தாள்.

''விட்டால், இப்போதே தூக்கிக் கொண்டு போய் விடுவான் போல!''

''எப்போதடா தாலி கட்டுவது? சுற்றி நிற்கிறதுகளை எப்போது, எப்படி விரட்டுவது?'' என்றுதான் இப்போது சிந்தனை ஓடுவதே.''

''மோகி கூடக் கழுத்தைக் கொஞ்சம் நீட்டினது போலத் தெரியவில்லை?''

இப்படியெல்லாம் ஆளாளுக்குக் கேலி பச, எல் லோருக்குமே சிரிப்பு வந்தது!

இந்தச் சந்தடியில், அய்யர் நீட்டிய தட்டை வாங்கிக் கொண்ட ரஞ்சன், ''அட்சதையும், பூவும் கூட எல்லோருக் கும் தர வேண்டும் அல்லவா? நீங்கள் வாருங்களேன்! அவர்களிடம் கொடுங்கள், அய்யர்!'' என்று, சௌமி னியை காட்ட, அய்யரும் அதுபோலவே கொடுத்துவிட, அவளும் மறுப்பின்றி அட்சதைத் தட்டை வாங்கிக் கொண்டு, ரஞ்சனோடு சேர்ந்து மணமேடையை விட்டு இறங்கிச் செல்லலானாள்.

சௌமினி இப்படியெல்லாம் அடுத்தவர் சொல்லுக் காகப் போகிறவள் அல்ல என்பதால், மதிவதனிக்கு ஆச்சரியமாகிப் போயிற்று!

வியந்து நோக்கும்போதே, வசீகரனின் பேச்சு நினைவு வந்துவிட, சட்டென அவனைப் பார்த்தாள் அவள்.

உள்ளத்தில் என்ன ஆத்திரம் பொங்கிக் கொண்டிருந்த போதும், வசீகரன் அதை முகத்தில் காட்டிவிடவில்லை!

உதடுகள் சிரித்தாற் போலவேதான் இருந்தன. விடைத்திருந்த நாசியும், சற்றே உணர்ச்சியற்றுத் தெரிந்த கண்களும்தான், அவனுள்ளே கனன்று கொண்டிருந்த சீற்றத்தைக் கொஞ்சம் காட்டிக் கொடுத்தன எனலாம்!

அதுவும், அவனுக்குக் கோபம் இருக்கக் கூடும் என்று தேடினால் மட்டுமே தெரியக் கூடிய அளவில்! அப்படித் தேடியதாலேயே, மதிவதனிக்கும் அது புரிந்தது!

ஆனால், வசீகரனின் கோபம் எந்த அளவுக்குச் சரி யானது?

அவளது பார்வை ஆராய்ச்சியோடு பாய்ந்தபோது, ரஞ்சனும் சௌமினியும் மிகவும் பொருத்தமான ஜோடி யாகவே தோன்றினர்! முக மலர்ச்சியோடு இருவரும் திருமணம் தொடர்பான வேலையில் ஈடுபட்டிருந்ததும், அவர்களது பொருத்தத்தை எடுத்துக் காட்டுவதாகவே அமைந்தது!

இதை ஒருவன் எதிர்ப்பதானால், அவன்தான் சரி யில்லை என்று அர்த்தம்! இதைப் பற்றி அவன் மீண்டும் ஏதாவது சொன்னால், திருப்பிக் கொடுத்துவிட வேண் டியதுதான் என்று தீர்மானிக்கும்போதே, மதிவதனிக்கு உள்ளூர வருத்தமாகவும் இருந்தது!

இருந்திருந்து, இந்த வசீகரனிடம் போய்ச் சண்டை போட வேண்டியிருக்கிறதே!

பிடிவாதமாக, அவனது பார்வையைத் தவிர்த்தாள் அவள்!

மோகனாவின் திருமணம் இனிதே நிறைவேறியது!

மணமக்கள் இருவரும் என்ன செய்தாலும் எல்லோரும் கேலி செய்து சிரித்தனர்.

மாலை மாற்றும்போது, கைப்பிடித்து சுற்றும்போது, எல்லாமே, யாராவது, ஏதாவது சொல்ல நகையொலி கிளப்புவதாகவே ஆயிற்று!

என்ன நினைத்தானோ? நல்லவேளையாக வசீகரனும் அதில் இயல்பாகக் கலந்து கொள்ள, வேடிக்கைப் பேச்சு இன்னமும் களை கட்டிற்று!

விருந்தினர் வந்து பரிசு கொடுத்துச் சென்றார்கள்!

அவரவர் தரப்பு மனிதர்களை அடுத்தவருக்கு அறிமுகப் படுத்தும் சாக்கில் பேசத் தொடங்கிய மணமக்களுக்குப் பேச்சை நிறுத்த மறந்து விடவே, அதையும் கேலி பேசிச் சிரித்தார்கள்!

உணவருந்தப் போனால், அங்கேயும் சிரிப்பு!

ரஞ்சனின் ஒவ்வொரு வார்த்தையையும் கவனித்து, உள் வாங்கி, அதற்கேற்ப சௌமினி நடப்பதைக் கவனித்த மதிவதனிக்குத் திடுமெனக் கவலை உண்டாயிற்று!

இந்த ரஞ்சன் ஆழமோ, உறுதியோ இல்லாதவனாக இருந்தால்? கல்யாணக் கலகலப்பில், சும்மா உல்லாசமாகப் பேசிக் கொண்டிருந்துவிட்டு, பின்னர் சௌமியை மறந்தே போனால், மிகவும் மென்மையான உள்ளம் படைத்த அவள் தாங்குவாளா?

அத்தோடு, திருமணத் தராசில், அவளது தட்டைக் கீழிறக்கும் பிரச்சினையும் ஒன்று இருக்கிறதே!

இந்தக் காலத்தில், இதையெல்லாம் யாரும் பெரிதாக நினைப்பது இல்லை என்றாலும், ஏற்கனவே, இவர்களின்

இணைப்புக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் ஒருவன், அங்கே ஏற்கனவே இருக்கிறானே!

இப்படியெல்லாம் தோன்றியபோதும், துயர் அறியாத இளமையின் துள்ளலும், துடிப்பும், பிரச்சினைகளை அலட்சியம் செய்து, எல்லாம் சரியாகப் போய்விடும் என்கிற நம்பிக்கையைத் தந்து, மதிவதனியை உற்சாகத் துடனேயே இருக்க வைத்தன!

மதியத்துக்கு மேல், வீட்டில் கொஞ்சம் வேலை யிருக்க, சௌமினியும் அவளுமாக, அவளது வீட்டுக்குச் சென்றனர்!

இரவு வேடிக்கை விளையாட்டுகளுக்கு ஏற்பாடு செய்திருந்தனர்.

புது மணமக்கள் வெட்டுவதற்கான கேக்கை, மதிவத னியும் சௌமினியுமாகத்தான் தயார் செய்திருந்தனர்! மூன்று அடுக்குகளாகச் செய்து, கண்ணைக் கவரும்படியாக ஐசிங்கும் செய்திருந்தனர். வாழ்த்து வசனம் எழுதி, சில மிட்டாய் உருவங்கள் ஒட்டி எடுத்து வர வேண்டும்!

அதே போலச் செய்து முடித்து, ஊர்வலம் போலக் காரை மெல்ல ஓட்டச் சொல்லி, கேக்கைப் பத்திரமாக எடுத்து வந்தனர்!

யாரும் குறை சொல்லி விடக்கூடாது என்று, கேக் மிருதுவாக இருக்கும்படித் தயாரித்திருந்தார்கள்! திடீர் என்று பிரேக் போட்டால் கூட, கேக் சரிந்து விடுமோ என்ற பயம், பெண்களுக்கு!

''பின்னாலே வருகிற அத்தனை பேரும் திட்டுகிறாங் கம்மா!'' என்று குறைப்பட்டபோதும், முதலாளி வீட்டுப் பெண்கள் விரும்பியது போலவே, காரை மெல்ல ஓட்டி,

கேக்கை உருப்படியாகவே கொண்டு வந்து சேர்த்தான் டிரைவர்!

இங்கேயும் அழகான பின்னணியில் டீபாயைப் போட்டு, கேக்கை அதன் மீது வைத்து, கடைசி நேரத்து 'டச்சப்' வேலைகளைச் செய்தபடி, சௌமினியை உடை மாற்ற அனுப்பினாள் மதிவதனி.

அன்று மாலை இரு பெண்களுக்கும் காக்ரா சோளி மாடல்! நல்ல நீளமான 'கிராஸ்கட்' பாவாடை ஜிலுஜிலு வென்று பளபளக்கும் வேலைப்பாடு! சோளியின் கழுத்துப் பகுதி வேலைப்பாடே போதும் என்று, நீளக் காதணிகளும், கை நிறைய உடைக்குப் பொருத்தமான வண்ண வளைகளும் அணிந்திருந்தார்கள்.

சௌமினி வந்ததும் அவளைக் கேக் காவலுக்கு வைத்துவிட்டு உடை மாற்றப் போன மதிவதனி திரும்பி வந்து பார்த்தால், சௌமினிக்குத் துணையாக, ரஞ்சனும் வந்து உட்கார்ந்திருந்தான்!

கலகலவென்று இருவரின் பேச்சும் நிற்கவே இல்லை!

அந்த ரஞ்சன் நல்லவனாக இருக்க வேண்டுமே என்று வேண்டியபடியே மதிவதனி தலையைக் காட்டினாள்.

ஆனால் அவளைக் கண்டதும் ஓடிவிடாமல், ''ஏதோ விளையாட்டுகள் எல்லாம் வைத்திருப்பதாக சௌமி சொன்னாள். நாற்காலிகள் அடுக்குவது, ஒதுக்குவது என்று ஏதேனும் முரட்டு வேலைகள் இருந்தால் சொல்லுங்கள்! நான் செய்கிறேன்!'' என்று உதவ முன் வந்தது, அவளுக்கு ஆறுதலாக இருந்தது!

தனியாக இருக்கும் பெண்ணைச் சுற்றுகிற விடலை கள், இன்னொருத்தரைக் கண்டால், உடனே ஓடி

vingej)

விடுவார்கள் என்று, அவள் படித்த கல்லூரியில் விரிவுரையாளராக இருந்த ஒரு பெண்மணி அடிக்கடி சொல்வார்! அப்படிப்பட்ட ஆண்களை இனம் கண்டு, அவர்களோடு பழகுவதைத் தவிர்ப்பது பெண்களுக்கு நல்லது என்று அறிவுரை கூறுவார். நல்லதற்குச் சொல்கிறார் என்று எடுத்துக் கொள்வோரும் உண்டு. 'சின்ன வயதில் ஏமாந்த கதையைச் சொல்கிறது' என்று கிண்டலடித்தும் மதி கேட்டிருக்கிறாள்.

மாலை காபி வளவளப்பில் இதெல்லாம் கேட்டு விட்டு, "ஒருவர் நல்லதற்குச் சொன்னால், அதை நல்ல விதமாக எடுத்துக் கொள்ளத் தெரியவில்லை, பாரேன்! பாவம், பின்னால் என்ன கஷ்டப்படப் போகிறார்களோ!" என்று பூமா இரக்கப்பட்டதும் உண்டு!

என்ன அழகாகத் தயார், தனக்கு அறிவுறுத்தியிருக்கிறாள் என்று, மதிவதனிக்கு இப்போது தோன்றியது!

அப்படிப் பார்க்கையில், ரஞ்சன் பழகத் தகுந்த நல்லவனே!

முறுவலித்து, "ம்! வழக்கமான விளையாட்டுகள்தான்! புதிதாக எதையும் செய்வது என்றால், விளக்கம் கொடுப்பதற்குள் நிறையப் பேருக்கு அலுத்து விடுகிறது! அதனால்.. நீங்கள் உதவிக்கு வருவதால் காட்டுகிறேன்!" என்று குறித்து, வைத்திருந்த சின்ன நோட்டுப் புத்தகத்தை எடுத்துக் காட்டினாள்.

அவன் வாங்கிப் பார்க்கையில், சௌமினி விளக்கம் கொடுத்தாள்.

"'ம்யூசிக்கல் சேரை' விட்டுவிட்டோம். கடைசிப் பகுதியில் தோற்கிறவர்கள் ரொம்ப சங்கடப் படுகிறார்கள்

என்று, அந்த விளையாட்டு வேண்டாம் என்று நினைத்தோம்! இதெல்லாம் செட் செட்டாக, அல்லது மொத்தமாக உட்கார்ந்து, எல்லோரும் கலந்து கொள்வது! தனியாக, லோட்டோ, ஆங்கிலத்தில் சிஏஆர், கார் என்று தொடங்கி, நாங்கள் கொடுக்கும் குறிப்புக்கு ஏற்ற வார்த்தைகளை எழுதுவது! இருபதில் அதிக வார்த்தை எழுதுகிறவருக்குப் பரிசு! இப்படிக் கொஞ்சம்!''

''குறிப்புக் கொடுப்பது என்றால்?''

''ஆமாம். மரவேலை செய்கிறவர் என்று குறிப்புக் கொடுத்தால், 'கார்பென்டர்' தரை விரிப்பு என்றால் கார்ப் பெட்! அந்த மாதிரி! அப்புறம், நாலு செட்டாகப் பிரித்து, ஏதாவது பேர் எழுதிய நாலு கட்டத்தில் சுற்றி வர வைத்து, ஏதாவது பேரைச் சொல்லி, செட்டாக அவுட் ஆக்குவது, சின்னப் பிள்ளைகளுக்கு மட்டுமாகப் 'பாசிங் த பக்.' மொத்தமாக எளிய 'க்விஸ்'! அதுவும் குழுக்களாகத்தான்!''

பொதுவாக, மதிவதனியின் நிழலாக அவள் பின்னே ஒதுங்கிக் கொள்கிறவள் சௌமினி. ஆனால், கண்கள் பளபளக்க, உற்சாகத்துடன் அவள் விளக்கியதைப் பார்க்கையில், முன்னவளுக்கு ஆச்சரியத்தோடு, சந்தோஷமாகவும் இருந்தது!

''பரவாயில்லையே! ரொம்பவும் யோசித்து, பிரமாதமாக அமைத்திருக்கிறீர்களே!'' என்று ரஞ்சனும் உற்சாகத்துடன் பாராட்டியதும், அதற்கு சௌமினி முகம் சிவந்ததும் கூட, அந்த வகைதான்!

மெல்ல மெல்ல மற்றவர்களும் வரத் தொடங்கினர்.

அவனுடைய சகோதரியோடு பேசிக் கொண்டு, மணமகன் உதயன் வரவே, ''ஐயோ! நீங்கள் இப்போதே

கேக்கைப் பார்க்கக் கூடாது!'' என்று இரு பெண்களும் கேக்கை மறைத்தவாறு, முன்னே போய் நின்றனர்.

''ஏனோ?'' என்று கேட்ட குரல் வசீகரனுடையது!

''அது...'' என்று அவசரமாக யோசித்து, ''அது.. இரண்டு பேரும் சேர்ந்து பார்த்தால்தான் அதிருஷ்டமாம்!'' என்று சமாளிக்க முயன்றாள் மதிவதனி!

மற்றபடி, ''கேக்கை அவருக்கு முன்னால், நான்தான் பார்க்க வேண்டும்!'' என்று மோகனா சொல்லியிருந்தாள் என்று எப்பிடிச் சொல்வது?

ஆனால் குரலில் இருந்தே கண்டுபிடித்து, ''பொய்! பொய்!'' என்றான் வசீகரன் புன்னகையோடு!

''சேச்சே! பொய் என்று அநியாயமாகச் சொல்லக் கூடாதுப்பா!'' என்று உதவிக்கு வருவது போலச் சொல்லி விட்டு, ''உண்மைக்குப் புறம்பானது என்று வேண்டுமானால் சொல்லலாம்!'' என்று ரஞ்சன் காலை, வார, எல்லோரும் சிரித்தனர்!

''நிஜம்தானே?'' என்று கவலையாகக் கேட்டான் மணமகன். ''அதாவது, மதிவதனி சொன்னதில்லை! வசி சொன்னதுதானே உண்மை? ஆனாலும் திருமண நாளும் அதுவுமாக, அதிருஷ்டத்துக்குச் சவால் விட நான் தயாரில்லைப்பா!'' என்று அவன் அஞ்சும் குரலில் கேட்டது, எல்லோருக்கும், மேலும் சிரிப்பு மூட்டிற்று!

அதற்கு மேல் ''அதில்லை உதயன் சார். இதிலே இன்னும் கொஞ்சம் வேலை இருக்கிறது! கொஞ்சம் பெப்பர் மின்ட் பூக்கள் ஒட்ட வேண்டும். வெட்டுகிற கத்திக்கு ரிப்பன் கட்டி அலங்காரம் பண்ண வேண்....'' என்று சொல்லிக் கொண்டிருக்கும்போதே, மதிவதனியின் முகம்

வெளுத்தது! சமாளித்து "...டும் அதெல்லாம் முடித்த பிறகு வாருங்களேன்! ப்ளீஸ் அக்கா! எல்லோரையும் கூட்டிக்கொண்டு போங்களேன்!" என்று மோகனா வுடைய நாத்தனார் கெஞ்சலாகக் கேட்டுக் கொண்டாள் அவள்.

அவளும் நல்ல விதமாகவே ஏற்று, "ஏய், வாங்களப்பா! சின்னப் பெண்கள். அவர்களாகச் செய்திருக்கிறார்கள்! அவர்கள் விருப்பம்போலச் செய்யலாம்!" என்று எல்லோரையும் அங்கிருந்து அழைத்துச் சென்றாள்!

"மோகனா வருவதற்கு முன்னால், இவர்கள் வந்து வெகு நேரம் காத்திருந்தால் நன்றாக இருக்காது என்று தானே மதி, எல்லோரையும் போகச் சொன்னாய்?" என்று வினவினாள் சௌமினி.

"அப்படியில்லை! ஏதோ முக்கியமான பொருளை, இங்கே கொண்டுவர மறந்துவிட்டு விழிக்கிறாள், உங்கள் மதி! அப்படித்தானே?" என்று, எல்லோருடனும் போவது போலப் போய், அங்கேயே ஒரு தூணின் பின்புறமாக ஒரு நாற்காலியில் அமர்ந்திருந்த வசீகரனின் குரல் கேட்க, இரு பெண்களும் திகைத்து விழித்தனர்!

# 6



திடுமென வசீகரனின் குரல் மட்டும் கேட்கவும், இரு பெண்களுமே அதிர்ச்சியில் துள்ளிக் குதித்தனர் எனலாம்!

ஆனால் அதிர்ச்சியின் அளவும் காரணமும் தான் வேறு!

மணமகன் வீட்டு மனிதர்கள் யாரும் இல்லை என்று எண்ணிப் பேசி, மோகனாவைக் காட்டிக் கொடுத்து விட்டோமா என்ற அதிர்ச்சி மட்டுமே, சௌமினிக்கு!

ஆனால், மதிவதனியின் அதிர்ச்சி வேறு விதம்!

மோகனா கணவன் வீட்டுக்குப் போய்ச் சில நாட்களிலேயே, நேரக் கணக்கு பற்றிய அவளது மதிப்பீடே வேறு என்று அந்த வீட்டாருக்குத் தெரிந்து போய்விடும் என்பதால், அது பற்றிய சௌமினியின் பேச்சை அவள் பெரிதாக எண்ணவில்லை!

ஆனால், செய்திருந்த தப்பைச் சத்தமில்லாமல் சீர் செய்து விடலாம் என்று பார்த்தால், அது மாப்பிள்ளை வீட்டு மனிதர் காதில் விழுந்து விட்டதே என்பதுதான் அவளுக்குப் பெரிதாக இருந்தது!

அதிலும், இருந்திருந்து அந்த வசீகரனின் காதில்!

''முன்னிரவில்தானே, எதையும் மறக்க மாட்டேன்'' என்றான்!

சும்மாவே, அவனுக்குப் பெண் வீட்டாரைப் பிடிக்காது! பிடிக்காதவனுக்குக் குறை சொல்ல, இப்போது, இன்னொரு விஷயம் கிடைத்து விட்டது!

இதையும் மறக்கமாட்டான்! அதுவும், ஒளிந்திருந்து உளவு பார்த்தவன், நிச்சயமாக விடவும் மாட்டான்!

இரு பெண்களும் திகைத்து நோக்க, எழுந்து வந்தபடி, ''என்ன? அதை மறந்து விட்டீர்கள்? தீப்பெட்டியா? கேக் பரிமாறும் தட்டையா? அல்லது...'' என்று விசாரித்தான்.

''தீப்பெட்டி இல்லையானால், யாரிடமாவது லெட்டரை வாங்கிப் பயன்படுத்தலாம்! கேக் தட்டுக்கு, மாலை டிபன் தட்டுகளையே பயன்படுத்தலாம்! ஆனால்...''

"இப்போது வேறென்ன வேண்டும்?"

வேண்டும்தான். இல்லாமல் தீராது!

இரவுச் சாப்பாடு ஹோட்டலில் ஏற்பாடு செய்து, அதைப் பார்க்கத் தந்தை போயிருப்பதால், அவரிடம் சொல்லி வேலையை நடத்திக்கொள்ள முடியாது!

வெளிச்சாப்பாடு என்பதால், சமையல் ஆட்கள் கணக்கு முடித்துச் சென்று விட்டதால், அங்கிருந்தும் கிடைக்காது!

பக்கத்துப் பிள்ளையார் கோயில் பெட்டிக்கடையில் கிடைக்கும் பொருளும் அல்ல!

எனவே, இவன் மூலமாகத்தான் ஏதாவது செய்ய முடிகிறதா என்று பார்க்க வேண்டும்!

அந்த ரஞ்சனாக இருந்தால், எளிதாகப் போயிருக்கலாம்!

ஆனால் இப்போது, வேறு வழியில்லை! இவனிடம் தான் கேட்டாக வேண்டும்! நடப்பது நடக்கட்டும்!

"கத்தி!" என்றாள் மதிவதனி சின்னக் குரலில்!

சட்டெனக் கண்கள் பளிச்சிட, "என்னது? கொஞ்சம் கத்..திச் சொல்கிறாயா? காதில் விழவில்லை! கத்..த்..தி!" என்று முறுவலித்தான் வசீகரன்.

அவனுக்கென்ன சிரிக்கிறான் என்று எண்ணியபோதும், "க..த்..தியா? இதற்கு மேல் கத்திப் பேச நம்மால் ஆகாதுப்பா! அப்புறம், நான் கத்திப் பேசுவதைக் கேட்டுவிட்டு யாராவது வந்து, பெண்கள் இப்படிக் கத்திப் பேசுவதா என்று சொற்பொழிவு ஆற்றத் தொடங்கி விடுவார்கள்! ஆனாலும் தேவை என்பதால், இந்த ஒரு தடவை கத்திச் சொல்கிறேன்! எனக்கு இப்போது உடனடித் தேவை ஒரு கத்தி! கேக் வெட்ட!" என்று, அதே பாணியில் பதில் சொல்லாமல் அவளால் இருக்க முடியவில்லை!

வாய் விட்டுச் சிரித்து, ''அடேயப்பா! அதற்காக, ஆறு 'கத்தி'யா?'' என்றான் அவன்.

அதன் பிறகே விஷயம் புரிந்து, ''ஐயோ! கத்தி கொண்டு வரவில்லையா? அச்சச்சோ! கேக் வெட்டுகிற அலங்காரக் கத்தி என பிறந்த நாளைக்குக் கேக்கோடு எடுத்துப் போனது. எங்கள் வீட்டில் அல்லவா, இருக்கிறது! உடனே கொண்டு வந்து தராமல், என் தப்பு! இப்போது என்ன செய்வது? போய் எடுத்து வரக்கூட நேரம் இல்லையே!'' என்று கவலைப்படத் தொடங்கினாள் சௌமினி!

அவளது கண்கள் கலங்குவதைப் பார்த்ததும், ''ஷ், சௌமி! அதற்காக அழாதே! கண்மை கரைந்து, கண்ண ராவி ஆகிவிடும்! அதைவிட, இப்போது, கத்திக்கு என்ன செய்யலாம் என்று யோசிப்பது மேல்!'' என்றாள் மதி வதனி அழுத்தமான குரலில், தெளிவாக.

சௌமினியும் உடனே கலங்குவதை நிறுத்தி, யோசிக்கத் தொடங்கி, ''ஆனால் என்ன செய்ய முடியும், மதி? சமையல் ஆட்களும் போய் விட்டார்களே! வேறு யாரிடம் கத்தி இருக்கும்?'' என்று குழப்பத்துடன் வினவினாள்.

''ஏன்? சமையல் செய்கிறவர்கள் மட்டும்தான் கத்தி வைத்திருப்பார்களா?'' என்று வசீகரன் கேட்ட விதத்திலேயே மனம் லேசாகிவிட, ''என்ன செய்வது? 'காட்டு வழியானாலும், கள்ளர் பயமானாலும் நான் பார்த்துக் கொள்வேன்' என்று ஆண்கள் வீர சிங்கங்களாகக் கத்தி, கபடாவோடு வாழ்ந்த காலம்தான் மலையேறி விட்டதே! இனி, நாங்கள்தான் கத்தியையும் ஏந்தவேண்டும் போல! ஒரு மிரட்டு மிரட்டியும் வைக்கவும் உதவும்!'' என்றாள் மதிவதனி.

''ஆஹா, என்ன ஐடியாப்பா! பெண் பயங்கரவாதி களைப் பற்றிய செய்திகளை இனி நான் முழுமையாக நம்புவேன்! கத்தி மேல், உள்ளூர இவ்வளவு காதல் இருக்கிறதே!'' என்றான் வசீகரன்.

''என்ன செய்வது? தேவை அப்படி!'' என்று ஒத்துப் பாடிவிட்டு,'' சொல்லுங்கள், இப்போது கத்திக்கு என்ன செய்வது?'' என்று மீண்டும் விஷயத்துக்குள் வந்தாள் மதிவதனி.

''பரவாயில்லை! விட்டு விடாமல் விஷயத்தைப் பிடித்து விட்டாயே!'' என்று சிலாகித்து விட்டு, ''கத்தி இருக்கிறது. வெட்டவும் செய்யும்! ஆனால், இங்கே எந்த அளவுக்குப் பயன்படுமோ, தெரியாது! ஏனென்றால், அளவு சிறியது. பழம் வெட்டுகிற கத்தி,'' என்றான் அவன்.

''ஏதோ வெட்டக் கூடியது என்றால், அது போதுமே! கேக்கைக் கையால் பிய்த்துக் கொடுக்க முடியாதல்லவா?'' என்றாள் மதிவதனி.

''களுக்''கென்று சிரித்து, உடனே கையால் வாயை மறைத்து, ''சாரி வதனி! மனதிற்குள் மோகனா அப்படிக் கோபத்துடன் கையால் கேக்கைப் பிய்த்து, எல்லோருக் கும் கொடுக்கிற மாதிரிக் கற்பனை தோன்றி விட்டதா? தா... தானாகச் சிரிப்பு வந்து விட்டது! அப்படி நினைத் திருக்கக் கூடாது... சாரிப்பா!'' என்று மறுபடியும் வருத்தம் தெரிவித்தாள் சௌமினி.

சித்தி பெண் சொல்லச் சொல்ல மனதில் தோன்றிய அந்தத் தோற்றத்தில், மதிவதனிக்கும் சிரிப்புதான் வந்தது! ஆனால், ஏதோ பெரிய மனது பண்ணி உதவிக்கு வந்திருக் கும் வசீகரனுக்கு, அது அசட்டுத்தனமாகத் தோன்றி

விடக் கூடாதே என்று அடக்கிக் கொண்டு நிற்க, வசீகரன்தான் சட்டெனச் சிரித்தான்!

''பளபளவென்று பார்ட்டி சேலையை இழுத்துச் சொருகிக் கொண்டு, 'மெஹந்தி' போட்ட கையெல்லாம் க்ரீமாக... பரவாயில்லை! உன் சித்தி பெண் அருமையாகத் தான் கற்பனை செய்கிறாள்!'' என்று மேலும் சிரித்தவாறே அவன் கத்தியை எடுத்து வரக் கிளம்ப, இரு பெண்களும் சேர்ந்து சிரித்தார்கள்!

வசீகரன் கொண்டு வந்து கொடுத்த கத்தியைப் பார்த்த இரு பெண்களும் திகைத்தனர்!

முழுவதுமாகப் பத்துப் பதினைந்து சென்டிமீட்டர் நீளமே இருந்த இந்தக் கத்தியைக் கொண்டு, மூன்று அடுக்கான இந்தப் பெரிய கேக்கை எப்படி வெட்டுவது?

பேசாமல் இந்த அத்தை ஏதாவது பேக்கரியில் கேக் ஆர்டர் கொடுத்திருக்கலாம்! பேக்கரி என்றால், கத்தி, மெழுகுவர்த்தி எல்லாம் கொடுத்திருப்பார்கள்! செலவுக் குப் பார்த்து, வீட்டில் செய்யச் சொல்லி...

ஆனால், இப்போது அதை நினைத்துப் பயன் இல்லை!

இதை இப்படியேயும் கொடுக்க முடியாது! வசீகரன் சொன்னது போலக் கையெல்லாம் க்ரீமாகி விடும்! மோகனா கத்துவாள்!

முன் பகுதியை வைத்து வெட்டிக் கொள்ளலாம் என்றாலும்...

சட்டென மதிவதனியின் முகம் மலர்ந்தது!

வசீகரனைப் பார்த்து, ''ரொம்ப நன்றி, வசி!'' என்றவள் சௌமினியிடம் திரும்பி, ''அத்தை அறையில் பரிசுப்

பொருட்கள் சுற்றி வந்த அலங்காரக் காகிதங்கள் கிடக்கும். அதில், அழகானதாய், பெரிதாகவும் இருப்பதாகச் சிலதை எடுத்து வா. ஏதாவது குச்சி, பட்டை வைத்துக் கட்டி, கைப்பிடியை நீளமாக்கி, அதை அலங்காரக் காகிதம் சுற்றி அழகாக்கி விடலாம். கொஞ்சம் பார்த்து வெட்டும்படி, மோகனாவிடம் சொல்லிவிடலாம். ஒன்றிரண்டு.. முக்கிய மாக அவையே கொடுப்பதற்காக வெட்டி முடித்ததும், அப்புறம் நாமே பார்த்துக் கொள்ளலாம்!'' என்று அவள் வேகமாகத் திட்டமிட, மலர்ந்த முகத்துடன் சௌமினி, சுந்தரியின் அறைக்கு ஓடினாள்!

அவள் வேகமாகச் செல்வதைக் கவனித்துப் பார்த்தான் வசீகரன்.

''அடேயப்பா! நீ என் எனுமுன் எண்ணெயைக் கொண்டு வந்து, தந்து விடுவாள் போலிருக்கிறதே! இந்த ஓட்டம் ஓடுகிறாள்!'' என்று வியந்தான் வசீகரன்.

ஊடுபாவாகப் பழைய ஏளனம் தலை காட்டுவதாகத் தோன்றியது, மதிவதனிக்கு.

ஆனால், உதவிக்கு வந்தவனோடு சண்டை போடக் கூடாது என்று தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டு, ''நிலைமையின் அவசரம் தெரிந்தவள் ஓடுகிறாள்!'' என்றபடி, கத்திப் பிடியை நீட்டுவதற்கு ஏற்றதாக என்ன கிடைக்கும் என்று தேடினாள்.

பூ அலங்காரம் செய்த இடத்தில், சூரியனின் கிர ணங்கள் மாதிரி ஒட்டியிருந்த சில குச்சிகளை, ஓடிப்போய் எடுத்து வந்தாள் அவள்.

தேவைப்பட்ட நீளத்தில் இருந்த குச்சிகளை எடுத்துக் கத்திப் பிடியின் மேலும் கீழுமாக அவள் வைக்க, அதை அசையாமல் இறுகக் கட்டிக் கொடுத்தான் அவன்.

vings)

வேலை நடக்கும்போதே, "நிழல் மாதிரி உன்னோடு சுற்றுகிறாள், அட்சதைத் தட்டைத் தூக்கிக் கொண்டு, ரஞ்சியோடு போக விட்டாயே! தடுப்பதுதானே?" என்று குற்றம் சாட்டினான் வசீகரன்.

எப்போது சொல்ல என்று யோசித்துக்கொண்டே இருந் திருப்பான் போல!

எரிச்சலை அடக்கி, "நிழலாக இருந்தால் பிரிந்து போயி ருக்க மாட்டாளே!" என்று இலகுவாகப் பேச முயன்றாள் மதிவதனி.

ஆனால், "பேச்செல்லாம் பிரமாதமாகத்தான் இருக்கிறது! ஆனால், நான் அவ்வளவு சொல்லியும், உன் செளமினியை ஏன் தடுக்கவில்லை?" என்று, அவன் அதிலேயே நிற்க்வும் அவளுக்கும் கோபம் வந்தது!

"முதல் திருத்தம், அவள் என் செளமினியில்லை. என் ஒன்றுவிட்ட சகோதரி செளமினி. அதற்கு மேல் எனக்கு உரிமையில்லை! இரண்டாவது, அதென்ன 'அவ்வளவு சொல்லியும்?' ஏன் இவ்வளவு என்னிடம் சொல்கிறவர், உங்கள் தம்பியை... அல்லது அண்ணனா? அந்த ரஞ்சனிடம் நீங்களே சொல்லித் தடுப்பதுதானே?" என்று பதிலுக்குக் கேட்டாள்.

"அந்த மேடையில் வைத்து எப்படி முடியும்?"

"என்னால் மட்டும் எப்படி முடியும்?"

ஒரு வினாடி திகைத்து, "ஓ!" என்றான் வசீகரன்.

ஆனால் உடனேயே, "சரி. அது போகட்டும். ஆனால், இப்படி நடக்காமல், இனியேனும் பார்த்துக் கொள்!" என்று அவன் சற்று அழுத்தமான குரலில் கூறிய விதம் ஆத்திர மூட்ட, "எனக்கு மறந்து விடும்! அதனால், நீங்களே

உங்கள் ரஞ்சனிடமே சொல்லிக் கொள்ளுங்கள்!'' என்று வெடுக்கெனக் கூறி முடித்தாள் மதிவதனி.

''இந்தப் பெண் இன்னும் என்ன செய்கிறாள்?...'' என்று சௌமினி சென்ற வழியே எட்டிப் பார்த்துவிட்டு, ''பார்த்துக் கொள்ளுங்கள்! நீங்கள் சொன்ன நிழல்! என்னை அம்போ என்று இங்கே பேச்சுக் கேட்க விட்டுவிட்டு, ஆளையே காணோம்!'' என்று எரிச்சலாக முணுமுணுத்தாள்!

அவளது பேச்சின் கடைசிப் பகுதியை அப்படியே விட்டுவிட்டு, ''ஆமாம். அவள் சென்று நிறைய நேரம் ஆகிறதில்லை? நம் கண்ணில் படாமல், அந்தப் பக்கமாக ரஞ்சன் சென்றிருக்க வாய்ப்பில்லையே? ஒரு வேளை, பின் பக்கமாக ஏதாவது வழி... முறைக்காதே! உன் சித்தி பெண்ணின் தாமதத்துக்குக் காரணம் தேடினேன்! மற்றபடி, அப்படி ஏதும் நடந்திருந்தால், எனக்கு அது, கொஞ்சமும் பிடிக்காததே!''

இன்னமும் ஏதும் பேசி, இருவருக்கும் இடையே சண்டையே மூளு முன்பாக, வசீகரனின் செல்போன் பாடத் தொடங்கியது!

அந்தப் பக்கம் சௌமினியின் தலையும் தெரியவே, ''பரவாயில்லை. உனக்கு நிழல் வந்தாயிற்று!'' என்று கையைத் தூக்கி, லேசாக சலாம் போலக் காட்டி விட்டு, அங்கிருந்து அகன்றான் வசீகரன்.

நிறையச் சொல்லித் துடித்தபடி வந்தாள் சௌமினி.

நல்லவேளையாக செல்லில் பேசுவதற்காக வசீகரனும், தூரச் சென்று விடவே, தயக்கமற்று மடமடவென்று கொட்டித் தீர்த்தாள்.

JJ(3)

''மதி, அங்கே மோகனாவுக்கு ஒரே கோபம்! எப்போது தயாராகி வருவாளோ, என்னமோ, ஒன்றும் தெரிய வில்லை! சேலையை அவிழ்த்து வீசிவிட்டு, வெறும் பிளவுஸ் பாவாடையோடு நிற்கிறாள்!''

''ஏனாம்?'' என்று, அலங்காரக் காகிதத்தைக் கத்தியின் கைப்பிடியின் மீது கவனமாகச் சுற்றியபடி, கேட்டான் மற்றவள். ''அவளுக்கு யாரிடம், என்ன கோபமாம்!''

''சேலை மீது! உடம்போடு சரியாகப் படியவில்லை யாம்!''

''என்னது? அம்மா அப்படிச் சந்தேகமாகச் சொன்ன போது ஒத்துக் கொள்ளாமல், இந்தச் சேலைதான் வேண் டும் அவள்தானே, பிடிவாதமாக எடுத்தாள்!''

''ஆனால், சேலை இப்போது, உடம்போடு இன்னொரு தோலைப் போல ஒட்டி நிற்கவில்லையாம். நம் இரண்டு பேருக்கும் பார்த்துப் பார்த்து அலங்காரம் செய்து விடுகிற பெரியம்மா அது போல அவளுக்குப் பண்ணவில்லை யாம்! இதுபோல எத்தனையோ புலம்பல்! சமயத்துக்கு நான் வேறு போய்ச் சேர்ந்தேனா? பாவம் பெரியம்மா! என்னைக் காட்டியே திட்டுகிறாள்.

''நம்மை ஒல்லியாகக் காட்ட, இது போல நீளமாகப் பாவாடை கட்டிவிட்டுவிட்டு, அவளுக்கு மட்டும் சேலையா என்கிறாள்!

''நீ கல்யாணப் பொண்ணும்மா., தனியாகப் பளிச்சென்று தெரிய வேண்டாமா, அதற்காகத்தானே, இவ்வளவு வேலைப் பாடு உள்ள சேலையைத் தேடி அலைந்து வாங்கியதே என்றெல்லாம் பெரியம்மா சமாதானமாகச் சொல்லிக் கொண்டு இருந்தார்கள்!

''நல்லவேளையாகப்பா, சுந்தரியத்தை அவளோடு சேர்ந்து கொள்ளவில்லை! அவர்கள் நினைத்த அளவு, நம் உடையில் பளபளப்பு இல்லை என்று நினைத்தார்கள் போல! கிறிஸ்டல் நகை, கண்ணாடி வளையல் எல்லாம் பார்த்ததும் அவளுக்குச் சப்பிட்டு விட்டது! வைரநெக்லசும் வளையலும் போட்டுக் கொண்டாலே, எல்லாரையும் விட, டாப்பாகத் தெரிவாய் என்று மோகனாவுக்கு ஐஸ் வைத்து, சமாதானப்படுத்தினார்கள்! அதன் பிறகுதான், மோகனாவின் சத்தம் நின்றது!

''அதற்கும் பிறகுதான் மெல்ல அத்தையிடம் கேட்டு, இந்தக் காகிதங்களை எடுக்க முடிந்தது! என்ன, எதற்கு என்று கேட்டுவிட்டு எடுத்துக் கொள்ளச் சொன்னார்கள்.

''மோகனாவும், அத்தையும் வந்ததும், இங்கே கேக் வெட்டுவது, விளையாட்டு எல்லாம் வரிசையாகக் கடகட வென்று நடத்திவிட வேண்டுமாம்! உணவு முடிந்து, அவர்கள் கிளம்ப வேண்டுமாம். அதனால் தாமதம் பண்ணக் கூடாதாம்! சொல்லி அனுப்பினார்கள்!'' என்று நீளமாகச் சொல்லி முடித்தாள் சௌமினி!

சொல்லி முடித்துவிட்டு, ''அப்பாடியோவ்! மணிக்கணக்காய், எவ்வளவு பெரிய சொற்பொழிவாற்றி இருக்கிறேன்! காய்ந்த தொண்டைக்கு, ஒரு குட்டி பாட்டில் கோக், பெப்சி கூடத் தர மாட்டாய் போல இருக்கிறதே!'' என்று கண் சிமிட்டிச் சிரித்தாள்!

புதுப் பூவாய்ச் சிரித்தவளைப் பார்த்தபோது, இவளைப் போய், என்னென்னவோ சொல்கிறானே என்றிருந்தது மதிவதனிக்கு. சேர்ந்து முறுவலித்து, ''ஓஹோ! அங்கே, அவ்வளவு களேபரம் நடக்கிறது! இங்கே அம்மை யாருக்குக் கோக்கும், பெப்சியும் வேண்டுமாக்கும்! ஏன்,

பாண்டா, மிருண்டா, மாசா, ஸ்லைஸ் இதெல்லாம் கூடச் சேர்த்துக் கேட்டிருக்கலாமே!'' என்று சித்தி மகளைச் செல்லமாக வைதாள்.

''களேபரம்தான் வைர வளையலில் சத்தமில்லாமல் அடங்கி விட்டதே! அப்புறம் குறை என்னவாம்? நியாயத் துக்கு, அங்கே அடித்துக் கொண்டிருந்த புயல் மழைக்குப் பயந்து ஓடி வந்து விடாமல், நின்று, காரியத்தைச் சாதித் துக் கொண்டு வந்திருக்கிறானே என்று, இதையெல்லாம் வரிசையாக வைத்து, ''எது வேண்டும் சொல் மகளே'' என்று நீ கேட்டிருக்க வேண்டும்! அதை விட்டு, இப்படித் தொண்டை வறண்டே சாக விட்டுவிடுவாய் போலிருக் கிறதே!'' என்று சௌமினி அளக்க, இருவருக்குமே சிரிப்பு வந்து விட்டது!

கிண்கிணியாக அந்தச் சிரிப்புச் சத்தம் அவர்களுக்கே இனிமையாக இருக்க, புன்னகையோடு, மீதியிருந்த சின்னச் சின்ன வேலைகளைப் பரபரவென்று முடித்தார்கள்!

வேலை முடிந்ததும் அப்பாடி என்று உட்கார்ந்து, ''இந் தக் கத்திக்காக, மோகனா எப்படியும் கத்தப் போகிறாள் என்று நினைத்தேன்! அவள் வைரம் அணிந்து, நாம் இப்படிக் கண்ணாடியும் கிறிஸ்டலுமாக அணிந்திருப்பது, அதை நிறுத்தப் போகிறது என்கிறாய்! கடவுள் அருளால், அப்படியே ஆகுக!'' என்று ஆசீர்வதிப்பது போல மதிவதனி கூறவும், அங்கே இன்னொரு முறை சிரிப்பு வெடித்தது!

''ஆஹா! இது என்ன இனிய ஒலி? இங்கே ஜோடி வீணை மீட்டுகிறார்களா? அல்லது வெள்ளிச் சலங்கையைக் குலுக்குகிறார்களா? அதை ஆராய வந்திருக்கும் என்னை ஏமாற்றி விடாமல், இன்னொரு தரம் அதே போல ஒலியெழுப்பி அருள வேண்டும் ம்ம்... அருள வேண்

டும்... அம்மையார்க.. ஊகூம், அது சரியில்லை! உங்களைப் போய், யாராவது 'அம்மையார்கள்' என்பார்களா? சரியாகச் சொல்வதானால், ஏஞ்சல்கள்! ஏஞ்சல்களாவுக்குத் தமிழ் என்னப்பா? யாராவது, எனக்குச் சொல்லித் தாருங்களேன்!'' என்று, அங்கே வந்து அமர்ந்து கொண்டு, ரஞ்சன் கேட்டான்.

''தேவதைகள்ப்பா!'' என்று கூறி சௌமினி நகைக்க, அவளோடு மதிவதனியும் சிரிக்க, ரஞ்சனும் அதில் சேர்ந்து கொண்டான்.

போன் பேசிவிட்டுத் திரும்பி வந்த வசீகரனின் கண்களில் இந்தக் காட்சி பட்டு, ஏமாற்றத்தோடு, ஆத்திரத்தையும் அளித்தது!

என்ன இவள்? எத்தனை முறை சொன்னாலும் புரியாதா?

இந்த ஒரு மோகனாவால், அவள் உள்ளே நுழைகிற அந்தக் குடும்பம் என்ன பாடு படப் போகிறதோ?

அதன் விளைவாக, இனி உதயன் என்ன கஷ்டப் படப் போகிறானோ என்று அதுவே, பெரிதாக இருக்கையில், இங்கிருந்து இன்னொருத்தியுமா?

லட்சுமி அத்தையாவது பொறுத்துப் போய் விடுவார்கள்! அமைதியான குணம்!

ஆனால், சித்தி ஆனந்தி, ரஞ்சனுடைய தாயார் அப்படி இல்லையே! வீடு ரணகளமாகி, ஊரெல்லாம் நாறிவிடும்!

அதைச் சொன்னால், அந்தப் பெண் சௌமினியைத் தடுக்காமல், இந்த மதிவதனிக்கு ஏன் இந்த மூடத்தனம்?

ஆனால், அவள் ஒத்துழைக்காவிட்டாலும், எப்படியும் இந்தக் குடும்பத்தில் இன்னொரு தப்பான திருமணம்

நடக்க, அவன் நிச்சயமாக விட மாட்டான் என்பது, மதிவதனிக்கு ஒரு நாள் புரியத்தான் போகிறது!

# 7

**வ**சீகரனின் மனதில் என்னென்ன எண்ணங்கள் ஓடின என்பதை அறியாததால், மதிவதனி மிகவும் உற்சாக மாகவே இருந்தாள்.

அழைக்கப்பட்டிருந்த நெருங்கிய உறவினர்கள் எல் லாரும் ஒருவர் பின் ஒருவராக வரத் தொடங்கினார்கள்!

மோகனா வரத் தாமதம் ஆனதைக்கூட, யாரும் பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை!

உறவினருள் யார், யார் எவ்வளவு தாமதமாக வந்தார்கள் என்று வேடிக்கை பேசிக் கொண்டிருந்தார்கள்.

வரவேற்புக்குப் பெண், மணிக்கணக்கில் தாமதமாக வந்தபோது, மாப்பிள்ளை சோபாவில் உட்கார்ந்தே தூங்கி விட்ட கதையை ஒருவர் சொல்ல, சற்று நேரம் எல்லோரும் சிரித்தனர்.

பந்தா பாராமல் இந்த வீட்டு இளையவர்களும் சேர்ந்து, நாற்காலிகளைத் தூக்கித் தேவைப்படி அடுக்கி வைத்தனர்!

உணவு வந்து, அது ஒரு பக்கம் சூடாகக் கமகமத்துக் கொண்டிருந்தது!

நன்றாக மூக்கால் காற்றை இழுத்து, ''ஆஹா! என்ன வாசம்! என்ன வாசம்! நான் இருமடங்கு சாப்பிடப் போகி றேன்!'' என்றார்கள் யாரோ!

''ஆனால், எப்போது சாப்பிடுவது?'' என்ற அவரது கேள்விக்கு, யாருமே பதில் சொல்லவில்லை!

தாமதம் பற்றி யாராவது பேசப் பேச, மதனின் முகம் கன்றுவதைப் பார்த்துவிட்டு, அவனை அருகே அழைத்து, ''பெரிய விஷயம் ஒன்றும் இல்லையப்பா! எதற்கும் சுடி, ஜீன்ஸ் என்று அணிவதால், இன்றையப் பெண்களுக்குச் சேலை கட்டுவது, பெரிய வேலையாகிப் போகிறது! கொஞ்சம் நேரம் ஆகத்தான் செய்யும்! அதை யாரும் தப்பாக எண்ண மாட்டார்கள்! சும்மா ஒரு கேலி, கிண் டலை, நீயும் பெரிதாக நினைக்காதே!'' என்று மோகனா வுடைய மாமியார், அவனிடம் இதமாகப் பேசுவதைக் கவனித்த மதிவதனிக்கு 'வாவ்' என்று இருந்தது!

மருமகளுடைய தம்பியையே இப்படி நடத்துகிற வர்கள், மருமகளை எவ்வளவு நன்றாக வைத்துக் கொள்வார்கள்!

அம்மாவும் அப்பாவும் சொல்வது போல, மோகனா அதிருஷ்டக்காரிதான்!

நகரில் சற்றுப் பெரிய நகைக்கடை 'குரூப்' குடும்பம் ஒன்றில் மருமகளாகச் செல்வதும், அந்தக் குடும்பத்தார் இவ்வளவு நல்லவர்களாக இருப்பதும், நிச்சயம் அதிருஷ் டம்தானே?

சுந்தரி அத்தை வீடும் ஓரளவு வசதி உள்ளதுதான் என் றாலும், 'கற்பகம்' குரூப் நகைக் கடையினரின் செல்வ வளத்தைக் கணக்கிட்டால், ஏணிப்படியின் அடித்தளம் தான்!

அவர்களது செல்வ வளத்தை விடவும், பந்தாவே காட்டாமல் அவர்கள் பழகிய விதம்தான் மதிவதனிக்குச் சிறப்பாகத் தோன்றியது!

எண்ணமிட்டபடி இருந்தவளுக்கு ஏதோ இடித்தது!

எல்லோருமே பந்தா இல்லாதவர்கள் என்று எப்படிச் சொல்ல முடியும்? ஒருத்தன் இருக்கிறானே! அவனுக்குப் பந்தா இல்லாவிட்டால், இந்த அருமையான காதல் திருமணத்தைத் திட்டமிட்டு, மணமகனை முட்டாளடித்துச் செய்த திருமணம் என்று, எப்படிச் சொல்ல முடியும்?

எண்ணத்தின் நாயகனிடம் தன்னை அறியாமல் பார்வை செல்ல, கல்லாக இருந்த அவனது முகமே, அவளது கருத்தை உறுதி செய்தது!

கல்லாக என்றால், அதற்காக வசீகரன் முகத்தைச் சுளித்துக் கொண்டெல்லாம் இருக்கவில்லை! சூழ்நிலைக்குத் தக்கபடி அருகில் இருந்தவர்களோடு சிரித்துப் பேசிக் கொண்டுதான் இருந்தான்!

ஆனால், உதட்டோடு கண்களும் சேர்ந்து சிரிக்கவில்லை!

மற்றவர்கள் அதைக் கண்டு பிடித்தார்களோ, என்னவோ, அவனது முழுமையான சிரிப்பை ஓரிரு முறை பார்த்து... உள்ளூர ரசித்தும் விட்டிருந்ததால், மதிவதனிக்கு வேறுபாடு தெளிவாகவே தெரிந்தது!

இப்படி இருக்கிறானே என்று வருத்தமாகவும் இருந்தது!

ஆனால், போகட்டும்! இவன் எந்த அளவுக்குப் பந்தாக்காரனாக இருந்தாலும் இருந்துவிட்டுப் போகட்டும்! இவன் ஒன்றும் இந்த உலகத்துக்கே ரட்சகன் அல்லவே! அதிக பட்சமாக, அவன் வகைக் குடும்பங்களுக்குக் கூட இல்லைதான்!

மற்றவர்களுக்கும் மூளை இருக்கும். தனக்கு நல்லது, கெட்டது எது என்று அறியும் திறமும், அறிந்தபடி

அவரவர் வாழ்வை நடத்திக் கொள்ளும் உரிமையும்கூட உண்டு!

அதில் அனாவசியமாகத் தலையிட்டு, அசட்டுப் பட்டம் கட்டிக் கொள்வதானால், அது அவனது விருப்பம்! விருப்பம் போல நடந்து, நன்றாகப் படட்டும்!

அதைப் பற்றி, அவளுக்கு ஒன்றுமில்லை!

கொஞ்சம் சிரமமாக இருந்தபோதும், முயன்று சமாளித்துக் கொண்டு, மதிவதனி மற்ற வேலைகளில் கவனத்தைச் செலுத்தலானாள்.

இந்த கேக்கிலிருந்து, கேளிக்கை விளையாட்டுகளின் பொறுப்பையும், அவளும் மற்ற இளந் தலைமுறையினருமே ஏற்றிருந்ததால், சிறிது நேரத்திலேயே அதில் முழு மனதையும் அவளால் செலுத்த வேண்டியதாகவும் நேர்ந்தது!

மோகனா வந்தபோது, முதலிலேயே அவளிடம் ஓடிப் போய், அவளது வைர நகைகளின் அழகு பற்றி ஐஸ் வைத்துவிட்டு, கத்தியைப் பற்றி மெல்லச் சொன்னாள்.

"அது பார் மோகி, பேக்கரியில் செய்யச் சொல்லிச் சொல்லி, அவர்களே அலங்காரக் கத்தி அனுப்பியே பழகிப் போய் விட்டதா? கத்தியைப் பற்றிய நினைவே வரவில்லை! ஆனால், உன் புகுந்த வீட்டு ஆட்கள் கில்லாடிகள்ப்பா! யாரோ கத்தி கொடுத்தார்கள். ஆனால் பழம் வெட்டுகிற கத்தி! சமயத்துக்கு அதுவேனும் கிடைத்ததே! ஆனால், கேக் வெட்டும்போது உன் கையில் க்ரீம் பட்டு விடக் கூடாதே என்று, கத்தியின் கைப்பிடியைக் குச்சி வைத்துக் கட்டி, நீட்டி வைத்திருக்கிறோம். அதில் கட்டியிருக்கிற 'ஸாடின் ரிபன் போ' இருக்கும் இடத்தில் மட்டுமாகக்

கத்தியைப் பிடித்து, கேக்கை வெட்டு, எக்குத் தப்பாக உதயன் கத்தியை எடுத்து விடாமல் பார்த்துக் கொள். அந்த இடத்தில் கத்தியின் பிடி உடைந்து என்னமும் ஆனால், நீதானே அசடு வழிய நேரும்? ஒரே ஒரு துண்டு, உங்கள் இருவருக்குமாக வெட்டிவிட்டுத் தந்துவிடு! மற்றதை நான் சமாளித்து விடுகிறேன்!'' என்று அவளுக்குத் தகுந்த விதமாக மதிவதனி கூறவும், அவளும் தலையை ஆட்டி, அதன்படியே நடந்து கொண்டாள்!

ஆனால், அதற்கு முன்னால், ''வதனி, நன்றாகப் பார்த்து நிஜத்தைச் சொல்லு! எனக்குச் சேலை, அலங் காரம் எல்லாம் நன்றாக இருக்கிறதா? குண்டாக, அசிங்க மாகத் தெரியவில்லையே?'' என்று தன் சந்தேகத்தைக் கேட்டுக் கொண்டாள் அவள்.

இந்தக் 'குண்டு'க் கவலையெல்லாம், வெளிநாட்டுச் சாக்லேட்டுகளைப் பெட்டி பெட்டியாக விழுங்கும் போது இருந்திருக்க வேண்டும் என்று நினைத்தாலும், மதிவதனி, அவளிடம் அதைச் சொல்லாமல், மறைத் தாள்.

அத்தோடு, கொஞ்சம் மெலிந்தால் இன்னமும் அழகாக இருக்கும்தான் என்றாலும், மோகனாவை ஒரேயடியாகக் குண்டு என்று சொல்லிவிட முடியாது! சற்றுப் பூசினாற் போல உடம்பு எனலாம். அதனாலேயே, சருமம் பளபள வென்று இருக்கும்!

ஆனால் அதைச் சொன்னாலும் தப்பாகி விடும் என்பதால், ''அசிங்கமாகவா? நீயா? என்னப்பா, பேத்தல் இது? இந்தச் சேலை நிறத்துக்கும் உன் வைர நகைகளுக்கும் தூக்கி அடிக்கிறது! உதயன் தலை சுற்றி விழப் போகிறார், பார்! ஏய்ய்ய்! ஞாபகமாய், அவருக்கு மயக்கம் தெளிவிக்க

ஒரு பாட்டிலில் தண்ணீரைப் பக்கத்தில் வைத்துக் கொள்ள வேண்டும்பா!'' என்று அவள் பாவனையோடு கூறவும், மோகனாவின் முகம் பூரித்து, வெகு அழகாகச் சிவந்தது!

''ச்சு! போப்பா!'' என்று அவள் வெட்கத்தோடு உரைத் ததை, மதிவதனி மெய்யாகவே ரசித்தாள்!

அவள் சொன்னதைப் பொய்யாக்காமல், உதயன் புது மனைவியை விழுங்குவது போலப் பார்க்கவும், அவள் வெட்கமும் மகிழ்ச்சியாக மாமன் மகளைப் பார்த்து முறு வலிக்க, மற்றவளுக்கும் சந்தோஷமாக இருந்தது!

ஏற்கனவே சொல்லியிருந்தது போல, ஒரே ஒரு துண்டை வெட்டிக் கொண்டு அவள் கத்தியை மதிவதனி யிடம் தந்துவிட, கேக்கைத் துண்டு போடும் வேலை யில், அவள் மும்முரமாக முனைந்தாள்.

மூன்று கேக்குகளைச் செய்து, அவைகளை மூன்று அடுக்காக, இடையில் க்ரீம் தடவி ஒட்டியது அவளே என்பதால், கத்தி கூர்மையாக இருந்தது வசதியாக அதைச் சரியான அளவில் அழுத்தி, வேகமாகத் துண்டுபோட அவளால் முடிந்தது!

சாப்பாடு பரிமாறுகிறவர்களிடம் ஏற்கனவே கடன் வாங்கி வைத்திருந்த இடுக்கியால், மதிவதனி வெட்ட வெட்ட, சௌமினி பேப்பர்த் தட்டுகளில், தட்டுக்கு ஒன்றாக வைத்து, பக்கத்து மேஜையில் இருந்த பெரிய மரத் தட்டுகளில் வரிசையாக வைத்தாள்.

பெருமளவு தட்டுகள் தயாரானதும், கேக் வெட்டு வதை நிறுத்திவிட்டு, டிஷ்யூ பேப்பர் நாப்கின்கள் இருந்த பாக்கெட்டை மதிவதனி எடுக்கப் போனால், அவளுக்கு

முன்பாக வசீகரன் அதைப் பிரித்து, ஒவ்வொரு தட்டின் அடியிலும் ஒவ்வொன்றாக வைத்துக் கொண்டிருந்தான்.

அவளைப் பார்த்து முறுவலித்து, "மின்னல் வேகத்தில் வேலை நடக்கிறதே!" என்றான் பாராட்டுதலாக.

உண்மையான பாராட்டு! உண்மையான சிரிப்பு!

இவனை என்ன வகையில் கணிப்பது?

பதிலாக முறுவலிக்க முயன்றபடி, ஒரு ட்ரேயை அவள் எடுத்தாள்.

அதற்குள் முன் ஏற்பாட்டின்படி, மோகனாவுடைய தம்பி மதன் ஓடி வந்தான். "சாரிக்கா. லேட் பண்ணி விட்டேன். உன் பூச்செண்டை எல்லாருக்கும் கொடுத் தேனா? அத்தானுடைய அக்கா நன்றாக இருக்கிறது என்று. அப்படியே பேசி..." என்றவனின் பேச்சில் குறுக் கிட்டு, "அதை அப்புறம் சொல்லுடா. இப்போது தட்டைத் தூக்கிக் கொண்டு கிளம்பு!" என்றாள் மதிவதனி.

"நாங்களும் உதவலாம்தானே?" என்று ரஞ்சன் வந்து, ஒரு தட்டைத் தூக்கிச் சென்றான்.

ஒரு சுற்று கொடுத்து முடிந்ததும், அடுத்த பரிமாற லுக்காக, கேக் துண்டுகளோடு சௌமினி வலம் வந்தாள்!

"எனக்குத் தரவே இல்லையே!" என்று ரஞ்சன் அவளிடம் கேட்க, "அடடா!" என்று ஓடிப்போய், ஒரு பேப்பர் தட்டில், கூடுதலாக இரண்டு துண்டு கேக்குகள் வைத்துக் கொணர்ந்து கொடுத்தாள்.

விளையாட்டுகளை முடித்துவிட்டு உணவருந்தலாம் என்று எல்லோரும் சொல்லவே, விளையாட்டுப் போட்டி கள் நடத்தப்பட்டன!

எப்போது உண்பது என்று கேட்டவருக்கு மட்டும் ஒரு தட்டில் போட்டு, எடுத்து வந்து கொடுத்துச் சாப்பிடச் சொல்லலாம் என்று ஆளைத் தேடினால், விளையாட்டுக்கு முதல் ஆளாக வந்து நின்று கொண்டிருந்தார் அவர்!

அவள், ''பசிக்கிறதா?'' என்று மெல்லக் கேட்டபோது, ''இல்லைம்மா! உணவைப் பார்த்ததும் சாப்பிட ஆசை! அவ்வளவுதான்! எல்லோருக்கும் முந்திக் கொண்டு, நான் தனியாக வேறு கொட்டிக் கொண்டேன் என்று வை! என் பெண்டாட்டி என்னைப் பார்வையாலேயே, எரித்துச் சாம்பலாக்கி விடுவாள்!'' என்று அளந்தார் அவர்!

''நம்பாதீர்கள், மதிவதனி! என் அம்மாவைப் பற்றி, இப்படி ஏதாவது கதை சொல்லாமல் சும்மா இருக்க என் அப்பாவால், முடியவே முடியாது!'' என்றான் அங்கு வந்த ரஞ்சன்!

''பிள்ளை! என்று பேர்! என்றைக்காவது, எதிலாவது எனக்கு ஆதரவாகப் பேசியிருக்கிறானா என்று கேள்! இல்லை என்று, உடனே பதில் வரும்!'' என்றார், தந்தை!

''எனக்கும் ஆசைதான்! என் அப்பா அப்படி! என் அப்பா இப்படி! என்று புகழ்ந்து ரொம்பவே ஆசைதான்! ஆனால், நீங்கள் விட்டால்தானேப்பா! அதற்கு, அரை குறையாக ஒரு சின்ன வாய்ப்புக் கூடத் தருவதே இல் லையே!'' என்று ரஞ்சன் சோகமாகச் சொல்லி, அவரது காலை வாரவும், மதிவதனி அடக்க மாட்டாமல் சிரித்தாள்!

தோளுக்குப் பின்புறமிருந்து இன்னொரு சிரிப்புச் சத்தம் கேட்கவும் திரும்பிப் பார்த்தால், சௌமினியே!

இங்கே எப்போது வந்து நின்றிருப்பாள்?

ரஞ்சனோடா? அல்லது, அவன் கதை சொன்னதைப் பார்த்து விட்டா?

சே! தன்னைத் தொடர்ந்து கூட, சௌமினி வந்திருக்கலாம்! அப்படித் தொடர்கிறவளும்தான்!

இந்த வசீகரன் ஏதோ சொல்லிக் குழப்பிவிட, அவளுக்கும் கண்டபடி நினைக்கத் தோன்றுகிறது!

''விளையாட்டு! விளையாட்டு!'' என்று குரல் கேட்கவும், இரு பெண்களும் அந்த வேலையைக் கவனிக்கப் போனார்கள்!

முதலில் நாலு கட்டம்!

பெரியவர்கள் சின்னவர்கள் என்று இல்லாமல் எல்லோரும் நிற்க, இசை முழங்கி நிற்க, ஒரு கட்டத்தின் பெயரைச் சொன்னதும் அதில் நின்ற எல்லோரும் அவுட் ஆகி வெளியேற இப்படியே கொஞ்சம் கொஞ்சமாகக் கடைசி மூன்று பேர் தவிர எல்லோரும் அவுட் ஆனார்கள்!

அவர்களிலும், முதல், இரண்டாவது, மூன்றாவது பரிசுகள் நிர்ணயிக்கப்பட, ஒவ்வொரு அவுட்டுக்கும் ஒரே சிரிப்பாக இருந்தது!

சின்னப் பிள்ளைகளின் 'பாசிங்த பக்'கும் சுவாரசியமாகவே முடிந்தது!

'கார்' என்று தொடங்கும் வார்த்தைகள் எழுதுவது, குவிஸ், எல்லாமே குழு விளையாட்டுகளாக அமைய, உற்சாகமாக நடந்தன.

'லோட்டோ'வுக்கு, எல்லோருக்கும், கட்டங்களில் எண்கள் அச்சிட்ட காகிதங்களும், வந்த எண்களைக் குத்துவதற்குக் குச்சிகளும் கொடுக்கப்பட்டன.

நடத்துகிறவர்கள், உதவியாளர்கள் என்று நாலைந்து பேராகத்தான் எல்லோருக்கும் கொடுத்தார்கள்.

ஆனால், திடுமெனப் பார்த்தால், பெட்டிக்குள்ளிருந்து எண் வில்லைகளை எடுத்து உரக்கச் சொல்வது, ரஞ்சனாகவும், அந்த எண்களைக் குறித்து வைப்பது சௌமினியாகவும் இருந்தது. மதிவதனிக்கே ஆச்சரிய மாகிப் போயிற்று!

ஆனால், யாராவது செய்யட்டும் என்று உட்கார்ந் திராமல், ஆளாளுக்கு ஏதாவது ஒரு வேலையை எடுத்துப் போட்டுக் கொண்டு எல்லோருமே செய்தார்கள்தான். அதில், இவர்கள் இருவருக்கும் இந்த வேலை வாய்த் திருக்கலாம்!

ஆனால், இதை அந்த வசீகரன் ஒப்ப வேண்டுமே!

மதிவதனி எதிர்பார்த்தது போலவே, சௌமினி, ரஞ் சனைச் சற்று ஆத்திரத்துடன்தான் வசீகரன் பார்த்துக் கொண்டிருந்தான்.

அவனுக்கு நல்லதாக வேறு குச்சியைக் கொடுக்கிற பாவனையில் அவன் அருகே போய் நின்று கொண்டு, ''உன் கண்ணில் இருக்கும் உத்திரத்தை எடுத்துவிட்டு, அடுத்தவன் கண்ணில் இருக்கும் துரும்பைப் பார் என்று பைபிளில் ஒரு வசனம் வருமாம்! நீங்களும்தான், எங்கள் பக்கத்தில் நின்று, கேக் தட்டுக்குப் பேப்பர் நாப்கின் வைத்தீர்கள்! அப்படியானால், நீங்கள் எங்களை மயக்கி முட்டாளாக்கவா முயன்றீர்கள்? சும்மா, சாதாரண விஷ யத்துக்கெல்லாம், கண்ட வண்ணம் பூசாதீர்கள், வசீகரன்! இது சந்தோஷமான நேரம்! இதை, நீங்களும் மகிழ்ச்சி யோடு அனுபவியுங்கள்!'' என்றவள் லேசாகத் தலை சரித்து நோக்கி, ''தயவு பண்ணி, மற்றவர்களையும்

அனுபவிக்க விடுங்கள், சார்!'' என்று சிறு கேலிக் குரலில் முடித்தாள்.

ஒரு கணம் அவளைப் பார்த்தான் அவன். பிறகு முறுவலித்து, ''நீ சொல்வது சரிதான். இது மகிழ்ச்சிகரமான நேரம்தான். முக்கியமாக எனக்கு!'' என்றவன், எழுந்து நின்று கை உயர்த்தி, ''ஹலோ! லோட்டோவில் எனக்கு எல்லா எண்களும் வந்து விட்டன என்று நினைக்கிறேன்! சரி பார்த்துக் கொள்ளுங்கள்!'' என்று கையில் இருந்த எண் காகிதத்தை சௌமினியிடம் கொடுத்தான்!

''அதற்குள்ளாகவா?'' என்று ஆச்சரியமாக வாங்கி, ஒத்திட்டுப் பார்த்துவிட்டு, ''எல்லாம் சரியாக இருக்கிறது! வசீகரன் சாருக்குத்தான் இதில் வெற்றி!'' என்று அறிவித்தாள் சௌமினி!

எல்லோரும் ஆ, ஊ, என்று கத்திக் கைதட்டுகையில், ''அதென்ன, வசீகரன் சார், மோர் என்று கொண்டு? எங்களைப் போல, 'வசி' என்று சொல்லு! நம் இந்தியத் திருமணங்கள், ஓர் ஆணுக்கும் பெண்ணுக்கும் மட்டுமாக நடப்பதில்லை. அவர்களுடைய இரு குடும்பங்களுக்கும் நடப்பது என்பார்கள்! உதி, மோகனா திருமணத்தால், நாமெல்லோரும் உறவினர்கள் ஆகி விட்டோம்தானே? அதை நினைவில் வைத்துப் பேசு, சௌமி!'' என்றான் ரஞ்சன், உரக்க.

அப்படியில்லை என்று யாரால் சொல்ல முடியும்?

அதுவும் அப்போது?

ஆமாம், ஆமாம்! நிச்சயமாய்! என்பது போலப் பெரியோரும், சிறியவர்களுமாகப் பல குரல்கள் ஒப்புதலாக ஒலிக்க எல்லோரும் கை தட்டினர்.

இந்தக் கோலாகலத்திடையே மோகனாவுடைய மாம னார் கையால், வென்றவர்களுக்குப் பரிசளிப்பு நடந்தது.

அதே குதூகல மனப்பான்மையுடனேயே எல்லோரும் உணவருந்தினர்.

புது மணமக்களுக்காக, ஒரு பெரிய நட்சத்திர ஹோட் டலில், தேனிலவு அறை ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது!

அவர்களைச் சீக்கிரமாக அனுப்பிவிட வேண்டும் என்று கிளம்பச் சொல்ல, ''பெரியவர்களின் காலில் விழுந்து ஆசீர்வாதம் வாங்கிக் கொள்ளுங்கள்!'' என்றதைக் கவனியாமல், மோகனா காருக்குப் போய் ஏறி அமர்ந்து விட்டாள்.

ஏறி உட்கார்ந்தவளைக் காரை விட்டு இறங்கி வரச் சொல்ல வேண்டாம் என்று, அவளுடைய மாமியார் லட்சுமி அம்மாள் கூறக் கார் கிளம்பிச் சென்றது!

''அவசரத்தைப் பார்!'' என்று சிரிப்பும் கேலியுமாக வழியனுப்பிவிட்டு, அவர்களுக்குள் சளசளத்தபடியே திரும்பியது உறவினர் பட்டாளம்.

அன்றுவரை கூடவே இருந்த மகளை அனுப்பி விட்டுத் தவித்துக் கொண்டிருக்கும் அத்தைக்கு ஆறுத லாக ஏதாவது பண்ண வேண்டும் என்றுதான், மதிவதனி சுந்தரியைத் தேடியது!

ஆனால், சற்று ஒதுங்கி நின்று கொண்டிருந்த அவ ளுடைய அத்தையின் முகத்தைப் பார்த்ததுமே, அவள் திகைத்தாள்!

அத்தையின் முகத்தில் என்ன இருந்தது?

# 8

மதிவதனியுடைய மாமா பெற்ற செல்வங்களுள் மூத்தவள் மோகனா.

அடுத்த இருவரும் பையன்கள் என்பதால், ஒரே பெண்ணும்கூட!

'பார்பி' மாதிரி ஒல்லியாக இல்லாமல், பழைய செலு லாயிட் பொம்மை போலச் சற்று குளுகுளுவென்றிருப் பாள். ஆனால், அதுவே அழகாகத்தான் இருக்கும்!

சுந்தரிக்கு மகள் என்றால் உயிர்!

ஒரு சில வயதுதான் மூத்தவள் என்றாலும், குடும்பத் தின் முதல் அடுத்த தலைமுறை என்பதால், எல்லோருக் குமே மோகனா அருமைதான்.

எல்லோருக்குமே அருமை எனும்போது பெற்ற வளுக்கு எப்படி இருக்கும்?

எனவேதான், அவளைப் பிரிவது, அத்தைக்கு வேதனை யாக இருக்கும் என்று, ஆறுதல் அளிப்பதற்காக, மதிவதனி தன் அத்தையம்மாவைத் தேடியது!

ஆனால், கண்களில் நீர்த் திரையிடும் ஏக்கத்துக்குப் பதிலாக, அத்தையின் முகத்தில் காணப்பட்ட பாவம், அவளைக் குழப்பியது எனலாம்!

அவளிடம் கோப உணர்ச்சியைக் கூட, மதிவதனியால் புரிந்து கொள்ள முடியும் போல, இருந்தது! என் செல்ல மகளை, என்னை விட்டுப் பிரித்துக் கொண்டு போய்

விட்டானே, இன்று வந்த இந்த மருமகன் என்று எண்ணினாள் என்று வைத்துக் கொள்ளலாம்!

அப்படி எண்ணுவது மடத்தனமே என்றாலும்!

அப்படியானால் என்ன?

வருத்தம் இல்லை, கோபம் இல்லை. என் மகளுக்கு ஒரு நல்ல வாழ்வு அமைந்தது என்ற மகிழ்ச்சியும் இல்லை!

பின்னே...

சட்டென ஏதோ புரிந்தாற்போல இருந்தது அவளுக்கு!

அத்தையின் முகத்தில் இருந்து, பந்தயங்கள் தொடங்கும்போது, அதில் கலந்து கொள்ளும் வீரர்களின் முகத்தில் காணப்படுவது!

ஜெயிப்போம் என்கிற நம்பிக்கையோடு, முழுக் கவனமும், அதே சமயம் பரபரப்பும்!

தன்னால் முடியும் என்கிற தன்னம்பிக்கை இருக்கும் போதும், போட்டியில் என்ன செய்ய வேண்டும் என்பது பற்றிய அதே சிந்தனையும், வெற்றி பெற வேண்டும் என்ற தவிப்பும்!

இப்போது, மதிக்குத் தெளிவாகப் புரிந்து விட்டது! முகம் மலர்ந்தும் போயிற்று!

போட்டியில் இருப்பது, அத்தையல்ல! அவளுடைய ஆசை மகள்!

வாழ்க்கைப் பந்தயத்தில், மோகனா முதல் அடி எடுத்து வைத்து விட்டாள். கடைசி வரை அவள் நல்ல பேர் வாங்க வேண்டுமே என்ற தவிப்பு!

பெற்ற மகளுக்குக் கற்றுக் கொடுத்ததையெல்லாம், அவள் சரிவரப் பின்பற்றி, வாழ்வில் வெற்றியும் மகிழ்ச்சியும் அடைய வேண்டுமே என்கிற ஆதங்கம்!

இதுவும் இயல்புதான்!

ஆனால், மாமியார், நாத்தனார் என்று மோகனாவுடைய புகுந்த வீட்டு உறவினர் எல்லோருமே மிகவும் நல்லவர்களாக இருக்கும்போது, அத்தைக்கு இந்தக் கவலை, அடியோடு அனாவசியம்!

அத்தையின் அருகில் சென்று, அவளுக்கு நம்பிக்கையூட்டும் விதமாக ஏதாவது சொல்ல வேண்டும் என்று மதிவதனி அடியெடுத்து வைத்தபோது மோகனாவுடைய நாத்தனார் அருணா அவளிடம் பேச வந்தாள்.

வதனியின் கையை ஆசையாகப் பற்றி, ''மதிவதனி, இந்த குட்டிப் பூங்கொத்து எல்லாம் உன் தயாரிப்பாமே! வெறும் மல்லிகைப் பூவை வைத்து, கைக்கு அடக்கமாக இப்படி ஒரு பொக்கே செய்யலாம் என்று, உனக்கு எப்படி ஐடியா தோன்றிற்று என்று, எனக்கும் அம்மாவுக்கும் ஒரே அதிசயம்! மிகவும் அழகாக, கூடவே வாசமாகவும் இருக்கிறது! கையை விட்டுக் கீழே வைக்கவே மனமில்லை!'' என்று வெகுவாகப் பாராட்டினாள்! ''இந்த ஐடியா எப்படி வந்தது?''

எவ்வளவு பிரியமாகப் பேசுகிறாள்! மோகனா நிஜமாகவே அதிருஷ்டக்காரிதான் என்று எண்ணியபடி, ''தாங்க்ஸ், அக்கா!'' என்றாள் மதிவதனி மகிழ்ச்சியோடு!

இந்த ஐடியா எப்படி வந்தது என்பதும் அவளுக்கு நன்றாகவே நினைவிருந்தது!

அவளும் ஒரு தோழியும் சேர்ந்து, இந்த அலங்கார மலர்க்கொத்து விற்பனையைத் தொடங்கிய புதிதில் வந்த வாடிக்கை அது!

பைன் ஆர்ட்சில் அவளோடு சேர்ந்து படித்த பெண் ஒருத்தியுடைய தந்தை, மிகப் பெரிய அளவில் ஒரு துணிக்கடையைத் தொடங்கினார்! மகளின் சிபாரிசில், மதிவதனியிடம் வந்து, கடைத் திறப்பு விழாவுக்கு, வருகிறவர்கள் லேசில் மறக்க முடியாதபடி, முதல் வர வேற்பான பூங்கொத்து கொடுப்பதிலேயே வாடிக்கை யாளரைக் கவர்ந்துவிட வேண்டும். அப்படி ஏதாவது செய்ய முடியுமா என்று கேட்டார்!

அவரைப் பொறுத்தவரையில் நம்பிக்கை இல்லாமல் தான் கேட்டார்! ஆசை மகளின் வற்புறுத்தலுக்காகக் கேட்டது! இந்தச் சின்னப் பெண்களுக்கு என்ன தெரியும் என்ற அவரது எண்ணத்தை மதிவதனியால் நன்றாகவே அறிந்து கொள்ள முடிந்தது!

தங்களுக்காக சிபாரிசு செய்த தோழியைத் தலை குனிய விட்டு விடக் கூடாது என்று ஒரு சவாலாகத்தான் அவள் அந்த வேலையை ஏற்றது!

ஒரு நாள் முழுவதும் யோசித்து, பின்னணியில் ஓர் இலையுடன், வெறும் இருபதே மல்லிகை மலர்களைக் கொண்டு பூங்கொத்தை வடிவமைத்துக் கொண்டு போய்க் காட்டினாள்.

தோழியுடைய தந்தை, மறு பேச்சே பேசாமல், ஆர்டரை, அவளிடம் கொடுத்தார்!

அந்த ஜவுளிக் கடைக்கு, சமீபத்தில்தான் இரண்டாம் ஆண்டு விழா கொண்டாடினார்கள்!

அதே பூங்கொத்து, ஆயிரம் வாங்கினார்கள்!

பெருமை சேர்க்கும் விவரம்தான்!

ஆனால், விலாவாரியாக அதை விளக்கினால் பெருமையடிப்பது போலத் தோன்றும் என்பதால், "இப்படியெல்லாம் ஏதாவது செய்தால்தானே, எங்களுக்கும் வாடிக்கை பெருகும், அக்கா! அதனால், நாங்கள் ரெண்டு பேரும் யோசித்து, யோசித்துச் செய்வதுதான்!" என்றாள் சுருக்கமாக.

"அருமை, மதி! ஆனால், நீ சொன்னதை என் கணவரிடம் சொன்னேன் என்று வைத்துக்கொள்! என்ன சொல்வார், தெரியுமா? யோசிப்பதா? அதெல்லாம் மூளை உள்ளவர்கள் செய்வதும்மா. நீயெல்லாம் வீணாகக் கஷ்டப்படாதே, செல்லம் என்று ரொம்பப் பரிவு போலச் சொல்லிக் காலை வாரி விட்டு விடுவார்!" என்று அருணா கூற, அருகில் நின்று கேட்டுக் கொண்டிருந்த எல்லோருக்கும் சிரிப்பு வந்தது!

"ஆஹா! இந்த அளவுக்கு, என் மனதுக்குள் இருக்கும் உண்மையான அபிப்பிராயம் வரை தெரிந்து வைத்திருக்கிறாளே! இவளுக்கா மூளையில்லை? அம்மாடியோவ்! இவ்வ்...வளவு மூளையா என்று பயம்மாக இருக்கிறதே!" என்று, அவளுடைய கணவர் நடுங்கிக் காட்ட, அதற்கும் ஒரு சிரிப்பலை பரவியது!

"நானும் இதைப் பாராட்டத்தான் வந்தேன்! ஆனால், சும்மாவே ஏகப்பட்ட ஐஸ்! இன்னும் சேர்ந்தால், பயங்கரச் சளி பிடித்து வைக்கப் போகிறதே என்று வாயை மூடிக் கொண்டிருக்கிறேன்!" என்று வசீகரனின் குரல் காதருகில் ஒலிக்க, மதிவதனியின் மகிழ்ச்சி முழுமை ஆயிற்று!

மோகனாவின் திருமணப் பரபரப்பு ஓரளவு அடங்கி, அன்றாட வேலை தொடங்கி, அதில் இயல்பாக மனம் ஒன்ற, கிட்டத்தட்ட ஒரு வாரம் ஆயிற்று!

அதற்குள்ளாக இரண்டு பெரிய ஆர்டர்கள் வரவே, மதிவதனி அதில் மும்முரமானாள். அவளது இரு கிளை களிலும், எல்லாரும் சேர்ந்து இந்த வேலையைச் செய்து முடித்தார்கள்!

அது போகவும், ஆயிரம் ரூபாய் பொக்கே, இரண்டா யிரம் ரூபாய் பாஸ்கெட் என்று, தனித் தனி விற்பனை களும் பெருக, மலர் வாங்கி வருவதும், அழகாக டிசைனில் செய்து, செய்து காட்சிக்கு வைப்பதும் விற்பதுமாக மதியின் பொழுது வேகமாக ஓடியது!

இடையிடையே மோகனாவின் திருமணம் பற்றிய நினைவு வரும்.

மதிவதனியடைய பெற்றோர் ஒரு தரம் தங்கை வீட்டுக்குப் போய் வந்தார்கள்.

எல்லோரும் எப்படி இருக்கிறார்கள் என்று கேட்ட போது, ''அத்தையைத் தெரியாதாம்மா? எதிலும் குறை தேடிக் கொண்டு இருப்பாள். எனக்கென்னவோ, மோக னாவைப் பார்த்தால், மிகவும் மகிழ்ச்சியோடு இருப்பதாகத் தான் தெரிகிறது!'' என்றார் சுதர்சனம்.

''ஆமாம், மதி! சும்மாவே, அவளுக்கு சருமம் பளபள வென்று இருக்குமா? இப்போது, கண்ணும் சேர்ந்து சிரிப்பதால், இன்னமும் டாலடிக்கிறாள்'' என்றாள் பூமா.

''சுந்தரி சொல்வது போலக் குடிக்கப் பால் தராத வீடு என்றால், உடம்பில் இந்தப் பளபளப்பு ஏறுமா? ஏதோ ஒரு நாள், எப்படியோ பால் காலியாகிப் போயிருக்கலாம்

வீட்டு மனிதர்களுக்கு இல்லாமல் போயிருக்கலாம்! அதையெல்லாம் பெரிது படுத்திக் கொண்டு! போடு தோப்புக்கரணம் என்றால், போட்டு விடுவான் போல, மாப்பிள்ளை மோகியிடம் அவ்வளவு பிரியமாக இருக்கிறான்! அம்மா வீட்டுக்குப் போக வேண்டும் என்று சொன்னாள் என்று கூட்டி வந்திருந்தார். அதற்கு மேல் என்ன வேண்டும்? இவள் ஏதாவது சொல்லி, மகள் மனதைக் கெடுத்து விடக் கூடாதே என்று இருக்கிறது!'' என்று சுதர்சனம் படபடப்பதைத் தாயும் மகளும் ஆச்சரியமாகப் பார்த்தார்கள்!

சுதர்சனம், தங்கையைக் குறை சொல்லி, அவர்கள் கேட்டதே இல்லை! சுந்தரியின் போக்கினால் எப்போதேனும் சிறு தொல்லைகள் நேரும்போதுகூட - அவள் பார்க்கும் விதத்தால் தொல்லைகள் நேரத்தான் செய்யும் அப்போதும், அவர் தங்கையை விட்டுக் கொடுத்தும் பேச மாட்டார்.

இப்போது, அந்தத் தங்கையுடைய மகள் மோகனாவின் மீதுள்ள அக்கறை, அவரை இப்படிப் பேச வைத்திருக்கிறது!

மனைவி மகளின் பார்வையில் லேசாக முகம் கன்றி, ''சரி அப்படி அவள் குணம் ஒரேயடியாகத் தெரியாமலா போய்விடும்? சின்ன வயதிலேயே அம்மா போய்விட்டதால், நாமும் விட்டு விடக்கூடாது என்று கண்டு கொள்ளாதது போல இருந்ததுதான். இப்போது, இந்தச் சின்னப் பெண்ணின் நிம்மதி, சந்தோஷம் கெட்டு விடக் கூடாதே! அதுதான் கவலையாக இருக்கிறது!'' என்றார் குடும்பத் தலைவர்!

"அப்படி என்ன ஆகிவிடும் என்று பயப்படுகிறீர்கள்? நீங்கள் இவ்வளவு பயப்படும் விதமாக என்ன நேர்ந்தது?" என்று பூமா விசாரித்தாள்.

குரலில் இருந்த அக்கறையில், அவரும் மறைக்காமல் சொன்னார். "மாப்பிள்ளை நல்ல மனிதர், பூமா. நான் போனபோது அங்கேதான் இருந்தார். என்னிடம் பேசிக் கொண்டு இருந்தவர், சொந்தமாக என்ன சாப்பிடுகிறீர்கள் என்று எனக்கு உபசாரம் செய்தார். எனக்கு ஏதாவது கொண்டு வரச் சொல்வதற்காகத்தான், அவர் மோக னாவைக் கூப்பிட்டது! அவர் மூன்று தடவை கூப்பிடு கிறார், இவள் காதிலேயே விழாத மாதிரி எங்கோ பார்த்துக் கொண்டு நிற்கிறாள்! சுந்தரியும், மாப்பிள்ளை கூப்பிடு கிறார், பார் என்று ஒரு வார்த்தை சொல்லவில்லை! உதயன் முகம் வாடி விட்டது! எழுந்து, பக்கத்தில் போய், மெல்ல ஏதோ ஒரு வார்த்தை சொல்லுமுன் 'ஈ' என்று முகம் மலர, அப்படிப் பார்க்கிறாள்! அந்தப் பார்வையில் அவர் உருகி விட்டார் என்று வைத்துக் கொள்! ஆனால், இந்த வித்தை எத்தனை நாள் நடக்கும்? வெய்யிலும், பனியும் மாறி, மாறிப் பட்டால் பாறைகூட உடைந்து போகும் என்று படித்ததில்லை? மணல் உருவான கதையே அதுதானே? அவரது அன்பும், அப்படி ஆகிவிடுமோ என்ற பயம்தான் எனக்கு!" என்றார் அவர்!

"வித்தை என்பானேன், மதியப்பா? மெய்யாகவே, அவள் காதில் விழாமல் இருந்தும் இருக்கலாம்தானே? அத்தோடு, பெற்ற மகளின் வாழ்க்கை கெடுமாறு தாயார் விடுவார்களா? அண்ணி ஒன்றும், அப்படி முட் டாளில்லை! ஆமாம், நீங்கள் என்னவோ, காலையிலேயே ஆடிட்டரைப் பார்க்க வேண்டும் என்றீர்களே, வேண்டிய

கணக்கு வழக்குகள் எல்லாம் எடுத்து வைத்துக் கொண் டீர்களா?'' என்று பூமா இதமாகக் கூறிப் பேச்சை மாற்ற வும், சுதர்சனமும் அமைதியடைந்து, அவரது வேலையைப் பார்க்கலானார்!

ஆனால், அவர் சொன்னதை யோசிக்கும்போது, மதிவதனிக்கும் மோகனாவைப் பற்றிய கவலை லேசாக எழுந்தது!

ஆனால், அவளுடைய தந்தை சொன்னது போலச் சின்ன விஷயத்தையும் பெரிதுபடுத்தி, அவளுடைய அத்தை, மோகனாவின் வாழ்வில் புயல் வீசச் செய்து விடுவாளோ, என்று அல்ல!

அந்த வகையில் தாயின் கருத்துதான் அவளுக்கும்!

கெட்டவளாகவே இருந்தாலுமே, ஒரு மகளின் வாழ்வைக் கெடுக்க, ஒரு தாய்க்கு மனம் வராது என்பது, அவளுக்கும் நிச்சயம்! அத்தோடு, சுந்தரி ஒரேயடியாகக் கெட்டவளும் அல்ல!

ஆனால், திருமணத்தின்போது மிக நல்லவர்களாகத் தோன்றிய மோகனாவின் புகுந்த வீட்டார், உண்மையில் அப்படி இல்லையோ என்ற சந்தேகம் அவளுக்கு ஏற் பட்டு விட்டது!

ஏனெனில், அத்தை குறிப்பிட்டது போல ஒரு நாளேனும், மோகனா குடிப்பதற்கு, அவள் வீட்டில் பால் இல்லாது போனது, உண்மைதானே? ஏன் அப்படி ஆக வேண்டும்?

இன்றைக்குப் பால் என்ன, வாங்க முடியாத பொருளா? எந்த நேரத்திலும், எங்கேனும் கிடைக்குமே! அல்லது, அவர்கள் வாங்கச் சக்தி அற்றவர்களா? போய் வாங்கி வர,

வீட்டில் ஆட்கள் தான் இல்லையா? எத்தனை வேலையாட்கள்!

வீட்டு மனிதர்களைவிட, வீட்டில் இருக்கும் பணியாளர்கள் எண்ணிக்கை அதிகம் என்பது, மோகனாவே சொன்னது!

மூன்று காரணங்களுமே இல்லை என்கிறபோது, மோகனா குடிக்கப் பால் இல்லாது போனதை, மதிவதனியால் ஒத்துக்கொள்ள முடியவில்லை!

அது, சின்ன விஷயமாக இருக்கலாம்! ஆனால், சின்ன விதையிலிருந்துதானே, பெரிய மரம் உருவாகிறது?

அப்பாவும் அம்மாவும் சொல்வது போல, இப்போது, இதற்காக வரிந்து கட்டுவது சரியில்லைதான்! ஆனால், தொடர்ந்து இப்படி நடந்தால், பொறுத்துக் கொண்டு சும்மா இருப்பதும், சற்று சரியே அல்ல!

இன்னும் இந்த மாதிரிப் பிரச்சினை வருகிறதா என்று கவனித்து அப்படி எதுவும் வந்தால், அதற்கேற்ப நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தீர்மானித்த பின்னரே, அவளால் சொந்த வேலைகளில் நிம்மதியாக ஈடுபட முடிந்தது!

தொடர்ந்த ஒரு வாரம் சென்றபின், சுமார் பதினோரு மணியளவில், மதிவதனியின் செல்போன் அழகாகப் பாடியது!

செல்லின் திரையில் அவளுடைய தந்தையின் எண்ணைப் பார்த்ததும் அவளுக்கு ஆச்சரியமாக இருந்தது!

பொதுவாக அவளது வேலை நேரத்தில், சுதர்சனம் மகளுக்கு போன் பண்ண மாட்டார்! பொக்கே, பாஸ்கெட்

என்று ஏதாவது செய்வது, அல்லது டிசைன் வரைந்து வைப்பது என்று, மகள் ஏதாவது வேலை செய்து கொண் டிருப்பாள் என்று அவருக்குத் தெரியும்!

ரசித்துச் செய்யும் வேலையை இடையில் விட்டு வர, அவளுக்குப் பிடிக்காது என்பதும், அவர் அறிந்ததே!

விற்பனையைக் கவனிப்பதோடு, இன்னும் இந்தப் பூங்கொத்துகள் அமைக்கத் தேவையான மலர்களில் இருந்து, பேஸ், ரப்பர், நூல், அட்டை... இப்படி எத் தனையோ வாங்க வேண்டும். எல்லாம் தரமானதாகவும் இருக்க வேண்டும் என்று, அவளும், மிருதுலாவும் மட்டுமேதான் வாங்குகிற வேலை செய்வது!

இரண்டு பெண்களுமே, மனதுக்குப் பிடித்தமான வேலையைத் தொடங்கி, சோர்வின்றி உழைத்தார்கள்! வாரம் ஒரு நாள் விடுமுறையைக் கூட, ஆளுக்கு ஒரு நாளாக எடுத்துக் கொண்டு, இருவர் வேலையையும் அன்று ஒருவராகப் பார்த்துக் கொண்டார்கள்! 'எம்எம் ப்ளோரிஸ்ட்'டுக்கு விடுமுறையே கிடையாது. உழைப் புக்கு ஏற்ப நல்ல லாபமும் கண்டார்கள். ஒரு கடையை இரண்டாக்கி, அபிவிருத்தியும் செய்தார்கள்!

இன்னமும் விரிவுபடுத்தத் திட்டமும் வைத்திருந் தார்கள்!

சொல்லப் போனால், அவர்கள் வளர்ந்த வேகத்தைப் பார்த்துவிட்டு, சௌமினியுடைய தாயாரான மதியுடைய சித்தி கூட, பெரிய சம்பளத்தை எதிர்பார்த்து, சௌமி னியைக் கஷ்டப்பட்டுக் கம்ப்யூட்டர் இஞ்சினியரிங் படிக்க வைத்ததற்கு, மதிவதனியைப் போல, பைன் ஆர்ட்சே படிக்க வைத்திருக்கலாம் என்று சொல்லுவ துண்டு!

மதியோடு சேர்ந்து அவளும் நன்றாகச் சம்பாதிக்கத் தொடங்கி இருப்பாளே! நல்லவேளையாக, சௌமிக்குப் படித்து முடித்ததுமே நல்ல சம்பளத்தில் வேலை கிடைத்து விடவே, சித்தியும் சற்று நிம்மதியாக இருக் கிறாள்! இல்லாவிட்டால் சித்தப்பாவின் குணத்துக்கு.. பாவம் சித்தியும் சௌமியும்!

இதெல்லாம் மனதில் ஓட, தந்தையைக் கூப்பிட்டால், அவரது எண் பிசியாக இருந்தது!

ஆனால் ஒரு சில கணங்களிலேயே மீண்டும் அழைத்த தந்தை, ‘‘ஒரு விஷயம் சொல்லத்தான் கூப் பிட்டேன், மதிம்மா. மோகனா வீட்டு வசீகரன் நினைவு இருக்கிறதா? அவர் உன் போன் எண்ணையும், முக வரியையும் கேட்டார்! ஏதோ பொக்கே வேண்டும் போல! கொடுத்திருக்கிறேன்! திடீரென்று வந்தால், அடையாளம் புரியாமல் நீ விழிக்கக் கூடாதில்லையா? அதற்காகத்தான், உனக்கு ஞாபகப்படுத்தி எச்சரித்து வைப்பதற்காகத்தான் கூப்பிட்டேன். பார்த்துக்கொள்!’’ என்று வைத்தார் அவர்.

அடையாளம் புரியாமல் விழிப்பதா?

மதிவதனிக்குச் சிரிப்புதான் வந்தது!

எச்சரிப்பதற்காகத்தான் கூப்பிட்டேன் என்ற தந்தையை நினைக்கையில் சற்றுப் பரிதாபமாகவும் இருந்தது!

இந்தக் காலத்து இளைஞர்கள், வாயில் விரலை வைத்தால் கடிக்கத் தெரியாத பச்சைக் குழந்தைகள் அல்ல என்று அவருக்குத் தெரியவில்லையே!

பாவம்தான் இந்தப் பெற்றோர்கள்!

தந்தை சொன்னது போலவே, அன்றே வசீகரன் டெலிபோனில் அவளுடன் தொடர்பு கொண்டான். அவளது இரண்டு இடங்களில், அவள் எங்கே இருக்கிறாள் என்று கேட்டுக்கொண்டு, அவளைப் பார்க்க அங்கே வந்தான்.

புன்னகையோடு அவளிடம் ''ஹலோ!'' சொல்லி விட்டு, அந்தச் சின்ன இடத்தை அவள் பயன்படுத்தியிருந்த விதத்தைப் பார்த்துப் பாராட்டுதலாக முறுவலித்தான்!

''நான் எதிர்பார்த்தது போலவே, வெகு கச்சிதமாக இருக்கிறது! அப்புறம், எங்கள் நகைக் கடைக்கு எப்போது வருகை தரப் போகிறாய்?'' என்று புன்னகையோடு கேட்டான்.

சற்றுத் திகைத்துவிட்டு, ''மூட்டை கட்டுகிற அளவு பணம் சேர்ந்த பிறகு!'' என்று பூசணிக்காய் அளவுக்குக் கையால் காட்டினாள் அவள்!'' தங்கம் விற்கிற விலையைப் பார்த்தால், வெறுமனே அழகு பார்க்கலாமே தவிர, வாங்க முடியும் போலவே தெரியவில்லையே!'' என்றாள் அவள்.

''பொய்!'' என்றான் அவன். ''உதி திருமணத்தின் போதும், முந்திய நாளும் நீ அணிந்திருந்த எல்லாமே தங்கமும் வைரமுமே என்று கண்டு கொள்ளத் தெரியாத அளவுக்கு, நான் தொழிலுக்குப் புதியவன் அல்ல! தெரியுமா? எட்டு செண்ட்டும், அதற்கு அதிகமான கற்கள்தான். என்ன விலை என்று எனக்குத் தெரியும்!''

''அதெல்லாம் பழை..ய்ய நகைகள், வசீகரன்! விற்கக் கூடாது என்று பத்...திரமாக வைத்திருக்கிறோம்! மற்றபடி... நிஜத்தைச் சொல்லுங்கள்! அவை எல்லாமே, எட்டு செண்ட், பத்து செண்ட் வைரங்களேதானா?'' என்று தீனக்குரலில் கேட்டாள் மதிவதனி.

''எல்லாம் தெரிந்து வைத்துக் கொண்டே தெரியாதது போல நடிக்கும் ஒரு பெண்ணின் காதைப் பிடித்துத் திருக வேண்டும் என்று கை துறுதுறுக்கிறது! ஆனால், உதவி யாள் பாவனையில், சற்றே உட்புறமாக நின்று, நம்மை உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டிருப்பவள், 'செக்யூ ரிட்டி' ஆளோ? உனக்கும் வேறு, எந்த அளவுக்குக் கராத்தே, குங்ஃபூ எல்லாம் தெரியுமோ என்ற பயம் அல்லவோ, என்னைத் தடுக்கிறது!'' என்று வசீகரன் பயந்த மாதிரியாகக் கூற, மதிவதனி சிரித்தாள்.

''காதைப் பிடித்துத் திருகுவதா? உங்களை அப்படித் திருகவிட்டுவிட்டு, என் கை பூப்பறித்துக் கொண்டிருக்கு மாக்கும்!'' என்றாள் பதிலுக்கு!

''இல்லையே! பூக்கட்டிக் கொண்டு அல்லவா இருக்கும்!'' என்று, வசீகரன் உடனே சொல்லிவிட, இரு வருக்குமே சிரிப்பு வந்து விட்டது!

உதவியாளாக வேலை செய்யும் பெண் செல்வி சற்று விசித்திரமாகப் பார்ப்பது போலத் தோன்றவும், சிரிப்பை நிறுத்தி, ''சொல்லுங்கள், என்ன விஷயமாகப் பார்க்க வந்தீர்கள்?'' என்று விசாரித்தாள்.

''ஓகோ! பிசினஸ்கார அம்மாவின் நேரம் வீணாகிற தாக்கும்?'' என்று அவன் சிறு கேலியாகக் கேட்க, ''ஏன், உங்களுக்கு மட்டும் நேரம் பொன்னானது இல்லை யாக்கும்?'' என்று பதிலுக்குக் கேட்டாள் அவள்.

ஆனால் உடனேயே, செல்வி முன்னிலையில் அவன் மேலும் கிண்டலாக எதுவும் சொல்லி விடுவானோ என்று, ''நீங்களும் ஏதோ பூங்கொத்து வேண்டும் என்று தான் வரப் போவதாக அப்பா ஏற்கனவே சொன்னாரே!'' என்றாள் அவசரமாக.

அவளது பேச்சிலும் குரலிலும் எதைக் கண்டானோ, ஏதோ சொல்ல வாயெடுத்தவன், அதை நிறுத்திக் கொண்டு, ''அவர் சொன்னது சரியே! உதி திருமணத் தன்று மாலையில், எல்லோருக்கும் ஒரு சிறு மல்லிகைப் பூ பொக்கே கொடுத்தாயே, நினைவிருக்கிறதா? அது போல, எங்கள் 'குரூப்' நகைக் கடைகள் எல்லாவற்றிலும், தினமும் வாடிக்கையாளர்களுக்குக் கொடுக்கலாம் என்று திட்டமிட்டிருக்கிறோம். ஆறு கடைகள். எப்படியும், குறைந்தது... ஆயிரம் கொத்துகள் தேவைப்படும். ஞாயிறன்று இரு மடங்கு. செவ்வாய்க்கிழமை விடு முறை! உன்னால் செய்து தர முடியுமா? கொண்டு வந்து தர வேண்டாம். நான் ஆள் அனுப்பி எடுத்துக் கொள் கிறேன்'' என்று வந்த காரணமான தொழில் விவரம் சொன்னான்.

அவள் முடியும் என்று சொல்லிக் கணக்குப் போட்டு, எவ்வளவு ஆகும் என்று சொல்ல, ''அவ்வளவா? தொடர்ந்து வாங்கப் போகிறோம். குறைத்துப் போடு'' என்று அவன் பேரம் பேச, ''சும்மாக் கொடுங்கள், சார்! ஒரு கிராமுக்கு வாங்கினால்கூட, உங்களுக்கு என்ன லாபம் வருகிறது!'' என்று மறுக்க, இருவருமாகத் தொழில் பேரம் பேசி முடித்தார்கள்!

''அடேயப்பா! சரியான விடாக் கண்டியாக இருக் கிறாயே! உன்னுடன் வாதாடி, என் தொண்டை காய்ந்து போயிற்று! ஆப்பிள் சாறு அதிக விலை என்பாய்! குறைந்த பட்சமாக ஒரு குளிர்பானமாவது கிடைக்குமா? என்று வசீகரன் கேட்க, மதிவதனி ஏவுமுன்பாகவே, செல்வி வாங்கி வரக் கிளம்பிவிட்டாள்.

''என்ன பானம் பிடிக்கும், சார்?''

மதிவதனியிடம் பணம் வாங்கிக் கொண்டு அவள் செல்லவும், ''சௌமினியிடம் எச்சரித்து விட்டாய் அல்லவா?'' என்று கேட்டான் வசீகரன்.

ஆத்திரமுற்று முறைத்தாள் அவள்.

# 9

அவ்வளவு நேரம் இருந்த உற்சாகம், அப்படியே வடிந்து விட்டது போல, மதிவதனி உணர்ந்தாள்.

ஆக, இது பற்றிப் பேசுவதற்காகத்தான், தொண்டை காய்ந்து விட்டதாக அவன் நடித்தது!

அது மட்டும்தானா? அல்லது...

''நீங்கள் தொழில் முறையில் வந்தீர்கள் என்று நினைத் தேனே? பூங்கொத்துகளுக்கான ஒப்பந்தம் எழுதுவதா, வேண்டாமா?'' என்று மிடுக்குடன் கேட்டாள் அவள்.

''ஏன்? இவ்வளவு தூரம் வந்து, தொழில் பேச்சுப் பேசினால், அதற்கு மேல், சொந்த விஷயம் பேசக்கூடாது என்று சட்ட திட்டம் ஏதேனும் இருக்கிறதா, என்ன?'' என்று பதிலுக்கு வினவினான் வசீகரன்.

''சட்டம் இருக்கிறதோ, இல்லையோ, எனக்குப் பிடிக்காது!'' என்றாள் அவள் கறாராக!

''எப்படிப் பிடிக்கும்? தப்பு செய்கிறவர்கள், உன் உறவுப் பெண்கள் ஆயிற்றே!''

"என்ன தப்பு? உங்கள் மொழியில் முட்டாளடிப்பதா? எனக்கென்னவோ, எங்கள் வீட்டுப் பெண் தான் முட்டாளடிக்கப்பட்டு, முழித்துக் கொண்டு நிற்பதாகத் தோன்றுகிறது!"

"எப்படியோ?"

"எங்கள் மோகனாவுக்கு இரவில் பால் குடிக்காவிட்டால் தூக்கமே வராது! இப்போது, ஒரு கப் பாலுக்குப் பஞ்சமாகியிருக்கிறது!" என்று, பட்டென்று போட்டு உடைத்தாள் மதிவதனி!

என்னவோ அவர்கள்தான் உலக மகா உத்தமர்கள் போல, என்ன பெரிய எடுப்பு என்றுதான், அவள் இதைப் பற்றிச் சொன்னது!

ஆனால், "இதென்ன புதுக்கதை?" என்றான் அவன் ஆத்திரத்தில் முகம் சிவக்க! "லட்சுமி அத்தையின் வீட்டில் பாலுக்குப் பஞ்சமா? இரவு பகல் எந்த நேரம் போனாலும், அத்தை புதிதாகப் பாதாம்பால் காய்ச்சித் தருவார்கள், தெரியுமா? ப்ரிஜ்ஜில் எப்போதும் பால் பாக்கெட் கிடக்கும்! சாப்பாடு கூட, இரண்டு பேருக்கு அதிகமாகச் செய்து, வெளி ஆட்கள் வராமல் மிஞ்சிப் போனால் ப்ரிஜ்ஜில் வைத்து, மறுநாள் மைக்ரோ ஓவனில் வைத்துச் சூடு பண்ணித்தான் வேலைக்காரியிடமே கொடுக்கிற நல்ல குணம் எங்கள் அத்தைக்கு! அப்படிப்பட்டவர்கள் மருமகளுக்குக் கொடுக்காமல் இருப்பார்களா? மோகனா இப்படியா கதை கட்டுகிறாள்? சே! என்ன மாதிரிப் பெண், அவள்! நான் நினைத்ததை விட மோசமாக இருக்கிறாளே!" என்றான் அவன் அருவருப்புடன்!

"மோகனா ஒன்றும்..." என்று அதே ஆத்திரத்துடன் பதில் சொல்லத் தொடங்கிய மதிவதனியின் பேச்சு சட்டென நின்றது!

இந்த வார்த்தை மோகனாவே சொன்னதாகத் தந்தை கூறவில்லையே!

கூறியது சுந்தரியத்தை என்றால், அவர்கள் என்ன நினைத்து, என்ன சொன்னார்கள் என்று கண்டு கொள்வதே கடினம்! மன நிலை, சிக்கனம் இரண்டையும் பொறுத்து, எதையும், எப்படியும் மாற்றிப் பேசுவார்கள்! பெற்ற மகளே கூடத் தன் வீட்டில் இருந்ததை விடவும், புகுந்த வீட்டில் மகிழ்ச்சியோடு இருக்கிறாள் என்றாலேயே, ஒப்ப மனம் வராது! அதற்காகக் கூட, அந்த நேரம் வாயில் வந்த எதையேனும் அப்பாவிடம் சொல்லியிருக்கலாம்! சொன்ன கையோடு, அதை மறந்தும் போயிருக்கலாம்!

அப்படிப்பட்ட அத்தை சொன்னதை மட்டும் வைத்து, இவனுக்கு ஆத்திரமூட்டினால், மோகனாவுக்குத் தேவையற்ற தொல்லையாகி விடக் கூடும்! எதற்கு வம்பு?

தான் சொன்னதைக் கேட்டதும், மதிவதனியே இந்தக் கதை எப்படி வந்தது என்று யோசிப்பதாக, வசீகரன் கருதினான்.

கொஞ்சம் மனம் இளகியது!

இன்னும் யோசித்தாளானால், ரஞ்சன், சௌமினி கூட்டுறவு எவ்வளவு பொருத்தமற்றது என்று மதிக்குத் தானாகப் புரிந்துவிடும் என்று எண்ணினான்.

பார்த்த அளவில், புத்திசாலியாகத்தானே, தெரிகிறாள்! அவளாகவே யோசித்து, ஆவன செய்யட்டும் என்று எண்ணினான்.

''லட்சுமி அத்தை சாது. அதிரப் பேச மாட்டார்கள்! ஆனால், ஆனந்திச் சித்தி நேர் எதிர்!'' என்றவன், அதற்கு மேல் ரஞ்சன் சௌமினி பற்றி எதுவும் பேசவில்லை!

சொன்னதை மறக்க வேண்டாம் என்பது போல ஒரு பார்வை மட்டும் பார்த்துவிட்டு, பூங்கொத்துகள் பற்றி இரண்டொரு வார்த்தை சொல்லிவிட்டுக் கிளம்பி விட்டான்!

அவசரமாகக் குளிர் பானத்துடன் வந்த செல்விக்கு ஒரே ஏமாற்றம்!

"பரவாயில்லை, செல்வி! அடுத்த வாடிக்கையாளருக்குக் கொடுக்கலாம்!" என்று மதிவதனி சொன்னதை, அவளால் ஒத்துக் கொள்ளவே முடியவில்லை!

"தினமும் ஆயிரம் பொக்கே அக்கா! சின்னக் கொத்து தான் என்றாலும், இதை வைத்து, அவர்களுடைய குடும்பத்தில் எல்லோரையும் பிடித்து விடலாம், அக்கா! நகைக் கடைக்காரர்கள்! பணக்காரக் குடும்பம்! பெரிய வாடிக்கை ஆகிவிடும்!" என்று அவள் பரபரக்க, மதிவதனியும் முகம் மலர்ந்தாள்.

தொழில் வளர்ச்சிக்கு, இந்த ஒப்பந்தம், ரொம்பவே நல்லதுதான்!

அன்றைக்கு, மோகனாவுடைய நாத்தனார், இந்தப் பூங்கொத்தை ரொம்பவே பாராட்டினாள்!

அவள் சொல்லித்தான், இந்த ஐடியா வந்திருக்குமோ?

ஆனால், யோசனை அவளது என்றால், மோகனாவுடைய கணவர் உதயன் அல்லவோ வந்திருப்பார்?

ஒருவேளை, அந்தக் 'கற்பகம்' குரூப்பில் எதையும் முன்னின்று நடத்துகிறவன், வசீகரனாக இருக்குமோ?

அப்படித்தான் இருக்க வேண்டும்! அதனால்தான், தலைவனாகச் செயல்படுவதால்தான், பொக்கே பற்றிப் பேசி முடிக்கவும், அவனே வந்தான் போலும்!

அத்தோடு... தலைவனாக இருப்பதால்தான், தன் பொறுப்பு என்று நினைத்து, ரஞ்சன், சௌமினி விஷயத்திலும் மூக்கை நீட்டுகிறானோ?

அனாவசியமாக அடுத்தவர் விஷயத்தில் தலையிடுகிற அதிகப் பிரசங்கி என்று அவள் நினைத்ததுதான் தப்பு போலும்! தப்பாக நினைத்து அவனிடம் கோபப்பட்டதும் தப்புதான்... என்று எண்ணமிடும்போதே, மதிவதனி விலுக்கென நிமிர்ந்தாள்.

வசீகரன் நல்லவனாக இருந்தால், அது அவனோடு! அதற்காக, மதி, தன்னைத்தானே குற்றம் சாட்டிக் குறைத்துக் கொள்வது, மூடத்தனமில்லை?

ஆனால், அந்த அம்மாள், அவனுடைய ஆனந்திச் சித்தி அதிகம் பேசுகிறவள் என்றால், சௌமினி என்ன ஆவாள்? தந்தை சரியில்லை என்று, சும்மாவே அடங்கிப் போகிறவள் அவள்!

மறுபடியும் தன்னைத்தானே உலுக்கிக் கொண்டாள் மதிவதனி.

இப்போது என்ன ஆகிவிட்டது?

சமீபத்தில் நடந்த திருமணத்தில், அவளுடைய உறவுப் பெண் சௌமினியும், வசீகரனுடைய சித்தி மகன் ரஞ்சனும் கலகலப்பாகப் பேசிக் கொண்டார்கள்!

அவ்வளவுதான்!

அதற்குள், பழகக் கூடாது என்று வசீகரனும், பழகினால் என்ன தப்பு என்று அவளும் சண்டையிட வேண்டுமா?

அதுவே அசட்டுத்தனம் என்றால், ரஞ்சனுடைய தாயார் குணத்தைச் சொல்லி வசீகரன் மிரட்டுவதும், அதற்கும் சௌமினியின் குணத்துக்கும் ஒத்துப் போகுமா என்று

மதி கவலைப்படுவதும், அந்த அசட்டுத் தனத்துக்குச் சிகரம் வைப்பது மாதிரியல்லவா இருக்கிறது!

தேவையற்ற யோசனை! தேவையற்ற கவலை!

இதில் வீணாக்கிய நேரத்தை, உருப்படியாக எதிலாவது செலவு பண்ணியிருக்கலாம்!

வசீகரன் ஆர்டர் கொடுத்த பூங்கொத்துகளையே, சிறுசிறு மாறுதல்களுடன் செய்து கொடுத்து, அவர்கள் எல்லோரையும் அசத்தலாம்!

முக்கியமாக அவனை!

உற்சாகத்துடன் அந்த வடிவமைப்பு வேலையில் ஈடுபட்டாள் மதிவதனி!

வாரத்தில் அவன் சொன்ன ஆறு நாட்களுக்கும், நுணுக்கமான சில மாறுதல்களுடன் ஆறு வகையாகப் பூங்கொத்துகளை வடிவமைத்து அதன்படியே செய்து அனுப்பினார்கள்.

வசீகரன் சொன்னது போலவே, 'கற்பகம்' ஆட்களே வந்து, முந்திய நாளுக்குரிய தொகையைக் கொடுத்து விட்டுப் பூங்கொத்துகளை எடுத்துப் போனார்கள்!

வடிவமைப்பின் மாறுதல்களை யாரேனும், முக்கிய மாக வச்கரன் கவனித்தானா இல்லையா என்று உள்ளூர யோசித்தாள் மதிவதனி.

ஆனால், பெரிய நகைக் கடை! கண்ணும் கருத்துமாகக் கவனிக்கப்பட வேண்டிய வேலைகள் எத்தனையோ இருக்கும்! இந்தச் சின்ன... வாடிக்கையாளர்களுக்குச் சும்மா ஒசியாகக் கொடுக்கிற இந்தக் குட்டிப் பூங் கொத்தைப் பார்க்க, அவனுக்கு நேரம் ஏது?

அவசியம்தான் என்ன?

இதற்குப் போய், இவ்வளவு நேரத்தை ஏன் வீணாக்கி னோம் என்றுகூட, மதிக்கு ஒரு தரம் தோன்றியது!

ஆனால், எதைச் செய்தாலும், அதை முழு ஈடுபாட் டோடு செய்ய வேண்டும் என்ற கொள்கையைச் சிறு வயதிலேயே, பூமா அவளுக்கு ஊட்டி வளர்த்திருந்தாள்.

எனவே, மற்ற யாருக்காகவும் இல்லாமல், தன் திருப்திக் காகவே இந்த முயற்சியை அவள் செய்துதானே இருக்க வேண்டும்!

இதுவரை செய்த அனைத்தும், அப்படிச் செய்தது தானே? அதே போல, இந்த வேறுபாடுகளையும் செய்த தாக எண்ணிச் சந்தோஷப்பட வேண்டும் என்று தனக் குத்தானே அறிவுறுத்திக்கொண்டு, திருப்தியடைய முயன்றாள் அவள்.

ஆறாவது நாள், 'கற்பக'த்தின் வான் வந்து நிற்கவும், முந்தைய நாள் அனுப்பியதன் பில்லை எடுத்து வைத்த வளின் முன்னே கவர் வைக்கப்பட்டது!

''பணம் சரியாக இருக்கிறதா என்று எண்ணிப் பார்த் துக்கொண்டு, பில்லில் கையெழுத்துப் போட்டுத் தாருங் கள், மேடம்!''

கண்கள் பளிச்சிட நிமிர்ந்து பார்த்தால், அவனேதான்! வசீகரன்!

அவனைப் பார்த்ததுமே, ''இன்றைக்குக் குளிர் பானம் குடித்துவிட்டுத்தான் போக வேண்டும் சார்!'' என்று பணத்தை வாங்கிக் கொண்டு ஓடினாள் செல்வி.

''வாருங்கள்., வாருங்கள்!'' என்று எழுந்து வரவேற்ற மதிவதனியின் பார்வை வெளியே நின்ற வாகனத்தின் மீது

மூன்று சக்கர வான்தான்!

ஆச்சரியமாகப் பார்த்து, ''நீங்கள் இதில் வருவீர்கள் என்று நான் எதிர்பார்க்கவே இல்லை!'' என்று உண்மையைச் சொன்னாள்.

''ஏனோ?'' என்றான் அவன். ''எப்போதும், நான் டயோட்டாவில்தான் ஏறுவேன் என்று நினைத்தாய் போல! எங்கள் குடும்பங்களில் எப்படித் தெரியுமா? ஊதி ஒட்ட வைப்பதில் இருந்து தங்கம், வெள்ளி வேலை தெரிந்திருக்க வேண்டும்! கடையிலும், தேர்வு செய்த நகையை எடுத்துப் போய், பில் போட்டு வாங்கி வருகிற எடுபடி வேலையிலிருந்து எல்லாம் செய்த பிறகுதான் முதலாளி இருக்கையில் உட்கார முடியும்! இதுவும் அப்படித்தான்!'' என்று வானைக் காட்டிச் சொன்னான். ''சைக்கிளில் இருந்து, பைக், டெலிவரி வான் எல்லாம் திருப்திகரமாக ஓட்டிக் காட்டிய பிறகுதான் பெரிய கார்ச் சாவி, கைக்கு வரும்! அதனாலேயே, எந்த வாகனத்தை ஓட்டுவதையும், யாரும் கௌரவப் பிரச்சினையாகக் கருதுவது கிடையாது!''

பெருமிதமாகச் சொன்னவனின் முகம், ஏதோ நினைவில் சற்றுக் கறுத்தது.

அந்த நினைவை உதறுகிறவன் போலத் தலையை உலுக்கிக்கொண்டு, ''நான் வந்த காரணமே வேறு! ஐந்து நாட்களுக்கும் ஐந்து விதமான பொக்கே அனுப்பியிருந்தாய்! எல்லோருக்கும் ரொம்ப சந்தோஷம்! வாடிக்கையாளர்கள் அதற்காகவே கேட்கிறார்களாம்! பொக்கே கொடுக்கத் திட்டமிட்டது நல்ல ஐடியா என்று எனக்கும் பாராட்டு! நன்றியை நேரில் சொல்ல வந்தேன்!'' என்றான் ஓரக் கண்ணில் சிரிப்போடு.

மதிவதனியின் முகமும் மலர்ந்தது.

''ஓ! அப்படியானால், இந்தத் திட்டம் உங்களதே தானா?'' என்றாள் மகிழ்ச்சியோடு! ''அப்படித்தான் இருக் குமோ என்று நினைத்தேன்! ஆனால், சந்தேகமாகவும் இருந்தது!''

''ஏனோ?'' என்றான் அவன் மறுபடியும். ''நல்லதைக் கண்டால் நான் பாராட்டத் தயங்கியதே கிடையாதே! அன் றைக்கே பாராட்ட வந்தேனே!'' என்று நினைவுபடுத் தினான்.

''ம்ம்! நினைவிருக்கிறது! சளி பிடித்துவிடும் என்று பாராட்டாமலே போனீர்களே!'' என்றாள் கண்கள் மின்ன!

''துல்லியமாக நினைவு வைத்திருப்பதைப் பார்த்தால், சொல்லாமல் விட்ட பாராட்டுதான் ரொம்பவும் முக்கியம் போல!''

''சொன்னால்தானே, உண்மையாகக் கவனித்ததா, அல்லது கூட்டத்தோடு கோவிந்தாவா என்று நிச்சயமாகத் தெரியும்? இது சந்தேகக் கேஸ் என்பதால் நினைவில் நின்றிருக்கலாம்!''

''ஆயிரம் உருப்படிக்கு ஆர்டர் கொடுத்த பிறகுமா சந்தேகம்?''

''சந்தேகம் தெளிந்திருப்பது இப்போதுதானே? நான் அன்றைக்கு மனதில் நின்ற காரணத்தை அல்லவா சொன்னேன்!''

''அம்பேல்!'' என்று கைகளை உயர்த்தித் தோல்வியை ஒத்துக் கொண்டான் வசீகரன். ''மொத்தமாக வாங்குவ தால், பூங்கொத்துக்கும், இன்னும் கொஞ்சம் விலை குறைத்துப் பேசியிருக்கலாமே என்று சித்தப்பா சொன்

னார். அவரையும் கூட்டி வந்திருக்க வேண்டும்! பேச்சில் உன்னை வெல்ல முடியாது என்று கண்கூடாகக் கண்டிருப் பார்! தொழில் நடத்தத் தேவையான பேச்சுத் திறமை!''

''யாப்பிலக்கணத்தில் வஞ்சப் புகழ்ச்சி அணி என்று வரும்! சரியான உதாரணம்! பேச்சுத் திறமை என்று பாராட்டுவது போல, வாயாடிப் பட்டம் கட்டுகிறீர்களே!''

''அம்மாடியோவ்!'' என்று வாயைப் பொத்திக் கொண் டான் வசீகரன். ''பேசப் பயமாக இருக்கிறது! ஆனாலும் சொல்லாதிருக்க முடியவில்லை! பாவம், கட்டிக் கொள்ளுகிறவன்!''

விடாமல், ''ஆஹா! இதையேதான், நானும் பால் மாற்றி நினைத்தேன்!'' என்று அவள் கூறி முடித்தபோது, இருவருக்குமே சிரிப்பு பீறிட்டது!

அப்படிச் சிரித்துக் கொண்டிருந்தவர்களைத்தான், குளிர் பானத்தோடு வேகமாக வந்து சேர்ந்த செல்வி பார்த்தது!

ஆச்சரியமாக நோக்கியவளிடம், ''நம் பூங்கொத்துகள் எல்லோருக்கும் பிடித்துப் போனதாம், செல்வி! அதைத் தான் யார் யார் எப்படியெப்படிப் பாராட்டினார்கள் என்று சொல்லிக் கொண்டிருந்தார்.'' என்றாள் மதிவதனி.

''எவ்வளவு நேரம் உழைத்து, அதை டிசைன் செய்தே, அக்கா! கட்டாயம் பாராட்டத்தானே செய்வாங்க!'' என்று திருப்திப் பட்டாள் உடனே உழைத்தவள்.

கிளம்பும்போது, ஒரு கணம் அவளை அசையாமல் பார்த்தான் வசீகரன்.

மதிவதனியின் முகம் இறுகவும் தலையசைத்து, ''ஊகூம். நான் சிரித்த முகமாகவே விடைபெற விரும்புவ

தால், வேறெதுவும் சொல்லப் போவதில்லை!'' என்று முறுவலித்துவிட்டு, பதிலாக அவளும் புன்னகை செய்த பிறகே கிளம்பிப் போனான்.

அன்று முழுவதுமே மதிவதனிக்கு மிகவும் உற்சாக மாகவே இருந்தது!

வசீகரன் சிரித்த முகமாகவே விடை பெற்றுச் சென் றதோ, அவனோடு சொல்லுக்குச் சொல் விடாமல் வார்த்தைப் போர் நடத்தியதோ, அல்லது இரண்டுமே சேர்ந்தே தானோ, சின்னச் சின்ன விஷயத்துக்கும் அவளுக்குச் சிரிப்பு வந்தது!

சிரித்த முகமாக விடைபெற விரும்புவதாகச் சொன் னானே!

அதற்காகவே வசீகரன் சௌமினி, ரஞ்சன் பற்றிப் பேசவில்லை!

தொடர்ந்து இப்படியே இருந்துவிட்டால், ரொம்பவே நன்றாகத்தான் இருக்கும்!

இது போன்ற எண்ணங்களோடு வீட்டை அடைந்தால், பல நாட்களுக்குப் பிறகு, தன் பெரியன்னையின் வீடு தேடி, சௌமினி வந்திருந்தாள்!

ஒன்று விட்ட சகோதரியைப் பார்த்ததும் மகிழ்ச்சி பொங்க, ''ஏய்ய் சௌமி! வாவாவா! வேலை மும்முரத் தில், எங்களையெல்லாம் அடியோடு மறந்தேவிட்டாயோ என்று நினைத்தேன்! ஆளையே காணோமே!'' என்று ஆவலாக வரவேற்றாள் மதிவதனி.

''அப்படிக் கேள், மதி. நானும் சௌமியிடம் இதையே தான் சொல்லிக் கொண்டிருந்தேன்! மோகனா திருமணத் துக்கு லீவு போட்டதை ஈடு பண்ண வேண்டியிருந்ததாம்.

இன்னும் ஏதேதோ காரணம் சொல்கிறாள்! சரி, வரும்போது, உன் அம்மாவையும் கூட்டிக்கொண்டு வந்திருக்கலாமே, கண்ணு!'' என்றாள் பூமா!

''அது... அது வந்து.. அம்மாவுக்கு வேலை, பெரியம்மா!'' என்று சற்றுத் தடுமாறி, பதில் சொன்னாள் சௌமினி!

''வேலையாமா? சரிடாச் செல்லம். பரவாயில்லை. நீயாவது வந்தாயே! இருந்து சாப்பிட்டுவிட்டுப் போ. இரவு, பெரியப்பா உன்னை வீட்டுக்குக் கூட்டிப் போய் விடுவார்!'' என்றுவிட்டுத் தங்கை மகளுக்குப் பிடித்த சமையலைச் செய்யப் போன பூமா, சௌமினியின் பதிலில் ஒரு வேறுபாட்டையும் காணவில்லை எனலாம்!

ஆனால், மதிவதனிக்கு என்னவோ இருப்பதாகத் தோன்றவும், சித்தி மகளைத் தன் அறைக்கு அழைத்துச் சென்றாள்!

''இதோ வந்துவிடுகிறேன்'' என்று குளியலறைக்குப் போய் வேகமாக முகம் கழுவி, உடை மாற்றிக் கொண்டு வந்து, ''என்னடி விஷயம்?'' என்று நேராகக் கேட்டாள்.

பொதுவாக, அவர்களுக்குள் ரகசியம் இருந்தது இல்லை!

இப்போதும், ஒளிவு மறைவற்ற சௌமினி சொன்ன பதிலில், மற்றவளுக்குத்தான் தலை சுற்றிவிட்டது!



# 10

எப்போதும் போலவே, சௌமினி, மதிவதனியிடம் எதையும் மறைக்க முயற்சி செய்யவே இல்லை!

மோகனாவின் திருமணம் நடந்து முடிந்து, இந்த ஒரு மாதத்தில், ரஞ்சன் அவளுக்குப் பலமுறை எஸ்எம்எஸ் அனுப்பியிருந்தான். அலுவலக முகவரிக்குக் கடிதங் களும் எழுதி இருந்தான். டெலிபோனிலும் பேசினா னாம்!

அவள் தயங்கியபோது, ''சும்மா உன்னுடன் பழகி விட்டு, விலகிப் போய்விடுகிற எண்ணம் எனக்கு இல்லை, சௌமினி. அதனாலேயே, என் அன்புக்கு இவ்வளவு தெளிவான சாட்சிகளாகக் கடிதங்களும், எஸ்எம்எஸ்சும் அனுப்பி இருக்கிறேன்!'' என்றானாம்.

இப்போது, நேரில் சந்தித்துப் பேசலாம் என்று அழைக் கிறானாம்.

அப்போதுதான் அவனைப் பற்றி, அவளுக்குத் தெளி வாகத் தெரியுமாம்!

அதுகூடத் தனியே, தனியிடத்துக்கு வருமாறு அவன் அழைக்கவில்லையாம்!

''உனக்குத்தான் நிறைய உறவினர் இருக்கிறார்களே! யாரையாவது, கூடக்கூட்டிவா. ஸ்பென்சர், சிட்டி சென்டர் போல, ஏதாவது பெரிய இடங்களில் சந்திப்போம்! அவர் களது அபிப்பிராயமும், உனக்கு என்னைப் பற்றிப் புரிய வைக்கும்!'' என்று அழைக்கிறானாம்!

ரஞ்சனிடம் வேறுபாட்டைக் கண்டுதான், வசீகரன் அவ்வளவு பேசினானா?

வசீகரனைப் பற்றிய நினைவைப் பிடிவாதமாக ஒதுக்கி, ''ரஞ்சனைப் பற்றிப் புரிந்துகொள்வது இருக்கட் டும்! உன் விருப்பம் என்ன, அதைச் சொல்லு!'' என்று கேட்டாள் மதிவதனி.

விழி அகல ஒன்றுவிட்ட சகோதரியைப் பார்த்தாள் சௌமினி.

அவளது கண்களில் நீர் நிறைவதைப் பார்த்ததும், "என்ன சௌமி?" என்று திகைப்புடன் கேட்டாள் மற்றவள்!

"அவர் பணக்காரர், மதி. நான் ஆசைப்படுவது, எந்த வகையில் சரியாகும்?"

ஆசைப்படுவது! அதாவது ஆசைப்படுகிறாள்!

உருகி, "பைத்தியம்!" என்று, சித்தி மகளை அணைத்துக் கொண்டாள் மதிவதனி.

"பணத்தைப் பற்றி, அவரே பெரிதாக நினைக்காத போது, நீ ஏன் கவலைப்படுகிறாய்? சரி! அத்தோடு, நீ எவ்வளவு அருமையான பெண் தெரியுமா? நீ கிடைக்க, அந்த ரஞ்சனும் எவ்வளவோ அதிருஷ்டம் பண்ணியிருக்க வேண்டும்! இப்போது, ரஞ்சனை எப்போது எங்கே சந்திக்கலாம், சொல்லு! உன்னோடு நானும் வருகிறேன்!"

அதிலேயே மகிழ்ந்து போன சௌமினியும் அவளுமாக, ரஞ்சனோடு வெளியே போகிற அன்று, சௌமினி என்ன உடுத்துவது, பொருத்தமான அணிமணிகள் என்னென்ன என்றெல்லாம் முடிவு செய்தனர்.

மகளுக்கு வாங்குகிறபோது, பூமா, அவளுடைய தங்கை மகளுக்கும் சேர்த்தே நிறைய வாங்கிக் கொடுப்பது பழக்கம்! தங்கையுடைய கணவர் சரியில்லை என்பதால், அந்தச் சின்னக் குழந்தை ஏங்கும்படி ஆகக்கூடாது என்ற நல்ல மனம் காரணமாக அவள் செய்வதை, சுதர்சனம் ஒரு நாளும் தடுத்தது இல்லை!

எனவே, சமயத்துக்கு ஏற்றவாறு ஆடை, அணிகளைத் திட்டமிடுவது, இரு பெண்களுக்கும் சந்தோஷமான அனுபவமாகவே இருந்தது!

சித்தி மகளை வீட்டில் விட்டுவிட்டுத் திரும்பி வந்து, தான் மறுநாள் செய்ய வேண்டிய வேலைகள், அணிய வேண்டிய துணிமணிகளைத் திட்டமிட்டு எடுத்து வைத்து விட்டுப் படுத்த மதிவதனிக்கு, வசீகரனின் நினைவு வந்தது!

சௌமினியோடு பேசி, அவளைத் தேற்றித் திட்ட மிட்டபோதும், அவள், அவனை அடியோடு மறந்திருந் தாள் என்று சொல்ல முடியாது!

ஆனால், இப்போது மிகத் தெளிவாக, நினைவில் வந்தான்!

இந்த விவரம் தெரியும்போது வசீகரன் எப்படி உணர் வான் என்று அவளுக்குத் தெரியத்தான் செய்தது!

பிடிவாதமாக அந்த நினைவை ஒதுக்கி, சித்தி மகளின் காதல் நிறைவேறக் கடவுளை வேண்டிக் கொண்டாள் மதிவதனி.

'ஸ்பென்சர்' நுழை வாயிலில் ரஞ்சனைப் பார்க்கும் வரையிலும், மதிவதனிக்கு உள்ளூரக் கொஞ்சம் சஞ் சலமாகத்தான் இருந்தது!

ஒன்று, சும்மா ஒரு பேச்சுக்குச் சொன்னால், முந்திரிக் கொட்டை மாதிரி சௌமினியின் கூடவே வந்து நிற் கிறாளே என்று தன்னைப் பற்றி, ரஞ்சன் எண்ணக் கூடுமோ என்பது!

அடுத்தது, ரஞ்சன் நிஜமாகவே சௌமினியை மணக் கும் எண்ணம் இல்லாமல், அவளைப் பொழுது

போக்குவதற்கு மட்டுமே பயன்படுத்த எண்ணுகிறானோ என்பது!

அதற்காகவே, சௌமினியை முன்னே அனுப்பி விட்டு, சற்றுப் பின் தங்கியிருந்து, ரஞ்சனின் முக பாவனையைக் கவனிக்க எண்ணியிருந்தாள், அவள்!

ஆனால், சௌமினியை மட்டுமாக எப்படி முன்னே போகச் சொல்லுவது என்று, அதற்கொரு காரணம் தேடி மதிவதனி சலிக்கையில், அதற்குத் தேவையே இல்லா மல், ரஞ்சனைப் பக்கவாட்டில் இருந்து பார்த்ததுமே, சௌமினியின் நடை வேகம் பிடித்துவிட்டது!

அவளது வேகத்தின் காரணம் புரியாமல், அவளுக்கு இணையாக வேகமாக நடக்க முயன்றபடி அவள் செல்லும் திசையைப் பார்த்தால், 'காம்ப்ளக்'சின் நுழைவாயிலில் ரஞ்சன் நிற்பது தெரிந்தது.

சட்டெனத் தன் வேகத்தைக் குறைத்து, மெல்லச் சென்றவாறு, ரஞ்சனின் முகத்தை, மதிவதனி கவனித் தாள்.

ஒரு தேடலுடன் சுழன்று கொண்டிருந்த அவனது பார்வை சௌமினியின் மீது விழுந்ததும் அவன் முகம் மாறிய விதம், பல நூறு வார்த்தைகளால், சொல்ல முடி யாத விவரத்தைத் தெளிவாக எடுத்துரைக்க, மதிவதனி நிம்மதியுற்றாள்!

சௌமினியும் அவனும், மனதால் ஒன்றுபட்ட நல்ல இணைகளே!

அந்த வசீகரன் இதை ஒப்புக் கொண்டாலும், இல்லா விட்டாலும், உண்மை இதுதான்!

இவர்களைப் பிரிப்பது பாவம்!

பாவம் என்பது ஒரு புறம் இருக்க, அப்படிப் பிரிக்கும் உரிமையே யாருக்கும் கிடையாதே!

இருவருமே வயது வந்தவர்கள். சௌமினி முன்னிருபதுகளிலும், ரஞ்சன் மத்திய அல்லது பின்னிருபதுகளிலும் இருப்பவர்கள்! இவர்கள் உறுதியோடு ஒன்று நினைத்தால், யாரால் தடுக்க முடியும்?

ஆனால், இருவரும் எண்ணத்தில் உறுதியோடு இருப்பார்களா?

சௌமினிக்குப் பொதுவாக, மற்றவர்களுடன் ஒத்துப் போகிற குணம்! உண்மை தெரிந்திருந்தால் கூட, அடித்துப் பேசமாட்டாள். மற்றவர்கள் அதட்டிப் பேசினால், ஓரளவு அடங்கிக் கூடப் போய்விடுவாள்!

இதுவரை ரஞ்சனைப் பார்த்த சமயங்களில், அவனும் சற்று சௌமினி மாதிரி குணம்தானோ என்று மதிவதனிக்குத் தோன்றியதுண்டு!

ஒருவேளை அதனால்தான், அவன் யாராவது மயக்கு மோகினியிடம் அவன் ஏமாந்துவிடுவான் என்று வசீகரனும் பயந்திருக்கலாம்!

ஆனால், இப்போது இருவரையும் சேர்த்துப் பார்க்கும் போது, இவர்களைப் பிரிக்க எண்ணுவது பாவம் என்று யாருக்குமே தெரியும்!

அந்த வசீகரன் உள்பட!

அதற்குள் சௌமினி சொல்லி, ரஞ்சன் மதிவதனி வந்த பக்கமாகத் திரும்பிப் பார்த்தான்.

சிறு ஏமாற்றம்கூட இல்லாமல், வரவேற்பாகப் புன்னகை செய்தான்.

அதற்குள் அவள் அருகில் நெருங்கிவிட, "வாருங்கள் மதிவதனி! இரண்டு அழகிய மங்கையரை உபசரிக்கும் வாய்ப்பு எளிதில் யாருக்கும் கிடைத்துவிடாது! அப்படி ஓர் அதிருஷ்டத்தை எனக்குத் தந்ததற்கு, மிக்க நன்றி!" என்று சந்தோஷமாகச் சொன்னான்!

உண்மையாகவே உணர்ந்து சொன்ன வார்த்தை களாகவே தோன்றியது மதிக்கு!

"அதிருஷ்டமா? அவசரப்பட்டு வாயை விடாதீர்கள், ரஞ்சன். திரும்பிப் போகிறபோதும் இதே போல உங்க ளால் சொல்ல முடிகிறதா என்று பார்க்கத்தானே, போகி றோம்!" என்று மிரட்டுகிற பாவனையில் அவள் கூறவும், மற்ற இருவரும் நகைக்க, அவளும் அதில் சேர்ந்து கொண்டாள்!

மூவருமாகப் பேசியபடியே சற்று நேரம் சுற்றினார்கள்.

சௌமினியிடம் அன்பிருப்பதைக் காட்டிக் கொண் டாலும், அவளிடமும் முக மலர்ச்சியுடனேயே பேசிய வாறு நடந்த ரஞ்சனை, மதிவதனிக்கு மிகவும் பிடித்துப் போயிற்று!

சௌமினியை இவன் மிகவும் நன்றாக வாழ வைப் பான்!

ஒரு 'மில்க் ஷேக்' வாங்கி உறிஞ்சியபடி, கால் வலிப்பதாகச் சொல்லி, மற்ற இருவரையும் சுற்றி விட்டு வருமாறு மதிவதனி அனுப்பினாள்.

காரணம் புரிந்திருந்ததால், பிகு பண்ணாமலே இரு வரும் கிளம்பி விட்டனர்.

அரைமணி நேரத்தில், அதே இடத்தில் சந்திப்பதாக ஏற்பாடு!

ரஞ்சன், சௌமினி திருமணம் பற்றிக் கனவு கண்ட வாறே 'ஷேக்'கை அவள் குடித்துக் கொண்டிருந்தபோது, "ஹல்லோ! அதிசயம்! ஆனால், உண்மை!" என்ற சந்தோஷக் குரல் கேட்டுத் திரும்பிப் பார்த்தால், வசீகரன் அங்கே நின்றுகொண்டிருந்தான்!

வேறெந்த நினைவும் இல்லாமல், அவளது மனமும் துள்ளியது!

புன்னகையோடு, "'அதிசயம்' மதுரையில் இருக்கிறது! இது ஸ்பென்சர்!" என்று சிரித்தாள் அவள்.

கூடச் சேர்ந்து நகைத்தவாறே, "நான் அதிசயம் என்றது, உன்னைத்தான்!" என்றான் வசீகரன்.

அதற்கும், "நானும் அதிசயமில்லை! இருபத்து மூன்று ஆண்டு, அறுதப் பழசு!" என்று பதிலிறுத்தாள் மதிவதனி.

ஆனால், "எனக்குப் பழக்கம், புதிதாகத்தானே? அதனால், நீ அதிசயமேதான்!" என்று அவன் முடித்தபோது, வதனியால் ஒன்றும் சொல்ல முடியவில்லை!

உள்ளூர உச்சி குளிரும்போது, மறுத்து எப்படிப் பேசுவது?

ஆனால், "என்ன திடீரென்று இந்தப் பக்கம்? ஏதேனும் வாங்க வந்தாயா? அல்லது சும்மா வேடிக்கை பார்க்கவா? வேடிக்கை பார்க்க என்றால், என்னோடு வருகிறாயா, நான் வந்த வேலை முடிந்து போயிற்று! சற்று நேரம், வெறுமனே சுற்றலாம்!" என்று வசீகரன் சரளமாகப் பேசவும், அவளுக்கு உள்ளே வாடிப் போயிற்று!

எவ்வளவு இயல்பாகப் பேசுகிறான்! விவரம் தெரிந்தால், ஆளே மாறி விடுவானே!

தன்னை மீறி, அவளது பார்வை சௌமினியும், ரஞ்சனும் சென்ற திசையில் பாய்ந்தது! "கூட வரச் சொல்லி..." என்ற முணுமுணுப்புடன்.

"யார்?" வினவலாக நோக்கியவனின் பார்வை சட்டெனக் கூர்மை பெற்றது!

"சௌமினியா? ரஞ்சனும் வந்திருக்கிறானா? எங்கே?" என்று கேட்டவாறே சுற்றுமுற்றும் பார்த்துவிட்டு, மீண்டும் மதிவதனியிடம் திரும்பினான்.

அவள் குடித்து முடித்திருந்த 'மில்க்ஷேக்' கப்பை வாங்கிக் குப்பைத் தொட்டியில் போட்டுவிட்டு வந்து, "உனக்கு எத்தனை தடவை சொன்னாலும் புரியாதா, மதி? பெயரில் மட்டும் இந்த மதியை வைத்து என்ன லாபம்? பயன்படுத்தவும் வேண்டாமா? இரண்டு பேருமாகச் சுற்றப் போயிருக்கிறார்களே, யாரேனும் பார்த்தால் என்ன நினைப்பார்கள் என்று தெரியாதா? ஒன்றையும் யோசிப்பது இல்லையா?" என்று படபடத்தான்!

அவர்கள் இருவரும் நேசிப்பவர்கள்! சேர்ந்துப் பார்ப்பவர்கள் என்ன நினைக்கக் கூடும் என்பது பற்றிய கவலை இல்லாதவர்களும் கூட!

ஆனால், அதைப் பற்றி குறை கூறுவதானால், வசீகரனும், மதிவதனியிடம் நின்று பேசக் கூடாதுதானே?

எனவே, லேசாகத் தலை சரித்து அவனை நோக்கி, "இப்போது உங்களையும், என்னையும் பார்க்கிறவர்கள் என்ன நினைப்பார்களோ, அதைத்தான், அவர்களைப் பார்க்கிறபோதும் நினைப்பார்கள்!" என்று கிண்டலாகக் கேட்டாள்.. கேலி மாதிரிதான்.

ஆனால், அதை ரசிக்கவோ, ஒத்துக் கொள்ளவோ மனமற்று, எரிச்சல்பட்டான் வசீகரன்.

சலிப்பைக் காட்டும் ஒரு கையசைவுடன், "விஷயத்தை மாற்றாதே, வதனி. மோகனா மாதிரி, இங்கே முடியாது! ஆனந்திச் சித்தி, லட்சுமி அத்தை போன்றவர்கள் அல்ல. எளிதில் ஒத்துக்கொள்ள மாட்டார்கள். எனவோ, மோகனா போல, இங்கேயும் ரஞ்சனைப் பிடித்துவிட்டால் மட்டும் போதும் என்று..." என்று சொல்லிக்கொண்டு போனவனை ஆத்திரத்துடன் குறுக்கிட்டாள் மதிவதனி.

"அதென்ன வார்த்தை, பிடித்துவிட்டால், பிடித்துவிட்டால் என்று? அப்படியென்ன, மூக்கணாங்கயிறு மாட்டி, உங்கள் உதயனை, எங்கள் மோகனா இழுத்துக்கொண்டு போய்விட்டாள் என்கிறீர்கள்?" என்று சினத்துடன் கேட்டாள். "இரண்டு பேர் காதலித்தார்கள்., மணந்து கொண்டார்கள் என்றால், அதை மதிக்கத் தெரியாதா?"

"பெரிய காதல்!" என்றான் அவன் ஏளனமாக. "விற்பனைப் பிரிவில் மோகனா வேலை பார்த்தவிதம் எனக்கும் தெரியும்! 'அட்டெண்ட'ரை முந்திக்கொண்டு, நகையையும் மதிப்பீட்டுக் குறிப்பையும் எடுத்துக்கொண்டு உதயனிடம் ஓடி, ஓடி வந்ததும், அவனை உரசிக்கொண்டு நின்றதும், கைக்குட்டையை அவன் அருகில் போட்டுவிட்டுப் போனதும், ஓரிரு முறை நானே பார்த்திருக்கிறேன்! இவள் இவ்வளவுதான் என்று புரிந்துகொள்வான் என்று எதிர்பார்த்தால், மடையன் ஒரேயடியாகக் கவிழ்ந்துவிட்டான்...! என்ன?"

மதிவதனி துள்ளிக் குதித்து, நாலடி தள்ளி நிற்கவும், 'என்ன' என்று காரணம் கேட்டான் வசீகரன்.

"பயம்தான். சாதாரண விஷயங்களுக்கெல்லாம் கண்டபடி வண்ணம் தீட்டுகிறீர்களே என்று! நமக்கும் என்ன மாதிரியான பட்டம் கட்டப்பட்டுவிடுமோ என்ற

அச்சம்! இவ்வளவு தூரத்தை உரசல் என்று சொல்ல மாட்டீர்கள்தானே?''

அவளை ஒரு பார்வை பார்த்துவிட்டு, அருகில் சென்று, ''மனதைத் தொட்டுச் சொல்லு மதி, உதயனை வளைத்துப் போட, மோகனா முயற்சி செய்யவே இல்லை என்று, உறுதியாக உன்னால் சொல்ல முடியுமா? நிஜத்தைச் சொல்லு!'' என்று ஆழ்ந்த குரலில் கேட்டான் அவன்.

அவனை மறுத்துப் பேச ஆத்திரத்துடன் வாயைத் திறந்த மதிவதனிக்கு, வார்த்தைகள் தொண்டையில் சிக்கின.

அவளுடைய தந்தை ஏற்பாடு செய்த வேலையை மறுத்துவிட்டு, உதயனின் நகைக்கடை வேலைதான் வேண்டும் என்று மோகனா அங்கே வேலை செய்யப் போனாளே!

நிறைய நகைகளைத் தொட்டுப் பார்ப்பதற்காக என்று அப்போது அவளைக் கேலி செய்தது, இப்போது அசம்பாவிதமாகத் தோன்றியது!

ஆனாலும், அவளுடைய அத்தை மகள், இவன் சொல்லுவது போலத் திட்டமிட்டு, ஒருவனை மயக்கி யிருப்பாளா?

அல்லது, அத்தை ஏதேனும்.... ஊகூம்! இராது!

விட்டால், இவன் தன்னையே சந்தேகிக்க வைத்து விடுவான்!

அத்தோடு, உதயனின் பெயரைச் சொன்னாலே, மோகனா வின் கன்னத்தில் சிவப்பு டாலடிக்குமே! உண்மை நேசம் இல்லாமல் அது நடக்குமா?

ஒருவேளை இவன் பார்த்ததாகச் சொல்வது...

''பாருங்கள் வசீகரன், மோகனாவுக்கு, உதயனிடம் உண்மை நேசம் உண்டு என்று எனக்குத் தெரியும்! ஒருவேளை... ஒருவேளை அந்த நேசத்தின் காரண மாகவே, ஆசைப்பட்டவனின் அருகாமைக்காக, நீங்கள் சொன்னது போலவும், ஓரிரு சம்பவங்கள் எப்போதேனும், ஏதேனும் நடந்திருக்கலாம்! ஆனால், அவளது அன்பைச் சந்தேகப்படுவது, பாவம்!'' என்று முடித்தாள் மதிவதனி.

ஆனால், அவனுக்கு நம்பிக்கை வருவதாக இல்லை!

தோளைக் குலுக்கி, ''அன்பா? அது எவ்வளவு என் பதையும், சீக்கிரமே பார்க்கத்தானே போகிறோம்! அன்பு என்றால், அந்த அன்புக்கு உரியவரைச் சந்தோஷப் படுத்துவது! இப்போதே, உதயனிடம் இறுக்கம் காணப் படுகிறது! அத்தை முகம் வாடித் தெரிகிறது! காரணம், உன் மோகனாவின் அன்பான திருவிளையாடல்கள்தான் என்பது என் கருத்து!'' என்று வறண்ட குரலில் கூறினான் வசீகரன்.

அவனது கருத்து தவறு என்றே மதிவதனி நினைத் தாள். மோகனாவுக்கு அன்பே இல்லை எனவில்லையா? எதற்கும், மோகனாவைப் போய்ப் பார்த்துவிட்டு வர வேண்டும் என்று மனதுக்குள் குறித்துக் கொண்டாள், அவள்.

போய்ப் பார்த்துவிட்டு, அதன் பிறகு, ஆதாரங்களோடு வசீகரனுடன் பேசுவது நல்லது!

இப்போதைக்கு.. கீழ்க் கண்ணால் கைக்கடிகாரத்தைப் பார்த்தபோது, ரஞ்சன், சௌமினி சொன்ன அரைமணி நேரம் தாண்டிக் கொண்டிருப்பது தெரிந்தது!

இப்போது ரஞ்சனும் சௌமினியும் சேர்ந்து இங்கே வந்தால், இந்த வசீகரன் அவர்களிடம் எப்படி நடந்து கொள்ளக் கூடும்?

இவன் ஏதாவது கடுமையாகச் சொல்லப் போக, சும்மாவே மென்மையான சௌமினி அதில் பயந்துவிட்டால்? அப்புறம் அவளைத் தேற்றுவது, பெரும் பாடாயிற்றே!

ஆனால், அப்படி ஏதாவது நடந்தால், ரஞ்சன் எந்த அளவுக்கு ஆண்பிள்ளை என்பதும் தெரிந்து போகும் அல்லவா? வரட்டும்!

அத்தோடு, வசீகரன் எந்த அளவு நாகரீகம் உள்ளவன் என்பதும் தெரிந்து போகும்!

உள்ளூரச் சிறு படபடப்பை அடக்கியவாறு மதிவதனி பார்த்துக் கொண்டிருக்கையிலேயே, கொறிப்பதற்கான ஏதோ பாக்கெட்டுகளைக் கையில் ஏந்தியவாறு, ரஞ்சனும் சௌமினியும் அங்கே வந்து சேர்ந்தனர்.

இதை எதிர்பார்த்திருந்ததாலோ, என்னவோ, வசீகரனின் முகத்தில் எந்த மாறுதலும் இல்லை!

அவனது உதடுகளில் தவழ்ந்த புன்னகை, கண்களை எட்டவில்லை என்பது, கவனித்துப் பார்த்தால் மட்டுமே தெரிந்தது என்பதால், ரஞ்சனுக்கு ஒன்றும் வித்தியாசமாகப் படவில்லை போலும்!

ஒன்றுவிட்ட சகோதரனைப் பார்த்ததும், அவன் முகத்தில் இருந்த புன்னகை, மேலும் விரிந்தது! ''ஹாய் வசி! நீ எப்போது வந்தாய்? இது... சௌமினி தெரிகிறது அல்லவா? மதிவதனியுடைய சித்தி மகள்! மதிவதனியை எப்படித் தெரியும் என்று பார்க்கிறாயா, சௌமி? எங்கள்

'கற்பகம்' கடைகளுக்கு இப்போது அழகான பொக்கே தயாரித்துத் தருகிறவர்கள், அவர்கள்தான்! பொக்கே பற்றிய சகல விதமான பேச்சு வார்த்தைகளையும் நடத்தியவன் வசி என்பதால், இருவருமே, ஒருவருக்கொருவர் நன்றாகத் தெரியும்!'' என்று, விளக்கினான்.

சௌமினியைப் பார்த்து, அழகாக முறுவலித்தான் வசீகரன். ''எவ்வளவு நேரம், இப்படிக் கூப்பிய நிலையிலேயே வைத்திருப்பீர்கள்? கையைக் கீழே போடுங்கள்! பேசத் தொடங்கினால், இவன் லேசில் முடிக்க மாட்டான்!'' என்றுரைத்துத் தன் பேச்சை முடித்தான்.

''சமயத்தில் காலை வாரி விடுவதில், இவனை யாரும் மிஞ்ச முடியாது, சௌமி! அதிலும் அழகான பெண்கள் இருக்கும் இடத்தில், இவன் மட்டும்தான் ஹீரோவாக இருப்பான்! மற்றவர்களை ஸீரோ ஆக்கி விடுவான்!'' என்றான் ரஞ்சன்!''

''ஒன்றுக்கு இரண்டாக அழகான பெண்களைப் பார்த்ததில் உளறுவாயனாகி, நீ ஸீரோ ஆவதற்கு, என்னைக் குற்றம் சொல்வதா? என்ன அநியாயம்ப்பா!'' என்று வசீகரன் மடக்க, எல்லோரும் சிரித்தனர்!

சௌமினி ரொம்பவே சந்தோஷப்படுவது, நன்றாகவே தெரிந்தது!

ரஞ்சனை சந்தித்ததில் ஏற்கனவே அவளுக்கு மகிழ்ச்சி!

இப்போது, அவளுடைய அன்புக்கு உரியவனுடைய குடும்பத்தில் சற்று முக்கியமான இன்னொருவனும், அவளுடன் சகஜமாகப் பேசவே, அதை ஓர் ஒப்புதலாகக் கருதி உளமகிழ்ந்து போனாள், அவள்.

ஆனால், அவளது மனநிலையை உணர்ந்தது போலவே, வசீகரனின் இலகுப் பேச்சுக்குப் பின்னே மறைந்திருந்த

அவனது மனதையும் அறிந்திருந்தால், மதிவதனிக்கு தான் உள்ளூரத் தவிப்பாக இருந்தது!

# 11

வசீகரனுடன் அடுத்துப் பேச நேரும்போது, ஆதாரத்துடன் பேச வேண்டும் என்று முடிவு செய்திருந்ததால், அடுத்த விடுமுறை நாளில், மதிவதனி, மோகனாவைச் சந்திக்கச் சென்றாள்.

ஆனால், கிளம்பும்போதே ஒரு சிறு உறுத்தல் அவளுக்கு ஏற்பட்டது!

அவள் செல்லுகிற நேரத்தில் மோகனா எங்கேயும் வெளியே சென்றிருக்காமல் வீட்டில் இருக்கிறாளா என்று அறிந்து கொள்வதற்காக, அத்தை மகளின் செல்லுக்குத் தொடர்பு கொண்டு விவரம் கேட்டாள்.

''அம்மா வீட்டுக்கு வா. அங்கேதான் இருக்கிறேன்!'' என்றாள் மோகனா.

தந்தை ஒரு தரம் சென்ற சமயத்திலும், மோகனாவை அத்தை வீட்டில் பார்த்ததாக, அவர் சொன்னது, மதிவதனிக்கு நினைவு வந்தது!

சும்மாச் சும்மா அம்மா வீட்டுக்கு ஓடி வந்துவிட்டால், அங்கே புகுந்த வீட்டில், மாமியார், கணவர் தப்பாக எண்ண மாட்டார்களா?

யோசனையோடு சென்றால், கணவர்தான் தாய் வீட்டில் கொண்டுவந்து விட்டுவிட்டுப் போனதாக, மோகனா சொன்னாள்!

ஓ! அப்படியானால், வசீகரன் சொன்னது போலப் பிரச்சினை எதுவும் இல்லை! காக்கை உட்காரப் பனம் பழம் விழுந்தது போல என்று உதாரணம் சொல்வார்களே! அதைப் போல மோகனா தாய் வீட்டுக்கு வருகிற சமயத்தில் மட்டுமாக, மதியும் அவளுடைய தந்தையும், இங்கே வந்திருக்கிறார்கள்!

இப்படி, அந்த வசீகரனும், உதயன் வீட்டுக்கு அவன் சென்றிருந்த நேரத்தில் என்ன நடந்து, அதைத் தப்பாக எண்ணிப் பேசுகிறானோ?

இப்போது மோகனாவிடம் நன்றாகப் பேச்சுக் கொடுத்து, வேண்டிய விவரம் சேகரித்துப் போய், அவனது தவறான கருத்தைத் திருத்த வேண்டும்!

சௌமினி, ரஞ்சன் விஷயத்தில் மூக்கை நுழைக்க வேண்டாம் என்றும் சொல்ல வேண்டும்!

அப்புறம்...

இப்படி எண்ணிறந்த கனவுகளுடன் அத்தை மக ளுடன் பேசத் தொடங்கினாள் மதிவதனி.

''இங்கே எவ்வளவு நேரம் இருப்பாய், மோகனா? மதியமே கூட்டிப் போய்விடுவாரா? அல்லது, இரவு கடையை எடுத்து வைத்துவிட்டு வீட்டுக்குச் செல்லும் போது அழைத்துப் போவாரா?'' என்று, அந்த இரண்டில் ஒரு பதிலை எதிர்பார்த்து விசாரித்தாள்.

ஆனால், ''இரண்டு நேரமும் இல்லை!'' என்று ராகத்தோடு இரு கை விரித்து அபிநயித்தபடி மோகனா பதில் கூறவும் மற்றவள் சற்றுத் திகைத்தாள்!

''பி... பின்னே? பின்னே எப்போது போவதாக இருக்கிறாய்?'' என்று சிறு தடுமாற்றத்துடன் மீண்டும் கேட்டாள். ''நாளைக்கா?''

அப்படித்தான் இருக்க வேண்டும் என்ற, மதிவதனி தனக்குள் எண்ணிக் கொண்ட அப்போதே, ''அதைத் தெளிவாக இப்போது சொல்ல முடியாது, மதி! புது வீடு பார்த்து, பொருட்கள் எல்லாம் வாங்கிப் போட வேண்டும் அல்லவா?'' என்று, சர்வ சாதாரணமாக ஒரு குண்டைப் போட்டாள் மோகனா!

''என்னது? புது வீடா? ஏன்?''

செல்லமாக உதட்டைப் பிதுக்கினாள் மோகனா! ''குடித்தனம் வைக்கத்தான்! நானும் உதயனும் மட்டும் தனியாக, தனிக்குடித்தனம் போகப் போகிறோம்!'' என் றாள் மகிழ்ச்சியோடு.

''அதுதான் ஏன் என்று கேட்கிறேன்! ஒரே பிள்ளை! சேர்ந்து வாழ்வது என்றுதானே போனாய்?''

வசீகரனின் முகம் மனதில் வர, மதிவதனிக்குத் தவிப்பாக இருந்தது. அவனிடம் என்னவென்று, இதைப் பேசுவது?

கவலையுடன் மோகனாவின் பதிலுக்காக அவள் காத்திருக்கையில், மோகனாவுடைய தம்பி மதன் அருகில் வந்தான். ''நன்றாகக் கேள், மதிக்கா! அந்த அத்தை எவ்வளவு நல்ல குணம்! அங்கே போனாலே, பாதாம்பால் காய்ச்சித் தருவார்கள்! அவர்களைப் போய், அம்மாவும் இவளுமாக.. ஒரே பேத்தல், மதிக்கா! நீயாவது கேள்!'' என்று படபடத்தான்!

''ஏய், போடா! வெளியில் இருந்து பார்க்கிறாய்! உள்ளே நடப்பது, உனக்கு என்ன தெரியும்? அம்மாவைச் சொல்ல வந்துவிட்டான்! பிள்ளைகளுக்கு நல்லது தவிர, அம்மா வேறு என்ன சொல்லப் போகிறார்கள்! இப்போதே இப்படி

இருப்பவன், நாளைக்குப் பெண்டாட்டி வந்துவிட்டால், எப்படி மாறுவாயோ? அம்மாவையே விரட்டி விடுவாய் என்று தோன்றுகிறது!'' என்று கோபம் காட்டிப் பேசினாள் மோகனா.

''ஆமாம்! ஊம், ஆம் என்றால், இது ஒரு பாட்டுப் பாடி விடுவீர்களே! இதற்குப் பயந்தே, நான் திருமணம் செய்யவே கூடாது என்று இருக்கிறேன் தெரியுமா?''

''நன்றாக இருந்தாய்! மீசை மட்டும் நன்றாக முளைக் கட்டும்! என்றைக்குக் கல்யாணம் என்று நீயாக வந்து நிற்கிறாயா, இல்லையா என்று பார்ப்போமா? அன்றைக்கு, உன்னை வைத்து வாங்குகிறேன், பார்!''

''அன்றைக்குத்தானே? அதை அப்புறம் பார்ப்போம்! இப்போதைக்கு இன்றையக் கதைக்கு வா! உன் மாமியாருடன் சேர்ந்து இருப்பதாகத்தானே, முதலிலேயே அப்படி ஒத்துக்கொண்டுதானே, திருமணமே நடந்தது...?''

''அதற்காக?'' என்று கிரீச்சிட்டாள் மோகனா.

நல்லவேளை, அத்தை வீட்டில் இல்லை! அல்லது, மோகனாவின் இந்தக் கத்தலுக்கு, அவளிடம் வேறு, வாங்கிக் கட்ட வேண்டும்!

மூச்சு வாங்கிக் கொண்டு, ''அதற்காக, வாழ்க்கை முழு வதும், அவர்களுக்கு அடிமையாகக் கிடப்பேன் என்று எண்ணினாயா? நான் ஒன்றும் அவ்வளவு ஏமாளி அல்ல!'' என்றாள் மோகனா.

''அடிமை என்பானேன், மோகனா? அம்மா கூட, இதுவரை நீ இருக்கவில்லையா? அவர்களையும் அம்மா மாதிரி நினைத்துக் கொள்ளேன்! அவர்கள் பிரியமாக இருக்கும்போது சேர்ந்து இருப்பதில் என்ன தப்பு?'' என்று மனதில் தோன்றியதைச் சொன்னாள் மதிவதனி.

''அம்மாவா...'' என்று ஒரு கணம் யோசித்துப் பார்த்துவிட்டு, மோகனா சொன்னாள். ''அம்மாவும், அத்தையும் ஒன்றாக முடியாது, மதி. அந்த வீட்டில் எனக்கு எந்த உரிமையும் கிடையாது! ஒரு வேலைக்காரியை ஏவினால்கூட, என் நாத்தனார் சொல்வதைத்தான் அவள் செய்வாள். அன்றைக்கு நெய்முறுக்கு செய்திருந்தார்கள். ஆசையாகச் சாப்பிடலாம் என்று கொண்டுவரச் சொன் னால், அப்படியே மகளுக்கு அனுப்பிவிட்டார்கள்! நான் மனுஷி இல்லையா? நான் சாப்பிட வேண்டாமா? நாத்தனார் வேறு! இம்மென்றால், இங்கேயேதான் வாசம்! பார்த்தால், மாமனாரில் இருந்து, சமையல்காரக் கிழவி வரைக்கும் அவளையும், அவள் பெற்று வைத்திருக்கும் வாலுகளையும்தான் கொஞ்சுவார்கள்! பிரியாணியும், பலகாரமும் அமர்க்களப்படும்! புதுப் பெண்ணாக, நான் ஒருத்தி அங்கே இருப்பதே யாருக்கும் நினைவிராது! செய்வது எல்லாவற்றையும் மிச்சம் மீதியில்லாமல் மூட்டை கட்டி அனுப்பி விடுவார்கள்! அன்றைக்கு, எனக்குக் குடிக்கப் பால் இல்லாமல், அண்ணி பையனுக்குக் கொடுத்துவிட்டார்கள்! இன்னும் எத்தனையோ! மற்றதை விடு! உதயனுக்கே இதெல்லாம் வெறுத்துப் போனதால் தானே, தனிவீடு பார்த்துக் குடித்தனம் வைக்கப் போவ தாக, இங்கே கூட்டிவந்து, விட்டிருக்கிறார்! அதைப் பார்த்தும் புரியவில்லையா? அசட்டுத்தனமாகக் கேட்கிறாயே!''

அசைக்க முடியாத கேள்வி!

பெற்ற மகனே, பிரிவினையை விரும்பும்போது, இவளை எப்படிக் குற்றம் சொல்ல முடியும்?

பெற்ற மகனே பிரிந்து போக விரும்பும் அளவுக்கு அங்கே நடந்துதானே இருக்கிறது?

என்னவோ, அவனுடைய அத்தை வீட்டார் தெய்வ லோக வாசிகள் மாதிரி, பேசினானே!

மற்றவர்கள் எல்லோரும் குப்பை மாதிரியும்!

இரண்டாம் தரத்துக் குடிமகள் போல நடத்தினால், இந்தக் காலத்தில், எந்தப் பெண் சகிப்பாள்?

சகிப்பது இருக்கட்டும்! மருமகளும், ஒரு மகளே என்ற உணர்வு இல்லாதவளை, என்னவென்று சொல்வது?

வருகிறவர்களுக்கு எல்லாம் பாதாம்பால் காய்ச்சிக் கொடுப்பார்களாம்! வீட்டு மருமகள் வயிற்றில் அடித்து விட்டு, ஊருக்கு உபசாரமா?

ஊர் மெச்சும்தான்! அந்த வசீகரனைப் போல, எங்கள் அத்தையைப் போல உண்டா என்று பேசுவார்கள்தான்!

ஆனால், உடன் இருக்கும் மருமகளுக்கு வேஷம் புரிந்து வெறுத்துவிடாதா?

மகனுக்குமே புரிந்து போய்த்தானே, வீட்டை விட்டு மனைவியுடன் வெளியேறுகிறார்!

அந்த மட்டும், நீ என்ன கஷ்டம் வேண்டுமானாலும் பட்டுக்கொள்., வெளியே நாங்கள் ஒற்றுமையாக இருப்பதாகக் காட்டிக் கொள்வதுதான் முக்கியம் என்று கை கழுவி விடாமல், நம்மை நம்பி வந்த மனைவிக்குச் செய்ய வேண்டிய கடமையும் உண்டு என்று, உதயன் மோக னாவைக் கூட்டி வந்திருக்கிறாரே! உண்மையான பொறுப் பறிந்த மனிதர் என்று, அவரைக் கும்பிட வேண்டும்!

ஆனால், யார் குப்பை என்று, வசீகரன் இப்போது சொல்லட்டும்!

இந்த அழகில், ரஞ்சனுடைய தாயார், இந்த லட்சுமி அத்தை போல சாது இல்லை என்கிறான்! சாதுவே, இந்தப் பாய்ச்சல் பாய்ந்தால், மற்றது எந்த அளவுக்குப் போகும்?

அப்படிப் பார்த்தால், சௌமினி விஷயமாகப் பய மாகத்தான் இருக்கிறது!

ஆனால், உதயனின் குணம் ரஞ்சனுக்கும் இருந்தால், அஞ்சுவதற்கு ஒன்றுமில்லை!

எவ்வளவு அருமையான பெண் சௌமினி! கொடுத்து வைக்க வேண்டாமா, அவன் குடும்பத்து ரஞ்சனுக்கு!

மோகனாவிடம் விடைபெற்று வந்ததில் இருந்து, நிறைய யோசித்த மதிவதனி, வசீகரனைச் சந்தித்துப் பேச முடிவு செய்தாள்.

ஏற்கனவே, தொழில் தொடர்பான ஒரு யோசனையும் அவளுக்கு இருந்தது!

அதையும், இதையும் சேர்த்துப் பேசுவதா என்று எழுந்த தயக்கம், உடனே மறைந்தது!

வசீகரனே செய்ததுதானே?

பூங்கொத்துக்காக முதல் முறையாக வந்தபோது, அவனும் சொந்த விஷயம் பேசத்தானே செய்தான்? அவனும் சண்டையிடத்தான் வந்தான்!

அவனையே பின்பற்ற வேண்டியதுதான்!

ஆனால், மதி ஒன்றும், அவனைப் போல நல்லது எதையும் கெடுக்கச் சொல்ல எண்ணவில்லை! வாயை மூடிக்கொண்டு சும்மா இருக்கும்படித்தான் சொல்லப் போகிறாள்!

மறுநாள் அவளுடைய பார்ட்னர் மிருதுலாவிடம் சொல்லி விட்டு, வசீகரனைப் பார்க்கப் போனாள் மதிவதனி.

ஏற்கனவே அவள் டெலிபோனில் அனுமதி கேட்டிருந்தால், அவளைக் கண்டதுமே, இன்னொருவரிடம் பொறுப்பை ஒப்படைத்துவிட்டு, அவளைப் பக்கவாட்டில் இருந்த ஓர் அறைக்குள் அழைத்துச் சென்றான் அவன்.

தொழில் தொடர்பான பேச்சு நடத்துகிற இடம் என்று நன்றாகவே தெரிந்தது!

ஆனால், நிம்மதியாக ஓய்வெடுக்கவும் இடம் இருந்தது! வசதியான, கிட்டத்தட்டப் படுக்கை போன்ற பெரிய சோபா.

அவளது பார்வை சென்ற இடத்தைக் கவனித்து, ''அப்பாவுக்காக. கூட்டம் அதிகம் இருக்கும் நாட்களில், இடையிடையே நானும் அதில் சாய்ந்திருந்துவிட்டுப் போவேன்!'' என்றான் வசீகரன்.

கண்களை உருட்டிச் சுழற்றி, ''கூட்டம் அதிகம் இருக்கும் நாட்கள்! என்னமோ, மக்கள் கையில் பணமில்லை., பணமில்லை என்று புலம்புகிறார்கள்! இங்கானால், கூட்ட நெரிசலாம்! ஹூம்! மக்களிடம் பணம் இல்லாமல் போகிற காரணம் இப்போதல்லவா புரிகிறது! பணம் கையில் வந்தாலே, இங்கே வந்து கொட்டி விட்டுப் போய் விடுவார்கள் போல!'' என்றாள் கேலிக் குரலில் அவள்.

"சேமிப்பும்மா, சேமிப்பு! பணமாகக் கையில் வைத்திருந்து என்ன லாபம்? தங்கம் என்றால், அணிந்து மகிழ்வதோடு, அவசரத் தேவைக்கு மீண்டும் பணமாகவும் மாற்றலாமே!''

''ஆக, நகைக்கடை வைத்து, நீங்கள் பொது சேவை தான் செய்கிறீர்கள் என்று சொல்லுங்கள்! பெரிய பெரிய பங்களாக்கள், பென்சும் டயோட்டாவுமாகக் கார்கள்

எல்லாம், இந்தப் பொது சேவைக்கான பரிசுகள்தான் போல!''

சிரித்துவிட்டு, ''என்ன ஒரே கால்வாரல் படலமாக இருக்கிறது? வெறும் பூவிலேயே, உனக்கு என்ன வரு கிறது என்று எனக்குத் தெரியாது என்ற எண்ணமா? ஐந்து ரூபாய்ப் பூவை, ஐநூறு ரூபாய் பொக்கே ஆக்கி விற் கிறாயே!'' என்றான் அவனும்!

''ஹைய்யோ! அவ்வளவு லாபம் வராதுப்பா! ஆனால், ஒரு பொக்கே செய்வதில் எவ்வளவு நளினமான வேலை இருக்கி... ஆஹா!'' என்று தன் தலையில் ஒரு தட்டுத் தட்டிக்கொண்டாள் மதிவதனி'' வந்த வேலையை விட்டு, என்ன பேசிக் கொண்டிருக்கிறேன்!''

''அதை நிதானமாகச் சொல்லலாம்! இப்போது என்ன சாப்பிடுகிறாய்?'' என்று கேட்டான் அவன்.

''ஊகூம். ஒன்றும் வேண்டாம்! தப்பாக எடுத்துக் கொள்ள வேண்டாம், வசீகரன். நான், தொழில் ரீதியாக ஒரு சலுகை கேட்டுத்தான் வந்தேன். அதுவும், தயங்கித் தயங்கித்தான்!''

ஆனால், ''எதற்குத் தயக்கம்?'' என்று அவன் இயல் பான முறுவலோடு கேட்டபோது, யோசித்து வைத்திருந் ததுபோலக் குத்தலாகப் பேச அவளால் முடியாது போயிற்று!

மோகனாவைப் பற்றியும், சௌமினியைப் பற்றியும், அவன் பயன்படுத்திய மயக்க, வளைத்துப் போட என்பன போன்ற வார்த்தைகளை உருப்போட்டு வைத்திருந்த வளுக்கு, அவற்றைச் சொல்ல வாய் வரவில்லையே என்று தன்மீதே கோபம்தான்!

ஆனால், என்னவோ, அந்தச் சூழ்நிலையில் அவனோடு சண்டை போட அவளுக்குக் கொஞ்சமும் பிடிக்காமல் போயிற்று!

அவனிடம் தொழில் ரீதியான ஒரு சலுகைக்காக வந்துவிட்டு, அவனுடனேயே தகராறு பண்ணுவது சரியில்லைதானே என்று தன்னைத்தானே நியாயப்படுத்திக் கொண்ட போதும், அது உண்மையில்லை என்று அவளுக்குத் தெரிந்தே இருந்தது!

ஆனால், நதி மூலம், ரிஷி மூலம் பார்ப்பது பிரச்சினையே என்பது போல, இதன் காரணத்தையும் ஆராய மனமின்றி, வந்த வேலையில் முனைந்தாள் மதிவதினி.

''உங்கள் 'கற்பகம்' நகைக் கடைகளின் முன்புறமாக நிறைய இடம் விட்டுக் கட்டியிருப்பதைப் பார்த்தேன்...''

''ஆமாம். ஏதோ விதி வசமாகத் திருடன் வந்தாலும், கடையை விட்டு வெளியே வந்ததும், மக்களோடு மக்களாகக் கலந்து போய்விட முடியாதபடி, ஒரு பத்தடி தூரம் தனியே செல்லும்படி வைக்க வேண்டும் என்பது ஐடியா! அதே சமயம், செடிகள், நீரூற்று என்று வைத்திருப்பது கொஞ்சம் அழகாகக் கண்ணையும் கவர்ந்து, மனதுக்கும் இதமாக இருக்கும் என்று நினைத்தோம்!''

முறுவலித்து, ''கவரத்தான் செய்கிறது!'' என்று ஒத்துக் கொண்டாள் மதிவதனி. ''கூடவே, விலை, பணம் என்பதில் இருந்து மனதை மாற்றும் என்பதில், நல்ல வியாபார உத்தியும் கூட!'' என்று அவள் தொடர்ந்து கூறவும், அவன் சிரித்தான்.

''உள் நோக்கத்தை, உன் மதி கண்டுபிடித்து விடும் என்று, எனக்குத் தெரியும்!'' என்றான் மெச்சுதலாக.

பூரிப்பை மறைத்து, ''இப்போது என் ஐடியாப்படி நடந்தால், அதுவும் உங்கள் நோக்கத்துக்கு உதவுவதாகவே அமையும்! பாருங்கள் வசி, உங்கள் கடையின் முன்

இருக்கும் இடத்தில், நகைக்கடை தோற்றத்தை மறைக் காத விதமாகக் கடைசி ஓரத்தில், உங்கள் கடைக்கு நேர் கோணத்தில், நடைபாதையிலிருந்து கடை வரை, ஓர் இரண்டு, மூன்றடி அகலத்தில் எங்களுக்கு இடம் தர முடியுமா? அந்த இடத்தில், எங்கள் 'எம்எம்' பூங்கொத்து களை அடுக்கி வைத்தால், விற்பனை நன்றாக இருக்கும் என்று எனக்குத் தோன்றுகிறது! உங்கள் செடி கொடி களோடு சேர்ந்து, அழகாக, உங்கள் கருத்துக்கும் பலம் கூட்டுவதாகவும் அமையும்!'' என்றாள் மதிவதனி.

''இதுதான், நீ 'தயங்கித் தயங்கி'க் கேட்க வந்த தாக்கும்?'' என்று கேட்டான் வசீகரன். உச்சுக் கொட்டி ''நானும் என் கற்பனையை அநியாயத்துக்கு உயரமாகப் பறக்க விட்டுவிட்டேனே! கொஞ்சம் பொறு! ஏமாற் றத்தை விழுங்கிக் கொண்டு, உனக்குப் பதில் சொல்லு கிறேன்!'' என்று மூச்சிரைப்பது போல, சத்தமாக இரு முறை மூச்சை எடுத்துவிட்டான்!

சிறு முறுவலோடு அவள் தலையைச் சிலுப்பவும், சிரித்து, ''நிஜம் மதி!'' என்றான்.

''பிறகு, ''உன் அணுகுமுறை பிரமாதம். எங்களது சாத கங்களைச் சொல்லி, உன் விருப்பத்தை முன் வைத்து, உன் விஷயத்துக்கு வந்தாயே! பிரமாதம்! முடிவு எடுக்கும் உரிமை என் கையிலாக மட்டும் இருந்தால், அப்போதே, இடத்தைத் தந்திருப்பேன்! ஆனால், எங்கள் கடைகளில் அவரவர் நடத்தும் கடைகளில் அதிகப்பங்கு என்றாலும், எல்லாக் கடைகளிலும், எல்லோருக்கும் ஓரளவு உரிமை இருக்கும்!. அப்பா, நான், மற்ற கடைகளிலும், ஓரிருவர். எல்லோரும் சேர்ந்துதான், எந்த முடிவும் எடுப்பது! உன் யோசனை நன்றாகத்தான் இருக்கிறது! எங்களுக்கும்

(Lady

இன்னும் நல்லதுதான். ஆனாலும், இடத்துக்கு வாடகை யாக எவ்வளவு கொடுக்க நீ தயார்?'' என்று கேட்டான் வசீகரன்.

''இங்கே என்ன ரேட்டோ, அதைத் தருகிறோம்!'' என்றாள் அவள்.

''நல்லது! எங்கள் மாதாந்திரக் கூட்டம், கடைசி ஞாயிறன்று, யார் வீட்டிலாவது நடைபெறும்! இந்தக் கூட்டதிலேயே சொல்லி ஏற்பாடு செய்கிறேன்.'' என்று முடித்தான் அவன்.

''நம்பலாமா? வேறு எதற்காகவும் நீங்கள் மாறிவிட மாட்டீர்களே!''

''நிச்சயமாக மாற...'' என்று தொடங்கியவன், அவளைக் கூர்ந்து நோக்கி, ''மாறக் கூடிய விதமாக எதையோ சொல் லப் போகிறாய் போல இருக்கிறதே! ஆனால், தைரிய மாகச் சொல்லு. சொந்த விஷயத்தையும், தொழிலையும் போட்டுக் குழப்பிக் கொள்கிறவன் நான் அல்ல! சௌமி னியா?'' என்று சாதாரணமாகவே வினவினான்.

''இல்லை. மோகனா! முதலில், இப்போது சொல்ல வேண்டாம் என்றுதான் நினைத்தேன்! ஆனால், தொழில் பேச்சுப் பேசினால் சொந்த விஷயம் பேசக்கூடாது என்று சட்டதிட்டம் கிடையாது என்று நீங்களே சொல்லியிருப்ப தால்தான் தைரியமாகப் பேச முடிவு செய்தேன்!''

''தொடக்கத்திலேயே மண்டையில் குட்டும் இந்தப் பீடிகையைப் பார்த்தால், சற்று பயமாகத்தான் இருக்கிறது! ஆனால், இனியேனும், முன்னுரை, முகவுரை தாண்டி, விஷயத்துக்கு வரலாமில்லையா? அல்லது, சொல்வதற் குச் சரியான விஷயமே இல்லையா?''

விஷயம் இல்லையா?

சொன்னாயல்லவா? நன்றாகக் கேட்டுக் கொள் என்று, மோகனா சொன்னது முழுவதையும், அப்படியே சொல்லி முடித்தாள், மதிவதனி!

முழுவதையும் குறுக்கிடாமல் கேட்டுவிட்டு, ''பரவா யில்லையே! நான் நினைத்ததை விடவும், உன் அத்தை மகள் கெட்டிக்காரியாகத்தான் இருக்கிறாள்! இது எல்லாமே, அவளது சொந்தச் சரக்கா? அல்லது கற்றுத் தர, அவள் வீட்டில், ஆள் இருக்கிறதா?'' என்று கேட்டான் வசீகரன்.

பழைய ஏளன முகம்! அதே நக்கல்!

''உண்மை தானாக வருவது! கற்றுக் கொடுத்து அல்ல!'' என்றாள் சினத்துடன்.

''அதனால்தானே கேட்கிறேன், யார் கற்றுக் கொடுத்தது என்று?'' என்றான் அவனும் விடாமல்!

அவள் ஆத்திரத்துடன் முறைக்கவும், ''இப்போது ஆத் திரப்பட வேண்டியவன் நான்தான் மதி! நான் சொல்வதைக் கொஞ்சம் பொறுமையாகக் கேள். உன் மோகனா சொன்ன எதுவுமே உண்மையாக இருக்க முடியாது! முதலில்... அதென்ன? நெய்முறுக்கா? ஷோபனாக்கா, ரொம்பவும் ஆரோக்கியம், அழகு இரண்டையும் சேர்த்துப் பார்க்கிற வர்கள்! நெய் முறுக்கை அவர்கள் எடுத்துப் போக வழியே கிடையாது! அதே போலத்தான் அவள் அடிக்கடி வரு வதும்! அக்காவுக்கு நோயாளி மாமியார்! நர்ஸ் வைத்திருந் தாலும், உணவு அள்ளிக் கொடுப்பது, அக்காதான். அவர்களும், ஷோபனாக்காவிடம் முதலில் இருந்தே அவ்வளவு பிரியமாக இருந்தார்கள். இப்போதும்

இருக்கிறார்கள். உதி திருமணத்தின்போது கூட சொந்தத்தில் ஓர் அம்மாவைக் கூட்டிவந்து, மாமியாருக்குத் துணை வைத்துவிட்டுத்தான், மண்டபத்துக்கு வந்தாள்! அவள் ஓயாது வருவது, நிச்சயமாக நடக்காது! இங்கிருந்து அள்ளிக்கொண்டு போவதும், அப்படித்தான்! அக்காவின் குணமே வேறு! இன்றைக்கு உன் அத்தை மகள் அங்கே வந்ததினால், அவள் குணம் மாறுவது, நடக்கிற காரியம் அல்ல!'' என்றான் அவன் தெளிவும் திடமுமாக!

''என்ன நீங்கள்! ஒரேயடியாக, மோகனாவைப் பொய்யள் ஆக்குகிறீர்கள்? அவள் ஒன்றும், அப்படிப்பட்டவள் கிடையாதே!'' என்று திகைப்பும் குழப்பமுமாகக் கேட்டாள் மதிவதனி.

''நான் கூட, இவ்வளவு அதிகமாக எதிர்பார்க்கவில்லைதான்! இப்படியெல்லாம் சொல்லிச் சொல்லித்தான், உதியைக் கரைத்தாளா? அழுதழுது சொல்லி, அந்த மடையனை நம்ப வைத்தாள் போல! ஆனால், என்னவோ ஆசைப்படுகிறாள்., தனியேதான் இருக்கட்டுமே என்று அத்தையும், அவர்கள் தனிக்குடித்தனம் போல அனுமதித்துவிட்ட பிறகும், எதற்கு இப்படி விஷம் கக்குகிறாள்?'' என்று வசீகரன் குழப்பத்துடன் வாய்விட்டே யோசிக்கவும், மதிக்குத் தூக்கிவாரிப்போட்டது!

அத்தையின் போதனையில், தனிக் குடித்தனத்துக்கு வழி என்று, மோகனா இந்த அளவுக்கு இறங்கினாளோ என்று ஒரு சிறு சந்தேகம் அப்போது அவளுக்கும் ஏற்பட்டிருந்தது!

ஆனால் மோகனாவுடைய மாமியாரை தனிக் குடித்தனத்துக்குச் சம்மதித்திருந்தார் என்பது, அத்தை பெண் அவளிடம் சொல்லாத புதுச் செய்தியாக இருந்தது!

ஏன் சொல்லவில்லை?

அவள் வரைந்த மாமியாரின் தோற்றம் மாறிவிடக் கூடும் என்பதாலா?

அப்படியானால், அவள் சொன்ன மற்றது, எவ்வளவு நிஜம்?

அத்தோடு, அந்த ஆன்ட்டி தனிக் குடித்தனத்துக்குச் சம்மதித்த பிறகும், எதற்கு இந்தக் குறை கூறல்?

அவளும் குழப்பமுற்று நிற்கையில், வசீகரனின் செல்போன் ஒலித்தது!

அவன் எடுத்துப் பேச, அவள் ஒதுங்கிக் கிளம்ப ஆயத்தமானாள்.

"இதோ வருகிறேன்!" என்று முடித்துவிட்டு, வசீகரன் அவளிடம் திரும்பினான்.

கைப்பை சகிதம், அவள் கிளம்பத் தயாராக நிற்கவும், "ஓ, கிளம்பிவிட்டாயா? நல்லதுதான். நானும் உடனே போக வேண்டும்! செல்லில் பேசியது, ஆனந்திச் சித்தி! உடனே வரச் சொல்லுகிறார்கள்! குரல் அவ்வளவு சரியாக இல்லை! இப்போது அந்தப் பெண் சௌமினி என்ன குளறுபடி செய்து வைத்திருக்கிறாளோ!" என்று அவன் கூறவும், மதிக்கு மீண்டும் ஆத்திரம் வந்தது!

"சௌமினி பரமசாது! அவளை ஒன்றும் சொல்லாதீர்கள்! அத்தோடு, காதல், கல்யாணம் எல்லாம் அவரவர் சொந்த விஷயம்! பிறர் தலையிடுவதுதான் தப்பு!" என்றாள் விறைப்பாக.

"அப்படி நினைத்ததுதான், இப்போது ஒரு நச்சு மரமாக வளர்ந்து நிற்கிறது! அடுத்ததையாவது, முளையிலேயே

கிள்ளாமல் விட்டாமல், அதுதான் முட்டாள்தனம்! சரி.. சாரிம்மா! நான் கிளம்ப வேண்டியிருக்கிறது! நீயும் புறப்படு! நீ வந்த விஷயம் பற்றிக் கவலைப்படாதே. மற்றவர்களோடு கலந்து பேசி, அடுத்த ஒன்றாம் தேதிக்குள் முடிவு தெரிவிக்கிறேன். உனக்கு ஆதரவாகப் பேசி, சாதகமான முடிவு வருமாறு பார்த்துக் கொள்ளு கிறேன்... கிளம்புவோமா?'' என்று அவன் கூறவும், சட்டென மதியின் கண்கள் கலங்கின.

ஏதோ பிரச்சினை என்று அவசரமாகக் கிளம்பும் அப்போதும், அவள் கோரி வந்ததை, அவன் மறுக்க.. ஏன், மறக்கவும் இல்லையே!

ஆதரவாகப் பேசி, சாதக முடிவுக்கு ஏற்பாடு செய்கிறா னாம்!

இவனோடு நல்ல விதமாகப் பழக முடியாதபடி, ஏன் இத்தனை தடைகள்?



# 12

எண்ணியதை விடவும் சீக்கிரமே திரும்பிவிட் டாலும், யார் முகத்தையும் பார்த்துப் பேசவோ, நடந்ததை விளக்கவோ முடியும்போல, அப்போது மதிவதனிக்கு தோன்றவில்லை!

வீட்டுக்குச் செல்லவும் மனம் வரவில்லை!

அங்கே தாயிடம் அவ்வளவு சீக்கிரமாகத் திரும்பி வந்ததற்குக் காரணம் சொல்ல நேரும்.

மோகனா, சௌமினி பற்றி, மகள் எடுத்த நிலை தப்பு என்று அன்னை சொல்லப்போவது இல்லை! ஏனெனில், பூமா நியாயமான பெண்மணி.

என்றாலும், நாத்தனார் மகள் விஷயத்தில் தலை யிடாமல் ஒதுங்கியிருக்கக் கூடாதா என்று ஒரு வார்த்தை சொல்வாள் என்பது நிச்சயம்!

நாத்தனாரிடம், பூமாவின் பயம் அப்படிச் சொல்ல வைப்பது நிச்சயம்!

அப்போதும், விளக்கினால், புரிந்து கொள்கிறவளே!

ஆனால், முழுதும் விளக்க வேண்டுமே!

அது அவளுக்கே குழப்பமாக இருக்கும்போது, மற்றவர் களிடம் என்னவென்று, எப்படி விளக்குவது?

எதைச் செய்வதற்கும் மனமின்றிப் போகவே, சற்று நேரம் தன்னந்தனியே இருந்து யோசிப்பது மேல் என்று மதிவதனி தீர்மானித்தாள். அதன்படியே, வழியில் இருந்த ஒரு பூங்காவினுள் போய் உட்கார்ந்து யோசித்தாள்.

வசீகரனை நினைக்கையில் உடம்பிலும் மனதிலும் ஏதோ பரபரப்பாக இருந்தது! கேலியும் கிண்டலுமான பேச்சுதான்! ஆனால்,ஆழ எண்ணிப் பார்த்தால், அந்தப் பரபரப்புக்கு அடிப்படையாக ஒன்றுமே இல்லை!

எப்போதும், சௌமினி மோகனா என்று ஏதாவது தகராறில்தான் முடிந்திருக்கிறது!

இருவருமே நேர் எதிரான நிலையை எடுத்துக் கொண்டு, அதிலேயே நிற்பது!

இன்றைக்கும் அப்படித்தானே?

முழுக்க முழுக்க மோகனாதான்! கடைசியில் சௌமினி!

ஆனால், இதை எப்படி விட முடியும்? நம் உறவின ருக்கு, நாமே உண்மையாக இல்லாவிட்டால் எப்படி?

ஆனால், அந்த அளவுக்கு அவர்கள் உண்மையாக இருக்கிறார்களா?

சௌமினியைக் குற்றம் சொல்ல முடியாது!

அவள் எதையும் மாற்றியோ, மறைத்தோ பேசிய தில்லை!

ஆனால் மோகனா? எந்த அளவுக்கு, அவள் உண்மை பேசினாள்?

அவளது பேச்சை நம்பி, வசீகரனுடன் சண்டையும் போட்டாயிற்று!

அவனும், அவளை உதாரணம் காட்டித்தானே, சௌமினியையும் விரட்ட முனைகிறான்!

அல்லது, சௌமினியை மறுப்பதற்காகவே, மோக னாவைப் பழிக்கிறானா?

சேச்சே! வசீகரன் அப்படிப்பட்டவன் அல்ல! அப்படி யெல்லாம் குயுக்தியாகத் திரித்துப் பேச மாட்டான்!

எப்படித் தெரியும்? நாலைந்து தடவைகளே பார்த்துப் பேசிய ஒருவன் இப்படித்தான் என்று எப்படி நம்புவது?

வசீகரனின் மேல் உள்ள மயக்கத்தில், சொந்த அத்தை மகளான மோகனாவையே தவறாக எண்ணுகிறோமோ என்று ஓர் எண்ணம் தோன்றவும், மதிவதனி எழுந்து விட்டாள்.

தனியாக இருந்து யோசிப்பதாக எண்ணித் தன்னையே சந்தேகிக்கத் தொடங்கிவிட்டாளே!

இது சரி வராது என்று தோன்றவும், மனதை வேறு பக்கம் செலுத்த முயன்றாள் அவள்.

வண்ண வண்ணப் பூக்களுடன் அழகாகப் பரா மரிக்கப்பட்டிருந்த பூங்காவைக் குறுக்கும் நெடுக்குமாக நடந்தபடி பார்க்கப் பார்க்க, மதிவதனியின் மனம் அமைதி அடையலாயிற்று!

பூக்களைப் பார்ப்பதற்கு, அவளுக்கு எப்போதுமே பிடிக்கும்! இப்போது தொழிலே அதுவாக அமைந்தது. தொழிலில் அவளது ஈடுபாட்டை அதிகரித்திருந்தது!

பூக்களிடமும்!

'பூக்களைப் பறிக்காதீர்கள்' என்ற அறிவிப்பை அங்கங்கே பார்க்கையில் அவளுக்குச் சிரிப்பு கூட வந்தது!

இது கூட இல்லாவிட்டால், நம் மக்கள், இவ்வளவு பூக்களை, இந்தச் செடிகளில் விட்டு வைத்திருப்பார்களா, என்ன?

அந்த மலர்களை ரசித்தபடியே அவள் மெல்ல நடந்து கொண்டிருந்தபோது, அவளது செல்போன் ஒலித்தது!

வசீகரன்தான்.

சௌமினியின் முகவரியைக் கேட்டான்.

வயிற்றுக்குள் ஏதோ பிசைய, "எதற்குக் கேட்கிறீர் கள்?" என்று காரணம் கேட்டாள் மதிவதனி.

"காரணம் தெரிவித்தால்தான் சொல்வாயா? அதைத் தெரிவித்தாலும் சொல்ல மாட்டாய்! உனக்குப் பிடிக்காது! ஓ.கே.! நான் வேறு விதமாக அறிந்து கொள்கிறேன்!"

பட்டெனத் தொடர்பு அறவும், மதிவதனிக்கு ஒரு மாதிரி இருந்தது!

பிடிக்காத காரணம் என்றால்?

அவளுக்கும் ரஞ்சனுக்கும் திருமணம் நடக்காது என்று சொல்லப் போகிறானா?

சௌமினி தாங்க மாட்டாளே!

அவசரமாக சௌமினியின் அலுவலகத்துக்கு போன் செய்தால், அவள் அன்று விடுமுறை எடுத்திருப்பதாகச் சொன்னார்கள்!

விழுந்தடித்துக்கொண்டு, வண்டியைக் கிளப்பி, சித்தி வீட்டுக்கு ஓடினால், முகமெல்லாம் பிரகாசமாக, அங்கே சௌமினி இருந்தாள்!

"இப்போது உன்னைப் பார்த்தது சந்தோஷமாக இருக்கிறது, மதி! இன்று ரஞ்சன், அவருடைய பெற்றோரைச் சந்திக்க, என்னை அழைத்துப் போகப் போகிறார்!" என்றாள் உற்சாகத்துடன்.

உள்ளே எட்டிப் பார்த்துவிட்டு, "சித்தி வேலைக்கா, சௌமி?" என்று கேட்டாள் மதிவதனி.

"ஆமாம். இன்று சம்பள நாள். விடுமுறை எடுக்க முடியாது என்றார்கள் ஆனால், ரஞ்சனுக்குக் கொடுப்பதற்குக் கேசரி செய்து வைத்துவிட்டுப் போயிருக்கிறார்கள்! கொஞ்சம் சாப்பிட்டுப் பார்க்கிறாயா?"

''இல்லையில்லை! ரஞ்சனே வந்து சாப்பிடட்டும்! அவருக்குச் செய்ததில், நான் பங்குக்கு வர மாட்டேன்!'' என்று இலகுவாகப் பேச முயன்றபோதும், மதிவதனியின் மனம் கலங்கித் தவித்தது!

இவ்வளவு உற்சாகமாக இருக்கிறாளே! வசீகரன் வந்து, எதிர்மறையாகப் பேசும்போது, எப்படித் தாங்குவாள்? உடைந்து போவாளே!

திடமாக எதிர்த்து நிற்கிறவளும் இல்லையே!

ரஞ்சனாவது எதிர்த்து நிற்பானா என்றால், அதுவும் நிச்சயமாகத் தெரியவில்லையே!

அவன் சீக்கிரமாக வந்து, சௌமினியை அழைத்துச் சென்றுவிட்டால் நன்றாக இருக்குமே என்று சற்று அசட்டுத்தனமாகக்கூட, மதிவதனி ஒரு தரம் நினைத்தாள்.

ஆனால், சீப்பை ஒளித்து வைத்துவிட்டால் கல்யாணம் நின்று விடுமா? இன்றில்லாவிட்டால், நாளைக்கு வசீகரன் வந்து, சௌமினியிடம் பேசத்தானே செய்வான்?

வசீகரனைக் கூப்பிட்டு, இதைத் தெரிவிக்கும்படி சொல்லி அனுப்பியிருப்பது, ரஞ்சனுடைய தாயார் ஆனந்தி அல்லவா?

ஏதோ பாடலை உல்லாசமாக முணுமுணுத்தவாறு, சௌமினி உள்ளே ஏதோ செய்து கொண்டிருக்கையில், வெளியே கார் ஒன்று மெதுவே வந்து நிற்கும் சத்தம் கேட்டு, மதிவதனி ஓடிச் சென்று பார்த்தாள்.

ரஞ்சனில்லை! வசீகரன்தான்.

காரிலிருந்து அவன் இறங்கி வருகையில் ஓடிப்போய், அவனது கையைப் பற்றி, "வேண்டாம், வசி! சௌமி மிகவும் சந்தோஷமாக இருக்கிறாள். தயவுபண்ணி, அதைக் கெடுக்காதீர்கள்!" என்று கெஞ்சிக் கேட்டாள்!

அவனது கரத்தின் மீதிருந்த, மதியின் கைகளைப் பார்த்த அவன் முகம் கனிந்தது!

"இப்படி நீ கேட்கையில், என்னென்னவோ செய்ய லாம் போலத் தோன்றுகிறது! ஆனால், கொடுத்த வாக்கைப் பறக்கவிட்டு, சித்தியின் குடும்ப நலனைப் பறக்க விடுவது, அதில் ஒன்று அல்ல! செய்வதாகப் பொறுப்பேற்று வந்திருப்பதால், நீதான் சற்று ஒதுங்கிக் கொள்ள வேண்டும், மதி!" என்று கூறி, அவளது கைகளை அகற்றிவிட்டு வீட்டின் உள்ளே சென்றான் வசீகரன்.

சற்று முன்தான், அவனுடைய சிறிய தந்தையுடைய மனைவியும், அவனுடைய தாயாருடைய உடன் பிறந்த தங்கையுமான ஆனந்தி சித்தி அவனிடம் தெளிவாகச் சொன்னாள்.

சித்தப்பாவும் சேர்ந்துதான்!

சகோதரர்கள், சகோதரிகளை மணந்திருந்ததால், அந்தக் குடும்பத்தில் கிட்டத்தட்ட மூத்த மகனைப் போலத்தான், வசீகரன்.

எதற்கும், அவனைத்தான் தேடுவார்கள்!

"அந்தப் பெண் சௌமினியை வீட்டுக்கு அழைத்து வரப்போவதாக ரஞ்சன் எங்களிடம் சொன்னானப்பா! நேரடியாக, அவனிடம் வேண்டாம் என்று சொல்ல,

எங்களுக்குத் தயக்கமாக இருக்கிறது! லட்சுமி அண்ணி வீட்டையே துண்டு தறிக்கிற வீட்டுப் பெண் எங்கள் வீட்டுக்கு நிச்சயமாக வேண்டாம்ப்பா! பையன் தலை சுற்றி நிற்கிறானா, அவனிடம் நேராகச் சொல்லப் பயமாக இருக்கிறது! இந்தக் காலத்துப் பையன்கள், எப்படித் திரும்புவார்கள்., என்ன செய்வார்கள் என்றுதான் ஒன்றுமே புரியவில்லையே! அதுவும் உதயனைப் பார்த்த பிறகு, எங்களின் தைரியமே குலைந்துவிட்டது! அமைதி யான பையன் என்று நினைத்ததற்கு, இந்த அளவுக்கு போய்விட்டானே! வேண்டாம்ப்பா! எப்படியாவது, இந்தப் பெண்ணை விலக்கி விடுப்பா!'' என்று இருவருமாக ஒரே மனமாக அவனிடம் சொன்னார்கள்!

இடையிடையே அதிகம் படபடத்தது, சித்தி!

அவள் இந்த வீட்டுக்குள் வந்தால், அடித்து விரட்டி விடுவேன்! திட்டித் தீர்த்து விடுவேன்.. இப்படி!

நாலே நாளில், குடும்பம் நிச்சயமாகத் திசைக்கொரு பக்கம் பிய்த்துக்கொண்டு போய், ஊர் முழுக்க நாறி விடும்!

இப்போது, மோகனாவால், லட்சுமி அத்தையுடைய அழகிய குடும்பம் நாறவில்லையா?

குடும்பம் மட்டுமா? சித்தப்பா சொன்ன பிறகுதானே, அந்தப் பெண்ணின் திட்டம் முழுமையாகப் புரிகிறது!

எப்படியும், அதற்கு இடம் தர முடியாது!

இப்போது ரஞ்சனை மட்டுமல்ல! உதயனையும் ஒரு காய்ச்சு, காய்ச்சியே தீர வேண்டும்!

(Lady

இரண்டு தலைமுறையாக ஒத்து வளர்ந்த குடும்பம், தொழில் இரண்டையும் இந்த மூன்றாவது தலைமுறை அழிப்பதை அனுமதிக்க, நிச்சயமாக முடியாது!

மதிவதனிக்காகக் கூட!

அவள் மட்டும் முதலிலேயே, அவனது வார்த்தைகளுக்குச் செவி சாய்த்திருந்தால் இந்தப் பிரச்சினையேனும், எவ்வளவோ எளிதாக முடிந்து போயிருக்கும்! இப்போது, இப்படிக் கோடரி கொண்டு வெட்டும்படி ஆகியிருக்காது!

எல்லோருக்கும் வலியும் மிச்சமாகியிருக்கும்!

''ப்ளீஸ் வசீகரன், புரிந்து கொள்ளுங்கள்! அவர்கள் இருவரும் ஒருவரை ஒருவர் நேசிக்கிறார்கள்...'' என்று ஏதோ சொல்ல முயன்ற மதிவதனியிடமும், அவன், அதையேதான் சொன்னான்!

''அன்றைக்கே நான் கேட்டது போல நீ செய்திருந்தால், இது பிரச்சினையாகவே, ஆகியிருக்காது! அன்று நீ செய்யாததை, இன்று நான் செய்யப் போகிறேன்! செய்தே ஆக வேண்டிய நிலை!''

''ஆனால், அவளை அதட்டி, மிரட்டிப் பேச நான் விட மாட்டேன்!'' என்று தணிந்த குரலில் சீறினாள் அவள்.

''ஐய்யோ பயமாயிருக்கிறதே!'' என்று வெறும் வாய் வார்த்தையாகச் சொல்லியபடியே, அவளை ஒதுக்கி, வேகமாக உள்ளே சென்றான் அவன்.

வசீகரனைப் பார்த்ததும், சௌமினிக்கு ஆச்சரியமாக இருந்தது!

''வாருங்கள்!'' என்று உற்சாகமாக வரவேற்றவள், சற்றுத் தயங்கி, அவன் முகத்தைப் பார்த்து, ''என்ன விஷயம்?'' என்று சிறு அச்சத்துடன் வினவினாள்.

எந்த நேரமும் குறுக்கிடத் தயாராக மதிவதனி நின் றிருக்க, வசீகரனின் அணுகுமுறையே வேறாக இருந் தது!

''நீயும், ரஞ்சனும் பழகும் விதம் பற்றி எனக்குத் தெரியும், சௌமினி. அந்தப் பழக்கம் எந்த அளவுக்கு வந்திருக்கிறது என்பதும் தெரியும்! அதனாலேயே, எல்லா வகையிலும் துன்பம் தருவது என்று தெரிந்தும், இந்தப் பொறுப்பை நான் ஏற்க வேண்டியதாயிற்று! தயவு பண்ணி, உணர்ச்சி வசப்படாமல், அமைதியாகக் கேட்டு, நான் சொல்வதைப் புரிந்துகொள்ள முயற்சி செய், சௌமினி! அமைதியாக யோசித்தால், நான் சொல்வது சரி என்று, எல்லோருக்குமே புரியும்!'' என்று மதியை ஒரு பார்வை பார்த்துவிட்டுத் தொடங்கினான்.

இது வரை, அவள்தான் அமைதியாகக் கேட்கவில்லை, அதனால் புரிந்து கொள்ளவும் இல்லை என்று ஒரு குட்டு வைக்கிறானாம்!

பார்க்கலாம். இவன் என்னத்தைப் புரிந்து கொள்ளச் சொல்லுகிறான் என்று அமைதியாகவே கேட்டுப் பார்க்கலாமே!

நெஞ்சின் குறுக்கே கைகளைக் கட்டிக்கொண்டு அமர்ந்து, தான் அமைதியாகக் கேட்க இருப்பதைக் காட்டிக் கொண்டாள் மதிவதனி!

இதில், இன்னொன்றும் இருக்கிறது!

யாராவது அதட்டி, கத்திப் பேசும்போதுதான், சௌமினியும் பயந்து கலங்கிப் போவாள். அமைதிப் பேச்சில், அவள்தான் கெட்டிக்காரி!

அமைதியிழக்கப் போவது, யார் என்று பார்க்கலாம்!

''பாரம்மா...'' என்ற வசீகரனின் பார்வை, அந்தச் சின்ன அறையை ஒரு தரம் வலம் வந்தது!

மத்திய வர்க்கத்துக்கும் சற்றுக் கீழான நிலையைக் காட்டும் பொருட்கள்தான். தங்கை, தங்கை கணவரின் இல்லாமையைக் குத்திக்காட்டாத வகையில், பூமா வாங்கிப் போட்டிருந்தவை. அவையும் ஓரளவு பழசாகி விட்டிருந்தன!

பார்வையாலேயே மட்டம் தட்டி, மனம் குன்றச் செய்யும் முயற்சியா?

ஆனால், இதை ரஞ்சனே பொருட்படுத்தாத போது, இவன் என்ன சொல்வது?

சௌமினியும் அதையே எண்ணினாற்போல, குன்றல் இன்றியே நின்றாள்.

''நீ ரஞ்சனைப் பார்த்திருக்கிறாய்! அதாவது, அவனது வாழ்க்கை முறையை! அவன் கொஞ்சம் செலவாளி. எதிலும் உயர் ரகம்தான் வேண்டும்! உணவு, உடை.. அவனது கார், என் காரை விட அதிக விலை உள்ளது தெரியுமா? இதெல்லாம் பார்த்து, உனக்குப் பிரமிப்பாக இருந்திருக்கும்!''

அவன் என்ன சொல்ல வருகிறான் என்று உணர்ந்த மதிவதனி, சட்டெனச் சித்தி மகளைப் பார்த்தால், அவள் அசைவின்றியே நின்று கொண்டிருந்தாள்.

"பிரச்சினை என்ன என்றால், உங்கள் இருவருக்கும் திருமணம் நடந்தால், இந்த வளமான வாழ்க்கை கிடைக் காது!" என்று நிறுத்தினான் வசீகரன்.

யாருக்குக் கிடைக்காது என்று தெளிவாகச் சொல் லாமல், ரஞ்சனை மணப்பதற்கான அவளது நோக்கம் பற்றி வாழைப்பழ ஊசியாக அவன் கூறியது, சரியாகக் குத்துவதற்கு அவகாசம் கொடுக்கிறான் போலும்!

ஆனால், அவகாசம் தேவைப்படாதது போல, சௌமினி உடனே பதில் தந்தாள்.

"அதனால் பரவாயில்லை, வசீகரன் சார்!" என்றவள், அவன் பார்வையால் காட்டியதைக் கையாலேயே சுற்றிக் காட்டி, "எனக்கு இந்த சாதாரண வாழ்க்கை பழக்கமானது தான்! ஆனால், இப்போதைய என் வருமானத்தை வைத்து, இதை விடச் சற்று நல்ல வாழ்வே நாங்கள் வாழ முடியும்! எனக்கு அதுவே போதும்!" என்று, அவன் கேட்ட அமைதியுடனேயே, தெளிவாக உரைத்தாள்!

'சபாஷ்' என்று கைதட்ட வேண்டும் போல இருந்தது, மதிவதனிக்கு!

பெரிதாக அவன் வெளியே காட்டிக் கொள்ளாவிட் டாலும், வசீகரனைக் கண் தட்டி விழிக்க வைத்துவிட் டாளே, அவளுடைய அருமைச் சித்தி மகள்!

முதலிலேயே, வசீகரனை இவளிடமே முட்டிக்கொள்ள விட்டிருக்க வேண்டுமோ?

இனியென்ன? உன் பணம் வேண்டாம் என்று சொல்லியாயிற்று!

அதிலும், 'என் வருமானத்திலேயே, உன் தம்பியை யும் வாழ வைப்பேன்' என்றும் கூறி விட்டாள்! இதற்கு

மேல் என்ன காரணம் சொல்லி, என் தம்பியை விட்டு விலகிப் போய்விடு என்று சொல்ல முடியும்?

இனிமேல், 'சாரி' சொல்லி, வசீகரன் வந்த வழியே செல்ல வேண்டியதுதானே என்று எண்ணமிடும்போதே, இவன் அப்படி இலகுவாகத் தோல்வியை ஒத்துக் கொண்டு போய்விட மாட்டான் என்றும், மதிவதனிக்குத் தோன்றிவிட்டது!

பணத்துக்காக நேசிக்கவில்லை என்று தெளிவாகத் தெரிவித்த பிறகு, இவன் வேறு என்ன காரணம் காட்டி இந்த இணைப்பைத் தவிர்க்க முடியும்? காரணமாகச் சொல்ல வேறு என்ன இருக்கிறது?

மதிவதனி தீவிரமாக யோசிக்கையில், அது எப்படி என்று, வசீகரன் காட்டினான்!

முதல் தாக்குதல் பிசுபிசுத்துப் போனதையே ஒத்துக் கொள்ளாதவனாக, ''அடடா! நீ தவறாக எடுத்துக் கொண்டாயேம்மா!'' என்று ஒரு பழியை சௌமினி மீது சுமத்தினான்.

இரு பெண்களும் உன்னிப்பாக அவன் பேச்சைக் கவனிக்க, ''நான் சொன்னது ரஞ்சனைப் பற்றி! எப் போதும், உள்ளதில் விலை உயர்ந்தது அவனுக்கு வேண்டும்! என் காரை விட அதிகவிலை கார் மட்டுமாக, அவன் வாங்கவில்லை! அதில் டீவி, இன்டர்நெட் எல்லாம் பொருத்தி வைத்திருக்கிறான்! ஏசி குளிர் கொஞ்சம் குறைந்தாலும், தூங்க முடியவில்லை என்று, ஐந்து நட்சத்திர ஹோட்டலுக்குப் போய்விடுவான்! இவன் எப்படி..'' என்று, மீண்டும் ஒரு தரம் அறையில் பார் வையைச் சுழற்றினான்.

''இதைவிடவும் கொஞ்சம் நல்ல வாழ்வே என்று உனக்குத் தோன்றினாலும், அவனுக்கு அது எப்படிப் பட்டதாக இருக்கும்? அவனால் எப்படி சந்தோஷமாக இருக்க முடியும் என்று யோசித்தாயா? ஏசி குளிர் குறைந் தாலே தாங்காதவன், அப்புறம் எப்படித் தூங்குவான்? பஸ்சிலும் ஆட்டோவிலும் எப்படிப் பயணம் செய்வான்? உணவிலும்.. உன்னை உண்மையாக நேசித்ததற்கு, இப்படிப்பட்ட சித்ரவதையையா அவனுக்குப் பரிசாகக் கொடுக்கப் போகிறாய்? கொடுமையாகத் தோன்ற வில்லை?''

தொடர்ந்த அமைதியில், ஒன்றுவிட்ட சகோதரியின் முகத்தைப் பார்த்த மதிவதனி திகைத்துப் போனாள்!

இலக்கற்று விழித்தவளின் கண்களில், ஏதோ சொல்ல முடியாத பயங்கரத்தைப் பார்த்துக் கொண்டிருப்பது போன்ற திகைப்பு!

''எண்ணிப் பார்! இப்போது இளமை வேகத்தில் உன்னோடு வந்து விட்டாலும், அது எத்தனை நாட்கள் தாங்கும்? அனுபவித்துப் பழகிய சுகங்களுக்காக விரைவி லேயே அவன் ஏங்கத் தொடங்கும்போது, உங்கள் அன்புதான் என்ன ஆகும்? அத்தோடு, சுகத்தில் வளர்ந்த உடம்பு! அந்த சுகங்களை இழக்கும்போது, அவனது ஆரோக்கியமும்தான், என்ன ஆகும் என்று யோசித்தாயா? எல்லாம் இழந்து, ஏழையாக, நோயாளியாக...''

நெஞ்சை அழுத்திக்கொண்டு, சௌமினி உடல் பதறவும், மதிவதனி துள்ளி எழுந்தாள்.

''பெரிதாக என்னென்னவோ அளக்கிறீர்களே! ரஞ்ச னுடைய தாயார், உங்கள் சித்தி, அவர்களும் ரஞ்சன் மேல்

அன்பு உள்ளவர்கள்தானே? மகன் இந்த அளவு கஷ்டப்படும்படி எப்படி விடுவார்கள்? மகனின் மகிழ்ச்சி அவர்களுக்கு முக்கியம்தானே? அதற்காகவே இவர்களது நேசத்தை...''

குறுக்கிட்டு, ''ஏற்க மாட்டார்கள்!'' என்றான் வசீகரன். ''உன்னிடம் நான் முன்பே சொல்லியிருக்கிறேன். ஆனந்திச் சித்தி, லட்சுமி அத்தை போன்றவர்கள் அல்ல என்று! இவர்கள், சொன்னால், சொன்னதிலேயே நிற்பார்கள்! வேண்டாம் என்றால், அப்புறம் அவர்களை மாற்றவே முடியாது! அதிலும், இப்போது மோகனாவும், உதயனும் தனிக் குடித்தனம் கிளம்பிய பிறகு, அந்தப் பக்கத்துப் பெண்ணா? ஒரு நாளும் ஒப்ப மாட்டேன்., வேண்டவே வேண்டாம் என்கிறார்...''

''வேண்டாம்!'' என்றாள் சௌமினி கதறலாக!

''சௌமீ... அவசரப்படாதே!'' என்று அருகில் ஓடி வந்து பற்றியவளின் கையை விலக்கி,

''இல்லை, மதி! எனக்கு வேண்டாம்! ரஞ்சனைக் கஷ்டப் படுத்திக் கொண்டு, எனக்கு எதுவுமே வேண்டாம்.! அவர் அங்கேயே சுகமாக... பெற்றோருக்குப் பிள்ளையாக...'' என்றவள் சட்டென நெற்றிப் பொட்டை அழுத்திக் கொண்டாள்.

''ஐயோ! மதி, அவர் இப்போது வருவாரே! அவர் முகத்தைப் பார்த்து, எப்படி வேண்டாம் என்று மறுப்பேன்? ஐயோ, நான்... நான் போய்விடுகிறேன், மதி.! ரஞ்சனிடம், எதுவும் வேண்டாம் என்று நான் சொன்னதாகச் சொல்லி விடு.! முதலில் நான் இங்கிருந்து...'' என்று

தெளிவற்றுப் புலம்பியவள், அவளைத் தடுக்க முயன்ற மதிவதனியைப் பிடித்து விலக்கித் தள்ளிவிட்டு, வேகமாக வெளியே ஓடினாள்.

அவள் தள்ளிய வேகத்தில் தடுமாறி, நிமிர்ந்து, உத விக்கு வந்த வசீகரனை மதிவதனி ஆத்திரத்துடன் முறைத்தபோது, ஒரு கார் திடீரென்று பிரேக் போட்டு நிறுத்தப்படும் சத்தத்தோடு ஒரு மோதலும், சௌமினி யின் 'வீல்' என்ற அலறலும் சேர்ந்து கேட்டன.!



# 13

மற்ற எதையும் விட, சௌமினியின் அலறலே, வீட்டின் உள்ளே இருந்த இருவரையும் கதிகலங்க அடித்தது!

அதிர்ந்து போய், ஒருவரை ஒருவர் பார்த்தவர்கள், உடனே வெளியே ஓடினார்கள்!

இன்னமும் பெரிய அதிர்ச்சியாக, "சௌமி, சௌமி..." என்று அவளைத் தூக்கி அணைத்தவாறு புலம்பிக் கொண்டிருந்தான் ரஞ்சன்.!

அவனது காரில் தான் சௌமினி அடிபட்டு விழுந்திருந் தாள்.!

ஓரிருவராகக் கூடிய கூட்டத்திலிருந்து, ஒருவர் "அவரு மேலே தப்பு இல்லீங்க.! அந்தப் பொண்ணுதான், திடீர்னு வீட்டுக்குள்ளார இருந்து ஓடி வந்து காரிலே விழுந்திருச்சி.!" என்றார்.

''அவரும் காரை நிறுத்திக்கிட்டுதான் இருந்தாரு.!'' என்றது இன்னொரு குரல்.!

''டாக்டர்... யாராவது டாக்டரைக் கூட்டி வாருங்களேன்!'' என்று அழுதான் ரஞ்சன்.

அங்கங்கே சிராய்ப்புகளும் ரத்தக் கசிவுகளும் தெரிந்த போதும், பெரிய அடிபட்டிருப்பதாக, மதிவதனிக்குத் தோன்றவில்லை.!

ஆனால், சௌமி மயங்கிக் கிடந்திருந்த விதம் அவளுக்கு அச்சமூட்டியது!

மண்டியிட்டு, சௌமினிக்கு நாடி பிடித்துப் பார்த்து விட்டு, ''துடிப்பு நன்றாக இருக்கிறது! எலும்பு முறிந் திருப்பதாகவும் தெரியவில்லை! அவளைத் தூக்கி வா, ரஞ்சி. பெரிய சாலையில் ஒரு மருத்துவ மனையைப் பார்த்தேன். உடனே அங்கே போய்விடுவோம்! என் கார் முன்னே நிற்கிறது! அதில் ஏற்று!'' என்று தம்பிக்கு உத்தரவிட்டான்.

அவன் காரைத் திறந்து விட்டு, சௌமினியை ஏற்று கையில், கூட்டத்தில் நின்ற பக்கத்து வீட்டுப் பெண்மணி யிடம் திறந்திருந்த வீட்டைக் காட்டிவிட்டு, மதிவதனி யும் போய்க் காரில் ஏறிக் கொண்டாள்.

மருத்துவமனையில் மனிதாபிமானத்தோடு நடந்து கொண்டார்கள்.!

கண்ட கேள்வி கேட்டுத் தாமதம் செய்யாமல், அவசரமாகப் பரிசோதித்து ''அடி பலமில்லை! அதிர்ச்சி யில்தான் மயங்கிக் கிடக்கிறாள் என்று தோன்றுகிறது! மயக்கம் வந்திருப்பதால், எதற்கும், தலையில் ஒரு

ஸ்கேன் எடுத்து விடுவோம். இப்போது, மயக்கத்தைத் தெளிய வைக்க முயற்சி பண்ணுகிறோம்.'' என்று, சௌமினியை உள்ளே கூட்டிச் சென்றார்கள்.

சற்றுப் பொறுத்து, ஒரு நர்ஸ் வந்து, மதிவதனியை உள்ளே அழைத்துச் சென்றாள்.

என்னவோ என்று பயந்து கொண்டே போனால், படுக்கையில் எழுந்து உட்கார்ந்திருந்தாள் சௌமினி.

ஆனால், கண்ணீருடன்!

அவள் உட்கார்ந்திருப்பதைப் பார்த்து, ஓரளவு நிம்மதி யோடு, ''ஏ...ய், என்னடி சௌமி, ஆளை மிரட்டிவிட் டாயே!'' என்று அருகில் விரைந்தாள் மதிவதனி.

அவளது கையைப் பற்றி, ''மதி, என்ன நடந்தது? அவர்... ரஞ்சன் வந்திருக்கிறாரா? ஓடிய வேகத்தில், அவரது காரில்தான் விழுந்தேனா? என்னவோ, காரில் அவரைப் பார்த்த மாதிரி நினைவிருக்கிறதே...'' என்று விவரம் கேட்டாள் மற்றவள்.

''ஆமாம்!'' என்று மருத்துவமனை வரை வந்ததை மட்டுமாகச் சொன்னாள் மதிவதனி.

ஆனால், ''அவரைப் போகச் சொல்ல வேண்டுமே!'' என்று சௌமினி வேதனையோடு முணகவும், ''ஸில்லி.!'' என்றாள் எரிச்சலாக.

அதிர்ச்சியும் வருத்தமுமாகச் சித்தி மகளின் வெளுத்த முகத்தைப் பார்த்ததும் உடனே தணிந்து, ''நீ வசீகரன் பேச்சைப் பெரிதாக எடுத்துக் கொண்டு ஏதாவது முடிவு பண்ணாதே, சௌமி.! யோசி.! உங்கள் விஷயத்தில் தலையிடுவதற்கு, அவர் யார்? எதுவானாலும், நீயும்,

ரஞ்சனுமாக முடிவு செய்யுங்கள்!'' என்று யோசனை சொன்னாள் மதிவதனி.

மறுப்பாக, சிரமப்பட்டுத் தலையசைத்துவிட்டு, ''ஏதோவாக இருக்கப் போய்த்தானே, அந்த வீட்டுப் பெரியவர்கள், அவரிடம் பொறுப்பை ஒப்படைத்து இருக் கிறார்கள்? அவர் சொன்னது சரிதான், மதி.! எனக்கு இந்தக் கல்யாணம் வேண்டாம்.! என் முடிவைத் தெரிவித்து, ரஞ்சனைப் போகச் சொல்லி விடு!'' என்று சோர்வுடன் கூறினாள் சௌமினி.

''சீக்கிரமாகப் பேசி முடியுங்கள். நோயாளி சோர்கிறது தெரியவில்லை? அவர்கள் தூங்க வேண்டும்!'' என்றார் அருகில் நின்று சௌமினியைக் கவனித்துக் கொண் டிருந்த நர்ஸ்.!

''அதுதான் சரி! நீ தூங்கு அதன் பிறகு, என்ன செய்ய லாம் என்று...'' என்றவளை ''நோ..!'' என்று ஆவேசத் துடன் இடையிட்டாள் சௌமினி.!

''போய்ச் சொல்லு.! எனக்கு இந்தக் கல்யாணமே வேண்டாம்! தெளிவாகச் சொல்லிவிடு.! அதற்கு மேல் அவர் இங்கே நின்றால், நான்... நான் உயிரையே விட்டு விடுவேன்... இது உறுதி என்று நிச்சயமாகச் சொல்லு.! போ! போய்ச் சொல்லி, அவரை அனுப்பி விட்டு வா! இல்லா... இல்லாவிட்டால் நான் இப்போதே...'' என்று கத்தியவாறு வெறி கொண்டவள் போலச் சுற்றுமுற்றும் பார்த்தாள்.!

சாவதற்கு வழி தேடுகிறாளா?

காய்ச்சல் வேகம் போல சௌமினியின் கண்களும் பளபளக்கவும், மதிவதனி பயந்துவிட்டாள்.!

அதற்கு ஏற்ப நர்சும் சௌமினியை அழுத்திப் படுக்க வைத்தபடி, ''அவர்கள் சொன்னால் கேளுங்களேம்மா! அவர்கள், அதிர்ச்சியிலே இருக்கிறது, தெரியலை? என்ன சொன்னாலும் மறுக்காது, ஒத்துக் கொள்ளுங்கள்! மற்றபடி, உள்ள நிலைமையும் கெட்டுவிடும்.!'' என்று சற்றுக் கண்டிப்பான குரலில் கூற, வேகமாக வெளியே ஓடிச் சென்றாள்.

கவலையும் பயமுமாக வெளியே காத்திருந்த ரஞ்சனிடம் நேரே சென்று, ''அவளுக்கு உடம்புக்குப் பெரிதாக ஒன்றுமில்லை.! ஆனால், உங்களை மணக்க முடியாது என்று, சௌமினி கூறிவிட்டாள். உடனே போய்விட வேண்டுமாம். மீறி வற்புறுத்தினால், உயிரை விட்டு விடுவாளாம். சொல்லச் சொன்னாள்.'' என்று மடமட வென்று ஒப்பித்தவள், ரஞ்சனோடு கூடவே நின்ற வசீகரனிடம் திரும்பி, ''இப்போது உங்களுக்குத் திருப்தி தானா?'' என்று கொதிப்புடன் கேட்டாள்.

பிரியாமல் ''என்ன?'' என்ற ரஞ்சனின் பக்கம் அவள் திரும்பக் கூட இல்லை!

மாறாக வசீகரனையே பார்த்து, ''இன்னும் என்ன? ரஞ்சன் இங்கிருந்து போகாவிட்டால், உயிரை விட்டு விடுவாளாம்.! போதுமா? இன்னும் என்ன? நீங்கள் வந்த நோக்கம்தான் நிறைவேறிவிட்டதே! உங்கள் அருமைத் தம்பியைக் கையைப் பிடித்து அழைத்துப் போய், உங்கள் சித்தப்பா வீட்டில் சேர்ப்பதுதானே? உங்கள் அருமைத் தம்பியைக் கையைப் பிடித்து அழைத்துப் போய், உங்கள் சித்தப்பா வீட்டில் சேர்ப்பதுதானே? அல்லது, அவள் உயிரையே விட்டால்தான் நம்பிக்கை வருமா? போங்கள்.!

உடனே போய்விடுங்கள்!'' ஆத்திரமும் அழுகையுமாக விரட்டினாள்.

அப்போதுதான் விஷயம் புரிந்தவனாக, ''வசி... என்ன இது? நீ அங்கே... சௌமி வீட்டில் நீ இருந்தது, என்னையும் அவளையும் பிரிக்கும் முயற்சியாகவா? என்ன நடந்தது, மதிவதனி?'' என்று அவளிடம் வினவினான்.

மதிவதனி பதில் சொல்லு முன்பாக, ''நீ சௌமியை மணந்தால், சொத்து இல்லாமல் போகும்... அதனால் உன் சுக வாழ்வு கெட்டுப் போகும் என்று...'' வசீகரன் மறைக்காமல் சொல்லலானான்.

ஆனால், அவன் பேச்சில் குறுக்கிட்டு, ''அப்படி அம்மா சொல்லச் சொன்னார்களா? இன்று சௌமியை அழைத்து வருவதாகச் சொன்னபோது, அவர்கள் முகம் சரியாக இல்லை என்று அப்போதே நினைத்தேன்! ஆனால், சொத்து என்ன பெரிது, வசி? சௌமி இல்லாமல் எனக்கு வாழ்க்கையே இல்லாமல் போகும் எனும் போது, சொத்து சுகத்தை அனுபவிப்பதுதான் எப்படி? உதியை நினைத்துப் பயப்படுகிறார்கள்! அதுதானே? இந்தக் குடும்பச் சொத்து, பணம், கடையில் பங்கு எதுவும் வேண்டாம் என்று எழுதிக் கொடுக்கிறேன். அப்போது பயம் தீருமா? நிஜமாகவே எனக்கு எதுவும் வேண்டாம். சௌமி வேலை பார்க்கிறாள். நானும் படித்திருக்கிறேன்.! ஒரு வேலை தேடிக்கொண்டு, இந்த பென்ஸ் இல்லையென்றாலும், ஒரு மாருதி காரேனும் வாங்கிக் கொண்டு எங்களால் சுகமாகவே வாழ முடியும்.! இதையும் நீயே அவர்களிடம் எடுத்துச் சொல்லி, எங்கள் திருமணத்துக்கு மட்டும் வந்துவிடச் சொல்லு! அவர்களின் ஆசீர்வாதம்

மட்டும் எங்களுக்குப் போதும்!'' என்று படபடவென்று வேகமாக சொல்லி முடித்தான் ரஞ்சன்.

காதலைத் தெரிவித்தபோது, தாயின் முக மாறுதலில், இவ்வளவும் யோசித்து, முடிவு பண்ணியே வைத்திருக் கிறான்.!

ரஞ்சனின் இந்த முகம் மதிவதனிக்கு வியப்பை அளித்தது என்றால், ''சபாஷ்டா, ராஜா!'' என்று அவள் நினைத்ததையே வசீகரன் பாராட்டுதலாக வாய்விட்டுச் சொல்லி, அவன் முதுகில் தட்டியது அவளை ஆச்சரியக் கடலில் மூழ்கடித்தே விட்டது என்று சொல்லலாம்!

இப்படி ஒரு நிலை ஏற்பட்டு விடக் கூடாது என்று, தொடக்கத்திலிருந்து தடுக்க முயன்றவன்.!

''ரஞ்சி, உங்கள் இருவருக்கும் இடையில் இவ்வளவு உறுதியான அன்பு இருக்கும்போது, பிரச்சினையே கிடையாதும்மா! சித்தி, சித்தப்பாவிடம் நானே எடுத்துச் சொல்லி, உங்கள் திருமணத்தை நல்ல விதமாகவே முடித்து வைக்கிறேன்.!'' என்று அவன் தொடர்ந்து கூறவும், அவளுக்குத் தன் காதுகளையே நம்ப முடிய வில்லை!

''என்ன என்ன என்ன?'' என்று மதிவதனி திகைத்துத் தடுமாறவும், வசீகரன் முறுவலித்தான்.

''என்ன என்று ஒரு தரம் கேட்டாலும், மூன்று தரம் கேட்டாலும் ஒரே அர்த்தம்தான்.! எதற்கு அனாவசியமாக இத்தனை?''

''இது... இது வந்து ஆஆ.....ச்சரியம்! முதலில் இருந்தே எதிர்த்தவர், இப்போது ஒரேயடியாகக் குட்டிக்கரணம் அடிக்கிறீர்களே!''

''தனக்குச் சொத்து வராததைப் பொருட்படுத்தாத சௌமினி, ரஞ்சன் சொத்தில்லாமல் கஷ்டப்படுவான் என்றதும், மாறினாளே, அப்போதே என்னுள்ளும் மாற்றம்தான். உணர்ந்து சொன்னாள்.! ரஞ்சன் வரும்போது வீட்டில் இருக்கக் கூடாது என்று வெளியே ஓடிய போது, சித்தி, சித்தப்பாவிடம்தான் எடுத்துச் சொல்ல வேண்டும் என்று முடிவே பண்ணிவிட்டேன்.! அடுத்து, எதிர்பாராமல் இவ்வளவும் நடந்து விட்டது.! நீ விளையாட்டுப் பிள்ளை... உன் சௌமினிக்குத் திடம் குறைச்சல் என்று எண்ணியிருந்தேன்! ஆனால் இந்தக் காதல் விஷயத்தில் இரண்டு பேரும் எவ்வளவு உறுதியாக இருக்கிறீர்கள்! இந்த உறுதி வென்றுதானே ஆக வேண்டும்? என்ன மதி, நீ என்ன கருதுகிறாய்? அது முக்கியம் ஆயிற்றே!'' என்று அவளைச் சீண்டினான் வசீகரன்.!

''நானா?'' என்று மலர்ந்த விழிகளால் அவனைப் பார்த்தாள் மதிவதனி.

அவனது சீண்டல் புரிந்து, வியப்பையும் பாராட்டையும் மறைத்து, ''ஒரு வெற்றிகரமான பின்வாங்குதலை, இவ்வளவு அழகாக யாராலாவது நடத்தி... இல்லை, நடித்துக் காட்ட முடியுமா என்று பிரமிப்பாய்ப் பார்த்துக் கொண்டிருக்கிறேன்.!'' என்றுரைத்துக் கண்ணால் சிரித்தாள்.

அவனும் கண்ணோரம் சுருங்க முறுவலித்து, ''போன் பண்ணியிருக்கிறேன். சித்தியும், சித்தப்பாவும் இப்போது வருவார்கள். நடிப்பா, நடப்பா என்று அப்போது தெரிந்து கொள்,'' என்று தெரிவித்தான்.

''ஒ அதுதானா?'' என்று இவர்கள் பேச்சைக் கவனித்துக் கொண்டிருந்த ரஞ்சன் சிறு வியப்புடன் வினவினான்.

''சௌமி எப்படி இருக்கிறாளோ என்றிருக்கும் இந்த நிலையில் கூட, தொழிலா என்று எரிச்சல் பட்டேனே!''

அவன் பேசிக் கொண்டிருக்கும் போதே, சற்று அலுப் புற்ற தோற்றத்துடன், சௌமினியைக் கவனித்துக் கொண்டிருந்த நர்ஸ் வெளியே வந்தார். ''என்னம்மா, 'பேஷன்ட்' சொல்லி அனுப்பிய சேதியைத் தெரிவித்து விட்டாயா, இல்லையா? அது தெரியாமல் படுக்கவே மாட்டேன் என்று அடம் பிடிக்கிறது, அந்தப் பெண்! அடிபட்ட அதிர்ச்சி போகக்கொஞ்சம் படுத்து ஓய்வெடு என்றால், கேட்கவே மாட்டேன் என்கிறாள்! வேலை முடிந்தது என்றால், வந்து அவளிடம் சொல்லும்மா.!'' என்று மதிவதனியை அழைத்தார்.

''இதோ! நானே வந்து பேசுகிறேனே!'' என்று, ரஞ்சன் ஆவலாக முன்வந்தான்.

ஆனால் நர்ஸ் அவனைத் தடுத்து, ''அந்தப் பெண் போகச் சொன்ன ஆள் என்றால், தயவு பண்ணி, உள்ளே வர வேண்டாம். நீங்கள் கூறுவதைக் காது கொடுத்துக் கேளாமல் எழுந்து ஓடத் தொடங்கிவிட்டாள் என்றால், மிகுந்த ஆபத்தாகிப் போகும்.! உங்கள் தகராறை எல்லாம் பிறகு, இந்த அதிர்ச்சியிலிருந்து மீண்டு, அவள் கொஞ்சம் நன்றாக ஆன பிறகு வைத்துக் கொள்ளுங்களேன்.! இப் போதைக்கு, இவர் கிளம்பிப் போய்விட்டதாக மட்டும் சொல்லலாமே.!'' என்று யோசனை சொன்னார்.

''அது...'' என்று வசீகரனைப் பார்த்தாள் மதிவதனி.

அவன் முன் வந்து, ''இல்லை மேடம்! அது சரி வராது.! இவன் போய் விட்டதாகச் சொன்னால், அவள் இன்னமும் மனம் ஒடிந்து போவாள். இன்னும் ஓர் ஐந்தே ஐந்து

நிமிஷங்கள் பொறுத்துக் கொள்ளுங்களேன்! வீட்டுப் பெரியவர்கள் வந்து விடுவார்கள்! அவர்கள் பொறுப்பில் விட்டு விட்டால், எல்லாம் சீக்கிரமே சரியாகிவிடும்.!'' என்று சொல்ல, ''என்னவோ, டாக்டர் வந்து, என்ன என்று என்னிடம் கேள்வி கேட்குமுன், ஏதாவது பண்ணுங்கள்!'' என்று திருப்தியற்ற அரைமனதாகவே உள்ளே சென்றார் அந்த நர்ஸ்.

ஆனால், நர்சை அதிகம் காத்திருக்க வைக்காமல், ரஞ்சனுடைய பெற்றோர் விரைவிலேயே வந்துவிட் டார்கள்!

''எங்கள் மருமகள் இப்போது எப்படி இருக்கிறாள்?'' என்று கேட்டபடி.

பேசியது, அவன் தாயார்தான்.

மகன் மீது பார்வை இருந்த போதும், விசாரித்தது வசீகரனையே!

''சொன்னேனே சித்தி, உடம்புக்குப் பெரிய பாதிப்பு இல்லை! ஆனால், மனதை நீங்கள்தான் சீர்ப்படுத்த வேண்டும்!'' என்றான் அவன்.

''இதோப்பா! அதை விட, எனக்கு என்ன வேலை?'' என்று ஆனந்தி சென்றது மகனிடமே!

அவனது கையைப் பற்றி, ''உன்னை மிகவும் கஷ்டப் படுத்தி விட்டேனா, கண்ணா? லட்சுமி அண்ணியையே இந்தப் பாடு படுத்தி விட்டாயே என்று பயந்து விட்டேன்.! உதயன் கடையையே கேட்கவும்... ஆனால், நீ பார்த்த மருமகள் சொத்து சுகம் வேண்டாம் என்கிறாளாமே! உனக்காக, உன் சுகத்துக்காக உன்னையே கூடத் தியாகம் செய்கிறாள்! உன் நன்மையையே பெரிதாகக் கருதும்

இவளை விட நல்ல மருமகள் வேறு யார் கிடைப்பாள்? வாம்மா. நானே, அவளிடம் சொல்லி, எல்லாம் சரி செய் கிறேன்.!'' என்று மகனைப் பிடித்த கையை விடாமல், ''மருமகள் எங்கேப்பா இருக்கிறாள்?'' என்று தாயார் கேட்க, ''இந்தப் பக்கம் போக வேணும், வாங்கம்மா.!'' என்று ரஞ்சனும் தாயைக் கையைப் பிடித்து அழைத்துச் சென்றான்.!

இனி, இங்கே பிரச்சினை இராது!

''ஊ...ப்!'' என்று பெரியதாக ஒரு நிம்மதிப் பெரு மூச்சை இழுத்து விட்ட மதிவதனி, அதே மூச்சு ஒன்று எதிரொலிக்கவும் திரும்பிப் பார்த்தாள்.

வசீகரன்தான்!

புன்னகையோடு, இருவரும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்ட போது, ''கெட்டிக்காரப் பிள்ளையடா.'' என்று வசீகரனின் முதுகில் ஒரு தட்டு விழுந்தது!

ஸ்டெதஸ்கோப் அணிந்து சென்று கொண்டிருந்த மருத்துவரிடம் பேசிவிட்டுத் திரும்பி வந்திருந்த சித் தப்பாதான்!

''அப்படி, இப்படி நல்ல விதமாக முடித்து விடுகிறாய்! இதற்காகத்தான் எல்லோரும் உன்னிடம் வருவது! இங்கே எந்தப் பக்கம்ப்பா, வருங்கால மருமகள் இருக்கும் அறை? சீக்கிரமாகப் போக வேண்டும்! அல்லது, உன் சித்தி கையில், கழுத்தில் கிடக்கிற அத்தனையையும் கழற்றி மருமகளுக்குப் போட்டு விட்டு, அடுத்த செட்டைக் கொண்டு வாருங்கள் என்பாள். சீக்கிரம் சொல்லு!'' என்று அவர் கேட்க, புன்னகையோடு வழி காட்டி அவரை அனுப்பினான், வசீகரன்.

பாதி வழி சென்றவர் நின்று, ''நீ... நீங்கள் இரண்டு பேரும் வரவில்லையா?'' என்று கேட்டார்.

''இப்போது இல்லை, சித்தப்பா. மதிவதனி. அவளுடைய சித்தி வீட்டாருக்குச் சொல்ல வேண்டும். எனக்கும் வேறு வேலை இருக்கிறது!'' என்றான் பிள்ளை.!

''வேறு... உதியா?'' என்று விசாரித்தார் அவர். ''என்ன பிரயோசனம்? மனைவி சொல் மந்திரமாக, உச்சிக்கு ஏறியிருக்கிறது! கடையைக் கையில் கொடுத்து விட்டு, வீட்டோடு இரு என்று பெற்ற தகப்பனிடம் சொல்கிற பையனிடம், யார் என்ன சொல்ல முடியும்? லட்சுமியை நினைக்கும் போதுதான் வேதனையாக இருக்கிறது! ஆனால், அவள்தான் விட்டுவிடலாம் என்று அத்தானிடம் சொன்னாளாம்! அவர்களே ஒப்பும்போது, நீ என்ன செய்ய முடியும்?'' என்றார் நம்பிக்கையற்று!

''முடியும் சித்தப்பா!'' என்றவன், மதிவதனியை ஒரு தரம் பார்த்து, ''சில புதுத் தகவல்கள் கிடைத்திருக்கின்றன, சித்தப்பா. அதனால்தான் முயற்சி செய்யலாம் என்று எண்ணினேன்.!'' என்று பதிலிறுத்தான்.

புதுத் தகவல்களா? என்ன தகவல்கள்?

எப்போது கிடைத்தன?

அவளைப் பார்த்துவிட்டுச் சொன்னானே! அப்படியானால் அவளிடம் இருந்தா அவனுக்கு வேண்டிய தகவல்கள் கிடைத்தன?

மூத்த தலைமுறைக்கு இதமாகச் சும்மா சொல்கிறான் என்று எண்ணினாள் மதிவதனி.

அப்படித்தான் என்பது போல, அவனுடைய சித்தப்பாவும், மதிவதனியைப் பார்த்து விட்டு, ''நல்ல நல்ல

வேலையெல்லாம் சேர்ந்து செய்கிறீர்கள் போல.! வெரிகுட்! வெரிகுட்! தொடர்ந்து செய்யுங்கள்!'' என்று மெச்சியவாறே, சௌமினி இருந்த அறையை நாடிப் போனார்.

என்னத்தைச் சேர்ந்து செய்வது?

இதுவரை, முழுக்க முழுக்க எதிரும் புதிருமாகத்தான் செயல் பட்டிருக்கிறார்கள்!

ஆனால், கடவுள் அருளால், ஒரு நல்ல காரியத்தை அவரவர் வழியில் செய்வதற்கு, இருவருக்குமே வாய்ப்பு கிடைத்திருக்கிறது போல!

ஆனால், அவளுக்கு உண்மையிலேயே ஒரு தகவல் கிடைத்திருந்தது! அதை வைத்து, அவளும் ஒரு முயற்சி செய்து பார்க்கத்தான் போகிறாள்!

வெற்றி கிடைத்தால், இருவருக்கும் பெருமைதானே?

# 14

கிளம்புமுன், வசீகரன் ஏதாவது சொல்வானோ என்று பார்த்தால் அதற்குள் நர்ஸ் வந்து, அவளை சௌமினி கூப்பிடுவதாகச் சொல்லி, மதிவதனியை அழைத்துப் போனார்.

தலையசைத்து விடை பெற்றுக் கொண்டு, அவன் கிளம்பிவிட, தன் துடிப்பை அடக்கிக் கொண்டு, மதிவதனி நர்சுடன் சித்தி மகளிடம் சென்றாள்.

ரஞ்சனுடைய தந்தை சொன்னது போலவே, ஆனந்தி அணிந்திருந்த ஒரு சங்கிலி, சௌமினியின் கழுத்தில் கிடந்தது!

கையில், இரண்டு ஜோடி அதிகப்படி வளையல்கள்!

முகம் பூரித்திருந்த போதும், அருகில் வந்த மதிவதனியின் கையைப் பற்றி, ''எனக்கு ஒன்றும் புரியவில்லையே, மதி?'' என்று மெல்லக் கேட்டாள் சௌமினி.!

''புரிவதற்கென்ன? சீக்கிரமே டும் டும் கொட்ட வேண்டியதுதான்! பெற்றோரை ரஞ்சன் தன் வழிக்குக் கொண்டு வந்துவிட்டார்! இப்போது, எங்கள் மருமகள் எப்போது எங்கள் வீட்டுக்கு வருவாள் என்று உன் மாமியாரும் மாமனாரும் அவசரப்படுகிறார்கள்.!'' என்று சிரித்தாள் மதிவதனி.

சிரித்தபோதும், சௌமினியின் படபடப்பை உணர்ந்து, இயல்பு போலக் கையைப் பற்றிக் கொண்டு, அவள் அருகிலேயே உட்கார்ந்திருக்க, எல்லோருமாகப் பேசிக் கொண்டிருந்தார்கள்.

அப்போது ஒன்று நடந்தது!

''நோயாளி தலையை 'ஸ்கேன்' எடுக்க வேண்டும்! பணம் கட்டிவிட்டு வாருங்கள்!'' என்று இன்னொரு நர்ஸ் வந்து கூறவும், சௌமினியின் முகம் வெளிறியது.!

''மதி, உன்னிடம் எவ்வளவு பணம்...'' என்று அவள் மெல்ல ரகசியமாகக் கேட்கையிலேயே, ''பணம் கட்டியாயிற்று.! இந்தாருங்கள் ரசீது.!'' என்று சட்டைப் பையில் இருந்து, ரசீதை ரஞ்சனுடைய தந்தை எடுத்துக் கொடுத்தார்.

''டாக்டரைப் பார்க்கப் போன போது கட்டிவிட்டு வந்தேன்.!'' என்ற விளக்கத்துடன்.

மதிவதனிக்கே திகைப்புதான்.! நன்றியுடன் நோக்கி, ''இந்தப் பணத்தை நாளை தந்து விடுகிறேன், அங்கிள்.!'' என்றாள் அவள்.

''எதற்கு?'' என்று கேட்டார் அவர்.!

சரியாகப் பதில் சொல்ல முடியாமல் அவள் விழிக்கவும், ''பாரம்மா, எங்களைப் பொறுத்தவரைக்கும், சௌமினி என் மகன் மேல் வைத்திருக்கும் அன்பு தெரிந்ததில் இருந்து, அவள் எங்கள் மருமகள்தான்.! எங்கள் மருமகளுக்கு நாங்கள் செய்வதை, நீ எதற்காகத் திருப்பிக் கொடுக்க வேண்டும்?'' என்று பணத்தை மறுதலித்துச் சொன்னார்.!

''அதில்லை அங்கிள்...'' என்று மதிவதனி இழுக்கையில், ஆனந்தி இடையில் புகுந்து, ''பார் மதி, அவர்தான் மருமகள் என்று விட்டாரே.! அப்புறம் என்ன? யோசி.! ரஞ்சிக்கும் சௌமிக்கும் திருமணம் ஆனபிறகு, இந்த விபத்து நடந்திருந்தால், எங்களிடம் பணத்தை நீட்டுவாயா? இப்போதே, எங்களுக்கு அதே உணர்வுதான். அதனால், எங்களிடம் பணக்கணக்குப் பாராதே.!'' என்று கூறவும், மதிவதனிக்குப் புல்லரித்துவிட்டது!

அவளுக்கே அப்படி என்றால், சௌமினி எப்படி உணர்ந்திருப்பாள்!

அவள் ரொம்பவே நெகிழ்ந்து, படுக்கையை விட்டு எழுந்து, பெரியவர்கள் காலில் விழ முயற்சிக்க, விபத்தின் அதிர்ச்சியில் இருந்து இன்னமும் முழுமையாக மீண்டிராத நிலையில் அவளது கால்கள் தடுமாறி விழப் போக,

எல்லோருமாகப் பதறிப் போய், அவளைத் தூக்க இதில் நர்ஸ் வேறு அதட்ட, சற்று நேரம் ஒரே களேபரமாக இருந்தது.!

கடைசியாக சௌமினியை ரஞ்சன் தூக்கிப் படுக்கையில் விட்டபோது, அவள் முகம் மிகுந்த தெளிவுற்று பூரித்திருந்தது!

அறை வாடகை, மற்றுமுள்ள செலவுகளுக்கு ஏற்கனவே பணம் கட்டியிருந்ததால், நிம்மதியான மனதுடன், மதிவதனி, அவர்கள் எல்லோரிடமும் விடை பெற்றுக் கொண்டு கிளம்பினாள்.!

அங்கே இன்னொரு வேலை இருக்கிறதே.!

இந்த மோகனாவுக்கு, இவ்வளவு கெட்ட புத்தி இருக்கும் என்று அவள் எண்ணியதே இல்லையே!

அத்தை மகளை வைத்து வாங்க வேண்டும் என்று மதிவதனி கிளம்பிச் சென்றால், அங்கே ஏற்கனவே, நிறைய நடந்துவிட்டிருந்தது!

முதல் நிகழ்ச்சியாக, வசீகரன், அவனுடைய அத்தை மகனிடம் பேசி முடித்திருந்தான்.!

தனியே பேச வேண்டும் என்று வசீகரன் கேட்டதும், உதயன் உடனேயே எழுந்து, அவனோடு வந்துவிட்டான்.

உதயனைப் பொறுத்தவரையில், அவன் பக்கத்து நியாயத்தைக் காது கொடுத்துக் கேட்பதற்கு, யாராவது வேண்டியிருந்தது!

அவனுடைய தாயிடம் உள்ள மரியாதையோ, பெரியவர்களிடம் உள்ள பயமோ, குடும்பத்தில் பிரச்சினைகள் ஏற்பட்டு, லேசுபாசாக வெளியே கசியத் தொடங்கியதுமே அவனிடம் நின்று பேச ஆள் இல்லாது போயிற்று.!

அவனும்தான், அவனுடைய அன்னையை எவ்வளவோ உயர்வாக எண்ணியிருந்தான்! ஆனால், வேற்று ரத்தமாய் ஒரு பெண்ணைப் பார்த்ததும் அல்லவா, உண்மைக் குணம் வெளியே வருகிறது.!

அவன் மனைவியை, இரண்டாம் தரக் குடிமகளாக ஒருவர் நடத்துவதா? அது, அவனுடைய அன்னையே என்றாலும்.!

உதயன் கொட்டித் தீர்த்ததைக் குறுக்கிடாமலேயே வசீகரன் கேட்டுக் கொண்டான்.

அவன் முடித்ததும், ''ஆக, பெற்று... இத்தனை ஆண்டுகள் வளர்த்த அத்தையை இன்று வந்தவள் சொல்லித்தான் அறிகிறாய், இல்லையா?'' என்று வசீகரன் கேட்கவும், முன்னவன் விறைத்தான்.

''அவள் வேற்று ரத்தம் என்று அம்மாவுக்குப் பிடிக்காமல் போயிற்று.!'' என்றான் எங்கோ பார்த்தபடி.

''அவளை, உனக்குத் திருமணம் செய்து வைக்கும் போதே, அவள் வேற்று ரத்தம் என்று அத்தைக்குத் தெரியும்தானே? நீ ஆசைப்படுகிறாய் என்ற ஒரே காரணத்துக்காகத் திருமணம் செய்து வைக்கவில்லை? சும்மாவா செய்தார்கள்? ஷோபனாக்காவுக்குக் கொடுத்த அத்தனை நகையும் போட்டுப் பண்ணவில்லை?

''பிறகு எப்படி நடத்தினார்கள்? அவளுக்கென்றே தனியான ஒரு வேலைக்காரப் பெண்ணையே நியமித்து விடவில்லையா? இன்றளவும், அவள் இருக்கிறாள் தானே? பிறகென்ன, வேலையாட்கள், இவள் வேலையை செய்யாமல் இருப்பது?

''அப்புறம் என்ன நெய் முறுக்கா? ஷோபனாக்கா வருகிறாள் என்று செய்து, மிச்சம் மீதி இல்லாமல், அக்கா அள்ளிக் கொண்டு போய்விட்டாளா?''

''அக்கா நெய்முறுக்கு சாப்பிட்டு நீ பார்த்திருக்கிறாயா? அல்லது, அவள் இங்கிருந்து அதை, இதை அள்ளிப் போய்த்தான் பழக்கமா? மருமகள் வந்த பிறகும், இதே பழக்கம் வந்து விடும்., வேண்டாம் என்று வைத்து விட்டுப் போவாளே! அது கூடவா, உனக்கு மறந்து விட்டது?''

''எல்லாவற்றையும் விடு! சேர்ந்து வாழ வேண்டும் என்று கேட்டுச் செய்த திருமணம்! மோகனா ஆசைப் படுகிறாள் என்றதும், தனிக் குடித்தனத்துக்கு அத்தையே சம்மதிக்கவில்லை?

''அவர்களா, உன் மனைவிக்குக் கொடுமை செய் வார்கள்? இரண்டு சகோதரர்களுடைய மனைவிமாரிடம் நல்ல பேர் வாங்கிய அத்தை, மகனுடைய மனைவிக்கு மட்டும் கெட்டது எண்ணுவார்களா? சொல்லுகிறவர்கள் சொன்னால், கேட்கிற உனக்குப் புத்தி வேண்டாம்?

''அதை விடவும், பெரிய கொடுமை! கடையை உன்னிடம் கொடுத்துவிட்டு, மாமாவை வீட்டோடு இருக்கச் சொன்னாயாமே, அது.! பாட்டன் சொத்து பேரனுக்கு என்று உனக்கா? ஒன்று தெரிந்து கொள்! பாட்டன் சொத்து பேரனுக்கு என்கிற முறையில், எனக்கும், ரஞ்சனுக்கும்தான் அப்பாக்களுடையது வரும்.! இந்தத் தொழிலில் ஏற்பட்டிருந்த ஈடுபாட்டினால், சொந்தப் பணம் அவ்வளவையும் கொடுத்துப் பங்குகள் வாங்கித்தான், மாமா கடைச் சொந்தக்காரர் ஆனார்.

அதாவது எல்லாம் சுய சம்பாத்தியம்.! உனக்கு ஒரு பைசா அவர் தர வேண்டியது இல்லை.!''

''ஆனாலும், இதையெல்லாம் சொல்லி, உன்னை வருத்தப்பட விட்டார்களா? பிடியை விட்டால் மகன் மதிக்க மாட்டான் என்று கடைசி வரையிலும் தன் அதி காரத்திலேயே வைத்துக் கொள்கிறார்களே, அது போலவா அத்தையும் மாமாவும்? எடுத்துக்கொள் என்று உழைத்து வளர்த்த கடையைக் கூட விட்டுக் கொடுத்து, ஒதுங் கத்தானே தயாராகிறார்கள்? இதிலிருந்து கூடவா, அவர்களது தன்மை உனக்குப் புரியவில்லை?

''இவ்வளவுக்கும் பிறகும், பெற்றவர்கள் நல்லவர் களாக இல்லை என்று மனைவி சொல்லுவதைக் கேட்டு, நம்புகிறாயே! உன்னை என்ன செய்தால் தகும்?'' என்று கொதிப்புடன் கேட்டு வசீகரன் நிறுத்த, ''கால் செருப்பைக் கழற்றி அடி.!'' என்று, அதே குரலில் முடித்தான் உதயன்.!

''உதி?.!''

கண்களில் மல்கியிருந்த நீரை, இமைகளை அழுத்தி மூடி வெளியேற்றி விட்டு, உதயன் பேசினான். ''ஆமாம் வசி.! நம்மிடம் உயிராய் இருக்கும் மனைவி, அழுது அரற்றும்போது, அது பொய்யாக இருக்குமோ என்று யோசிக்கக் கூடத் தோன்றவில்லையே! இத்தனை ஆண்டுகள் அன்பைக் கொட்டி வளர்த்த பெற்றவர்களைப் பற்றி என்றாலும் அதுவும் இப்போதும் அதேபோல விட்டுக் கொடுப்பதைக் கூட நினைக்காமல்... அவர் களிடம் மன்னிப்புக் கேட்க வேண்டும்! காலில் விழுந்து..! அதற்கு முன்... இப்போது புரிகிறது! கடையைக் கைக்குள் கொண்டு வரச் சொல்லி ஏன் கேட்டாள் என்பதும் தெரிய

வருகிறது! அப்பாவின் சுய சம்பாத்தியம்.! எதைச் செய்யவும் அவருக்கு உரிமை உண்டு! இவளது கெட்ட புத்தி புரிந்து, தண்டனையாகத் தருமத்துக்குக் கொடுத்து விடலாமே! கொஞ்சம் யோசித்திருந்தால், அடிவரை புரிந்து போயிருக்கும்! அதைச் செய்யாமல் இருந்து விட்டேனே! அம்மா, அப்பாவை வேதனைப் படுத்தி விட்டேனே!'' என்று மறுகினான் உதயன்.

அத்தை மகனின் கையைப் பற்றி அழுத்தி, ''சரி, அதெல்லாம் முடிந்தது, முடிந்ததாகவே இருக்கட்டும்.! இனி, செய்த தவறைத் திருத்த, ஆவன செய்.! மோகனா வையும் வழிக்குக் கொண்டு வர முயற்சி செய்.!'' என்றான் வசீகரன்.

''அவளையா...?'' என்ற உதயனின் கைத்த குரலும், அவனுடைய மாமன் மகனுக்குப் பிடிக்கவில்லை.!

''சரி, மோகனா உன்மேல் அன்பு இல்லாதவள் அல்ல! சில தவறான எண்ணங்கள்! அல்லது, உபதேசங் களாகவும் இருக்கலாம். கண்டுபிடித்து சீர்ப்படுத்த வேண்டுமே தவிர, விட்டுவிட முடியாது.''

நிமிர்ந்து, ''எல்லாம் பார்த்துக் கொள்கிறேன், வசி.!'' என்றான் உதயன். ''நீ வேண்டுமானால் பார்.! இனிமேல் என்னைப் பற்றி வருத்தப்பட்டுப் பேச எதுவும் இராது! பழைய உதி திரும்பி வந்து விட்டான்! ப்ராமிஸ்!'' என்று உறுதியளித்தான்.

உதயனை மறுபடியும் கடையில் கொண்டு போய் விட்டுவிட்டு, வசீகரன் தன்வழியே போனான்.!

அவன் சென்ற பிறகு, முன்னே அமர்ந்திருந்த இடத்தில் உட்கார உதயனுக்கு மனம் வரவில்லை.

அவனுடைய தந்தை, சுய முயற்சியால் சம்பாதித்த இடம்! அதில் உட்கார, அவருடைய மகனாகப் பிறந்தது தவிர, அவனுக்கு என்ன தகுதி இருக்கிறது?

அந்தத் தகுதியைக் கூடக் கேவலப்படுத்தி விட் டானே!

சற்று நேரம், கடையின் பின்னே இருந்த தனியறை யில் போய் உட்கார்ந்திருந்தான்.

செய்ய வேண்டியதைச் செய்து முடிக்காமல், அமைதி வராது!

கணக்குப் பிள்ளையிடம் சொல்லிவிட்டு, எழுந்து வெளியே சென்றான்.

காரை எடுத்துக் கொண்டு, அவன் சென்ற முதல் இடம் மனைவி வீடு!

கணவனைக் கண்டதும், முகம் பளபளக்க, ஓடி வந்தாள், மோகனா. "கடைக்குப் 'பவர்' எழுதி வாங்கி ஏற் பாடு செய்து விட்டீர்களா? இப்படிக் கட்டாயப் படுத்தித் தான் அவரை ஓய்வு எடுக்க வைக்க முடியும்! இல்லா விட்டால், உழைத்து உழைத்து ஓடாகிப் போவார்! அத் தோடு, நாம் விரும்புகிற மாதிரி, கடையில் மாறுதல் செய்து விற்பனையைப் பெருக்கவும், முழு உரிமை உங்கள் கையில் இருந்தால்தானே, முடியும்? மாமா வுடையது பழைய காலக் கட்டுத் திட்டங்கள்! இப்போது, உங்கள் கருத்துக்களைப் புகுத்தி, கடையில் விற் பனையை அதிகரிக்கும் போது, அவ்வளவையும் நாம் மட்டுமேவா, வைத்துக் கொள்ளப் போகிறோம்? பெரியவர் களுக்கும்தானே கொடுப்போம்? அதனால், நாள் தள் ளாமல், முதலில், கடையின் அதிகாரத்தைக் கைக்குக்

கொண்டு வரப் பாருங்கள்...'' என்று உரிய விதமாகக் குரலை ஏற்றி இறக்கி, இமைகளைப் படபடவென்று கொட்டி, உதடுகளை அழகாகக் குவித்து வேகமாகச் சொல்லிக் கொண்டே போனவளுக்கு, ஏதோ மாறுபாடு மனதில் உறுத்தியது!

வழக்கமாகத் தலையை ஒப்புதலாக ஆட்டி, ஆட்டிக் கேட்கும் கணவன் ஏன் இப்படி இடித்த புளி மாதிரி அசையாமல் இருக்கிறான்?

''ஏய் உதி.! என்னப்பா அப்படிப் பார்க்கிறீர்கள்? என்னவோ, இன்றுதான் புதிதாகப் பார்க்கிற மாதிரி? ம்?'' என்று கொஞ்சலாக வினவி அவன் மூக்கைப் பிடித்துச் செல்லமாக ஆட்டினாள் மனைவி.

அவளது கையை மெல்ல அகற்றிவிட்டு ''புதிதாகத் தான் தெரிகிறது. மோகி.! என்னமாய் நடிக்கிறாய்?'' என்றான் அவன்.

விறைப்புற்று நிமிர்ந்து, ''நடிப்பா?'' என்ன உளறு கிறீர்கள்?'' என்றாள் அவள்.

''நடிப்புதான்.! ஆனால், எனக்குப் புரியாதது... நான் ஏற்கனவே உன்னிடம் மிகவும் அன்பாகத்தானே இருந் தேன்? அம்மா, அக்கா, அப்பா எல்லோருமே பாசத்தைக் கொட்டும் போதே, ஏன் அவர்களை எல்லாம் இப்படிப் பொய் மேல் பொய்யாகச் சொல்லி, அவர்களைப் பிரிக்க நினைத்தாய் என்பதுதான்...

''பொய்யா? எல்லாமே, நிஜம், உதி.! உங்களிடம் என்னைப் பற்றித் தப்புத் தப்பாகச் சொல்லி, யாரோ நம்மைப் பிரிக்க ஏற்பாடு செய்கிறார்கள்! அதில் ஏமாந்து விடாதீர்கள், உதி.! உங்களைப் பிரிந்தால், அப்புறம் நான்

செத்தே போவேன்...'' என்று கண்ணைக் கசக்கினாள் மோகனா.

உதடுகள் ஒரு தீர்மானத்தில் அழுந்த அவளைப் பார்த்தான் உதயன். ''அப்படியானால், நீ வாழ்வதும், சாவதும் உன் கையில்தான் இருக்கிறது!'' என்றான் நிதானமாக.

புதியவனைப் போலக் கணவனைப் பார்த்து, ''என்ன சொல்லுகிறீர்கள்?'' என்று புரியாமல் கேட்டாள் மோகனா!

''உன்னை நான் எதிலும் கட்டாயப்படுத்த மாட்டேன், மோகனா. ஆனால், இனி நான் இருக்கப்போவது எங்கள் வீட்டில்தான்! அம்மா, அப்பாவுடன்.! என்னோடு இருப்பது உனக்கு விருப்பமானால், நீ அங்கே வரலாம். அம்மா உன்னை எவ்வளவு அன்போடு வரவேற்பார்கள் என்று, உன் அடி மனதுக்கு நன்றாகவே தெரியும்.! வெளியே நீ என்ன சொன்னாலும்! அன்றி, என்னைப் பிரிந்து நீ இங்கே உன் பெற்றோர் வீட்டிலேயே இருப்பதானாலும் உன் விருப்பம்.! உன் செலவுக்குத் தேவையான பணம் உன்னைத் தேடி வரும்! அ.தா.வது, நீ இ.ரு.ந்.தா.ல்...!'' என்று எழுத்து எழுத்தாகத் தெளிவாகக் கூறியவன், அவள் புரியாமல் விழித்துக் கொண்டிருக்கும்போதே எழுந்து, ''கிளம்புகிறேன்'' என்று சொல்லிவிட்டு, அங்கிருந்து வெளியேறிப் போய்விட்டான்.!

சௌமினியை ரஞ்சனுடைய குடும்பத்தின் பொறுப்பில் விட்டுவிட்டு, அத்தை மகளைத் தேடி வந்த மதிவதனியின் காதுகளில் விழுந்தது, உதயன், மோகனாவின் உரையாடலின் இந்தக் கடைசிப் பகுதியே.!

நேரே உள்ளே செல்லப் போனவளைப் பிடித்து நிறுத்தி, உதட்டில் கை வைத்து எச்சரித்து, பக்கவாட்டு அறைக்குள் இழுத்துச் சென்றவன், மோகனாவுடைய தம்பி மதன்.

உதயன் வேகமாக வெளியே சென்ற பிறகு, "மதிக்கா, இனிமேலாவது அக்காவுக்குப் புத்தி வருமா? எல்லாம் அம்மாவின் போதனை! கடை, பணத்தோடு அத்தானைப் பிரித்து, இங்கே கொண்டு வந்து விடுவதாம்! நகைக் கடைக்காரர் வீடு, என்று, அப்போது இந்த வீட்டைத் தானே சொல்வார்களாம்! அந்தப் பணம் முழுவதையும் தன் கைக்குக் கொண்டு வந்துவிடலாம் என்று அம்மா வின் திட்டம்! ஆனால், அக்காவுக்கு ஏன் மூளையில்லை என்றுதான் எனக்குப் புரியவில்லை! என்ன மாதிரி வீடு அது! நல்லவேளை சமயத்தில் அத்தான் விழித்துக் கொண்டு விட்டார். ஆனால் அக்கா? அவளுக்கு விழிப்பு வருமா?" என்று கவலையுடன் பேசினான் தம்பி!

இவனுக்கு இருக்கும் புத்தி, இவன் அக்காவுக்கு இல்லையே!

மதனின் தலைக் கேசத்தைச் செல்லமாக அளைந்து, "எல்லாம் நன்றாக விழிப்பு வரும், பார்! அதற்காக, அவளை ஓர் உலுக்கு உலுக்கிவிட்டுத்தானே போகப் போகிறேன்! இதையெல்லாம் பற்றிக் கவலைப்படாமல், நீ உன் பாடத்தை மட்டும் பார்! ஏ...ய், இப்படிக் கவலைப்படுகிற மாதிரி, படிப்பதற்கு டிமிக்கி கொடுக்கப் பார்க்கிறாயா?" மதி சீண்டலாகக் கேட்க, கவலை முகம் மாறி, "போக்கா! அப்படியெல்லாம் கிடையாது!" என்று புன்னகை செய்தான் சின்னவன்.

"எனக்குத் தெரியாதாம்மா? நீ எப்போதும் வகுப்பில் முதல்தானே? ஆனால், இதில் கிடந்து மனதை அலட்டிக் கொள்ளாதே. நான் பார்த்துக் கொள்ளுகிறேன். என்ன?" என்று தேற்றிவிட்டு, 'அத்தை எங்கே, மதன்? அன்றைக் கும் இல்லை.!" என்று கேட்டாள்.

“கடை கண்ணி என்று ஒரே ஊர் சுற்றல்தான். அதற்கு, இதற்கு என்று அத்தானிடம் அக்கா வாங்கித் தருகிற பணத்தை வேட்டு விட வேண்டாமா? அப்பாடியோவ்! நானெல்லாம் படித்து முடித்ததும், வெளிநாடுதான், மதிக்கா! இந்த அம்மா கூட இருக்கவே முடியாது! போக்கா! அம்மா வருமுன், போய் அக்காவுடன் பேசு!” என்று மாமன் மகளை உந்தித் தள்ளிவிட்டான் மதன்.!

வெளிநாடா? தாயின் குணத்தைக் கிட்டேயே இருந்து பார்க்கிறான் அல்லவா? பாவம்! அதற்காக எவ்வளவு யோசித்திருக்கிறான்... என்று எண்ணமிட்டவள் அதை ஒதுக்கி, மோகனாவைப் பற்றி யோசித்தாள்.

அவளிடம் எப்படிப் பேசுவது என்று திட்டமிட்ட படியே அத்தை மகளைத் தேடிச் சென்றாள் மதிவதனி.

# 15

உதயனின் பேச்சு பெரிதாக அதிர வைத்து விட்டது போல, அங்கேயே சோபாவில்தான் கிடந்தாள் மோகனா!

அதிர்ந்தும் போயிருந்தாள்!

இப்போது பிடித்தால்தான் உண்டு என்று, அவ ளுடைய அன்னை சொல்லிக் கொடுத்ததுதான்!

அதற்கேற்ப, உதயனும் இத்தனை நாள் ஆடிக் கொண்டு இருக்கவும், அவளுக்கு ரொம்பவே பெருமையாக, கர்வமாகக் கூட இருந்தது!

அவள் என்ன சொன்னாலும் கேட்பான் என்ற நிச்சயம்!

கடைசியில், 'செத்துப் போவேன்' என்ற வார்த்தைக்குக் கூட, அவன் கலங்கவில்லையே!

தன்னிடமே பொய் சொன்னாள் என்ற கோபமா?

வெறும் கோபமா? அல்லது வெறுத்தே விட்டானோ?

நீ வாழ்வதும், சாவதும் உன் கையில் என்றால் என்ன அர்த்தம்?

நீ செத்தே போனாலும், எனக்கு அக்கறையில்லை என்பதுதானோ?

வெறுமனே முகம் சுளித்தால் தாங்காதவன், இப்படிச் சொல்வதானால்... கடவுளே! என்ன ஆகிவிட்டது?

என்ன என்று கலந்து பேசி அலசி ஆராய, இந்த அம்மா கூட வீட்டில் இல்லையே!

தினம், தினம் ஏதோ காரணம் சொல்லி, உதயனைப் பணம் கொண்டு வரச் சொல்வதும், உடனே அதைச் செலவு செய்ய ஊர் சுற்றுவதும்! சே!

இப்போது என்ன செய்வது என்றே புரியவில்லையே!

உதயன் மெய்யாகவே விலகிப் போய்விடுவானா? அவனை எப்படி இழக்க முடியும்?

தானாகவே என்னென்னவோ எண்ணி மோகனா கலங்கிக் கொண்டிருந்த போதுதான் மதிவதனி அங்கே போய்ச் சேர்ந்தாள்.!

நல்ல நேரத்தில் வந்தாள்., இவளிடம் யோசனை கேட்கலாம் என்று, மோகனா ஆவலாகத்தான் மதிவதனியை வரவேற்றாள்.

ஆனால், மற்றவளின் பேச்சும் சேர்ந்து அவளைக் குத்திக் குடைந்தது.!

''என்னம்மா, மாமியார், மாமனார் தொல்லையே இல்லாமல் ஜாலியாக அம்மா வீட்டில் வாசமா? என்ன சமையல்? அத்தை செய்து வைத்துவிட்டுப் போனார் களா? உன் கை பாகமா?'' என்று கேட்ட குரல் அவளைக் குத்தியது என்றால், கேள்வி அவளை நோகடித்தது எனலாம்.!

கணவன் வீட்டில், அவள் சமையல் அறைக்குள் செல்ல நேர்ந்ததே இல்லை!

சமையல்காரம்மா செய்ததை எடுத்து வருவது கூட, ''பின்னாலே மோகனாதானே செய்தாக வேண்டும்? இப் போதே எதற்கு?'' என்று மாமியார்தான் எடுத்து வருவாள்.!

''இனிமேல்தான் ஏதாவது செய்ய வேண்டும்.'' என் றாள் முணுமுணுப்பாக!

''ஆனாலும், வேலை இருந்தாலும், அம்மா வீட்டு வாசம் என்றால் அதுதான் ஆனந்தம்! இல்லையா, மோகி? மாமியார், மாமனார் மாதிரியே, கணவன் தொல்லை கூட இல்லாமல் போவது என்றால், இன்னமும் அதிக ஜாலி தான்.. இல்லையா? ஆனால், அப்படியே ஆகப் போகிற தாமே? என் 'அட்வான்ஸ்' வாழ்த்துக்கள், மோகி! ஆனாலும் நீ கெட்டிக்காரிதான், மோகி! நாங்கள் எல்லாம், முது கொடிய, கைவிரல் வலிக்க உழைத்துச் சம்பாதிக்கிறோம்! உன்னைப் பார்! சும்மா ஒரு தாலியைக் கட்டிக் கொண்டு, உட்கார்ந்த இடத்தில் இருந்து, ஜீவனாம்சம் என்ற பெயரில் சந்தோஷமாகச் சம்பாதிக்கப் போகிறாய்! புருஷன், புகுந்த வீடு, ஒரு கடமையும் கிடையாது.!

பிரமாதம், மோகி!'' என்று கைதட்டிப் பாராட்டினாள் மதிவதனி.

''போதும், நிறுத்து!'' என்று கத்திக் காதுகளைக் கைகளால் பொத்திக் கொண்டாள் மோகனா.!

ஆனால் அதென்ன 'இயர் ப்ளக்'கா கேளாமல் போவதற்கு?

''ஏன் மோகனா, நான் உன்னைப் பாராட்டித்தானே பேசிக் கொண்டிருக்கிறேன்? எல்லாம் சரிதான்! ஆனால், இந்தக் கதைகளில், டீவி சேனல் தொடர்களில் எல்லாம், இந்த மாதிரிப் பெண்களுக்கு ஒரு பட்டம் கொடுப்பார்கள்! வாழாவெட்டி என்று! ஆனால், அதைப் பொருட்படுத்தத் தேவையில்லை! அந்த மாதிரிப் பிரிந்து வாழும் ஆண்களுக்கு வாழாவெட்டன் என்று பட்டம் ஏதும் கொடுக்கவா செய்கிறார்கள்? அதனால் இந்த ஒருதலைப் பட்சமான வார்த்தைகளை நாம் மதிக்கவே கூடாது....''

''போதும், போதும்!'' என்று கத்திவிட்டாள் மோகனா. ''நீ என்ன, என்னைக் குத்திக் கிளறி, நோகடிப்பதற்காகவே வந்தாயா, மதி?'' அழுகையும் ஆத்திரமுமாகக் கேட்டாள்.

''நோகடிப்பதற்கா? நானா?''

சட்டென அத்தை மகளின் அருகே அமர்ந்தாள் மதிவதனி. மற்றவளின் ஒரு கையைப் பற்றி, ''மோகி, நீ எப்படி, இப்படி ஆனாய்? உதயனிடம் உனக்கு உண்மை அன்பு இருப்பதாக எண்ணினேனே.! அன்பின் அடையாளம் என்ன? அன்பு கொண்டவர்களைச் சந்தோஷப் படுத்துவதுதானே? உதயன் உனக்காக எவ்வளவு தூரம் வந்தார்? நீ, அவருடைய குடும்பத்தையே பிளவுபடுத்து

வாயா? அதுவும் பொய்யும், புரட்டும் சொல்லி! நீ அப்படிப்பட்டவள் இல்லை என்று... சரி, அதை விடு! இத்தனை ஆண்டுகள் நான் அறிந்த மோகனா, இப்படி மோசமானவள் இல்லையேம்மா!'' என்று அன்பும் பரிவும் கலந்த குரலில், வருந்திப் பேசினாள்.

அப்படியே அழுதுவிட்டாள் மோகனா.

''அதில்லை மதி. எல்லாம் சுய சம்பாத்தியம், மாமனார் தெருவில் நிறுத்தி விடுவார். இந்த நேரம் விட்டால், புருஷனைப் பிடிக்க முடியாது.... இப்படியெல்லாம் அம்மா... அம்மாவே சொல்லவும், என்னவோ எல்லாம் சரியாகத் தோன்றிவிட்டது! கல்யாணம் ஆன பல பெண்கள், எப்படியெப்படி கஷ்டப்படுகிறார்கள் என்று, உண்மைக் கதைகளையே காட்டத்தானே செய்கிறார்கள்! அதுபோல நம் கதை ஆகிவிடாமல் தடுப்பதற்கு அம்மா வழி சொல்வதாக எண்ணிவிட்டேன்.! அத்தை, மாமா, அண்ணி எல்லோரும் நிஜமான நல்லவர்களாக நடந்ததை, வேஷம் போடுவதாக நினைத்து... உதியை அவர்களிடம் இருந்து பிரிக்க எண்ணி.... மதி, அவர்கள் என்னை மன்னிப்பார்களா?'' என்று தவிப்புடன் கேட்டாள்.

அவள் முதுகை மென்மையாக வருடி, ''போய்த்தான் பாரேன்.! வசி அத்தை ரொம்ப நல்லவர்களாம் மோகனா! அவர்கள் உனக்கு மாமியாராகக் கிடைத்தது, உன் அதிர்ஷ்டம்! நீ போனால் பழைய மாதிரியே ரொம்பப் பிரியமாகவே இருப்பார்கள்.!'' என்றாள் மதி.

''ஆனால் உதி? அவருடைய அன்பை, நானே கொன்று விட்டேனோ என்று ரொம்பப் பயமாக இருக்கிறது!''

''அப்படியெல்லாம் ஆகாது, மோகி.!''

''இல்லை மதி. சாவதானால் உன்னிஷ்டம் என்று அலட்சியமாகச் சொல்லிவிட்டுப் போனார்.!'' என்று அழுதாள் அவள்.

''உனக்கு விருப்பம் இருந்தால் வரலாம் என்றும் தானே சொன்னார்?'' என்றவள், அடுத்தவள் யோசனை யாகப் பார்க்கவும், ''எப்படித் தெரிந்தது என்றா? நான் வரும்போதுதானே சொன்னார்? கேட்டுக் கொண்டுதான் வந்தேன். அதனால்தான், நான் நம்பிக்கையோடு பேசு வதும்!'' என்று எடுத்துரைத்தாள்.!

''அப்படியானால், நான் கிளம்பட்டுமா, மதி?''

''உதை இவளை! இன்னமும் கேட்டுக் கொண்டு நிற்கிறாயா?'' என்று மதிவதனி மிரட்டலான மொழியவும், சிரித்துக் கொண்டே எழுந்தாள் மோகனா!

''என்னோடு வருகிறாயா? நானே, உன்னை உன் வீட்டில் கொண்டு விட்டுவிட்டுப் போகிறேன்.!'' என்று மதிவதனி கேட்டுக் கொண்டிருந்த அந்த வேளையில், மதன் உள்ளே ஓடி வந்தான்.

''அக்கா, அக்கா! அம்மா! அம்மா வருகிறார்கள்!'' என்று கவலையோடு அறிவித்தான்.

ஒரு கணம் திகைத்துப் பார்த்துவிட்டு, ''ஓ, இவனும் உன் பக்கமா?'' என்று கேட்ட மோகனா உடனே தலை யசைத்து, ''இல்லை... என் பக்கமா என்று கேட்க வேண்டும். எத்தனை முறை எனக்குப் புத்தி சொன்னான் தெரியுமா? அப்போது, இவனை முட்டாள் என்று நான்தான் முட்டாள்தனமாக நினைத்தேன்! சாரிடா.!''

என்று தம்பியின் கன்னத்தை லேசாக வருடி, வருத்தத்துடன் கூறினாள்.

தொண்டையில் அடைத்ததை விழுங்கிக் கொண்ட, ''அதை விடுக்கா இப்போது அம்மா...'' என்று அவன் சொல்லிக் கொண்டு இருக்கும் போதே, ''ஸ்ஸ் அப்பா, என்ன வெயில்! தொண்டை காய்ந்து போய்விட்டது! அன்றைக்கு வாங்கி வந்தேனே, அந்த ஏலக்காய்ப் பால் ஒரு பாட்டிலை எடுத்து வா, மோகனா!'' என்றபடி உள்ளே வந்தாள சுந்தரி அம்மாள்.

மதிவதனியைப் பார்த்ததும், ''அட, நீ எப்போது வந்தாய்? ப்ரிஜ்ஜில் இன்னொரு பாட்டில் இருந்தால், மதிக்கும் எடுத்து வா!'' என்று மகளை ஏவினாள் அவள்.

''வேண்டாம்மா! மதியும் நானும் இப்போது கிளம்பப் போகிறோம். எங்கே, என்ன என்பதெல்லாம் அப்புறம் மதனிடம் கேட்டுக் கொள்ளுங்கள். ஆனால் ஒன்று! உங்கள் பணத்தாசைக்காக என்னையும் உதி குடும்பத்தையும், உதியையுமே பிரிக்கிற வேலை இனிமேல் நடக்காது! இதை மனதில் வைத்துக் கொண்டு, இனி என்னிடம் பேசுங்கள். வா, மதி!'' என்று மாமன் மகளின் கையைப் பிடித்துக் கொண்டு வெளியே நடந்து விட்டாள் மோகனா!

விரைவிலேயே, சௌமினிக்கும் ரஞ்சனுக்கும் முறைப்படி நிச்சயதார்த்தம் செய்தார்கள்.

வழக்கம் போலவே, பூமாவும், சுதர்சனமும், சௌமினியையும் ஒரு மகளாகவே கருதி, எல்லாவிதச் சிறப்புகளையும் சத்தமின்றிச் செய்து மகிழ்ந்தார்கள்.

உதயனும், மோகனாவும் மூத்த ஜோடியாக ஓடி ஓடி வேலை செய்தது பார்க்க அழகாகவும் பாந்தமாகவும் இருந்து எல்லோர் மனதையும் கவர்ந்தது!

வாயைத் திறவாமல் ஒதுங்கிப் போன சுந்தரியை, இழுத்து வைத்து, லட்சுமி இயல்பாகப் பேசியதும் அப்படியே!

எல்லோரும் மகிழ, கோலாகலமாக விழா நடந்தேறியது!

சின்னவர்களின் கேலியும் கிண்டலுமான பேச்சினிடையே, ''இரண்டு பேர் வாழ்வைச் சீர்ப்படுத்தி இருக்கிறேன்! எனக்கு மட்டும் எதுவும் செய்யாமல், 'அம்போ' என்று விட்டுவிட்டீர்களே!'' என்று வசீகரன் குறைப்பட, எல்லோரும் ஒவென்று சிரித்தார்கள்!

சட்டைக் கையை மடக்கி விட்டுக் கொண்டு, ''சரிப்பா! வசி இப்படிக் குறைப்படும்படியாக, நாம் விடக்கூடாது! இவன் வாழ்வையும் நாம் சீர்ப்படுத்தி விட வேண்டியது தான்! வா மோகனா!'' என்று கிளம்பினான் உதயன்.

''இதோ!'' என்று ஓடி வந்துவிட்டு, ''ஆனால், என்னத்தைச் சீர்ப்படுத்துவது என்று தெரியவில்லையே! கொஞ்சம் முன்னோசையோடு, ஏதாவது பிரச்சினையை உண்டு பண்ணி வைத்திருந்தால் நாமும் வரிந்து கட்டிக் கொண்டு அதைச் சீர் செய்யலாம்! இவர்கள்தான் ஒரு பிரச்சினையும் இல்லாமல் இருக்கிறார்களே!'' என்று வருத்தப்பட்டாள் மோகனா!

''இப்படி ஒரு வருத்தமா?'' என்று கேட்டுவிட்டு, உடனேயே, ''பிரச்சினையே இல்லையேப்பா! இல்லாத பிரச்சினையை எப்படித் தீர்ப்பது?'' என்று கேட்டான்

“ஊகூம். இதெல்லாம் ஒன்றும் செய்யாமல் நளுக்கிக் கொண்டு ஓடுகிற முயற்சி!” என்றான் வசீகரன்.

“அடடா! நிஜமாகவே, தெரியவில்லைப்பா! என்ன என்றுதான் சொல்லேன்!” செய்கிறோம்!” என்றார்கள் மற்றவர்கள் கோரசாக.

வசீகரன் மதிவதனியை நோக்க, அவள் வேண்டும் என்றே, வேறெங்கோ பார்த்தாள்!

தோளைக் குலுக்கி, “என்னவோ தெரியவில்லையேப்பா! பார்ட்டி கண்டு கொள்ளவே மாட்டேன் என்கிறதே!” என்றான் வசீகரன்.

“ஹே! இதுதான் பிரச்சினையா? இத்தனை பேர் நடுவில் வெட்கமாக இருக்கும்!”

“என்னது? மதிக்காவுக்கா வெட்கம்?” என்று மதன் ஆச்சரியமாகக் கேட்க, எல்லோரும் சிரித்தார்கள்.

“சின்னப் பசங்கள் எல்லாம் இங்கே இருக்கக் கூடாது! ஓடு!” என்று யாரோ அவனை விரட்டினார்கள்!

“இவ்வளவு தள்ளி உட்கார்ந்துகொண்டு, பேசவில்லை என்றால் எப்படி?” என்று அவனை இழுத்துப் போய், மதிவதனியின் பக்கத்தில் உட்கார வைத்தார்கள்.

பிகுவோடு எழுவது போலப் பாவனை செய்தவளைக் கையைப் பற்றி அவன் தடுக்கவும், ஓகோ என்று எல் லோரும் மீண்டும் சிரித்தார்கள்.

“ஹேய், இன்றைய கதாநாயகன், நாயகி ரஞ்சனும் சௌமினியும்! அவர்களை விட்டு, எங்களைக் கலாய்க் கிறீர்களே!” என்று கவனத்தை அவர்கள் பக்கம் திருப்பி விட்டான் வசீகரன்.

(Ladys

கேலி அந்தப் பக்கம் போக, அந்தப் போர்வையில், அவள் பக்கம் சரிந்து, "என்ன கோபம்?" என்றாள் அவள்.

"பின்னே பேசவே காணோமே!"

"அப்புறம், மயக்கி, வளைத்து என்று பேச்சு வருமே!"

"கோபம் இல்லை என்று யாரோ சொன்னார்கள்?"

"பொய்! என்ன கோபம் என்றுதான் கேட்டேன்!"

"அப்பாடி! பேசி ஜெயிப்பது கஷ்டம் போல இருக் கிறதே!"

"அதனால்தான் பேசாமலே இருந்து விடுவது!" என்று அவள் முடிக்கையில், இருவருக்குமே சிரிப்பு வந்து விட்டது!

"உனக்கு ஒன்று வைத்திருக்கிறேன்!" என்று சட்டைப் பைக்குள் கையை விட்டு, ஒரு 'செல்ப் லாக்' கண் ணாடி உறையை எடுத்து அவளிடம் கொடுத்தான் வசீகரன்.

இரண்டு ரூபாய் நாணயம் ஒன்று தெளிவாகத் தெரிந்தது!

வியப்புடன் பார்த்தவளின் கண்களில் புரிதலைக் காண வும், "அப்போதே, முதல் நாள் பிள்ளையார் கோயிலி லேயே, என்னவோ தோன்ற எடுத்து பத்திரப்படுத்தி வைத்தேன். பிறகு ரஞ்சன் சௌமினி பிரச்சினை வந்து, அது பெரிதாகத் தெரிந்தது! உங்கள் குடும்பங்களில், சின்னவர்களுள் உனக்கும், மொத்தத்தில் உன் தந்தைக் கும் மதிப்பு இருப்பது நன்றாகத் தெரிந்தது! நீயாகவோ, உன் தந்தையிடம் சொல்லியோ ஏதாவது செய்ய மாட்

டாயா என்றுதான், அந்தப் பிரச்சினை பற்றி உன்னிடம் சொல்ல வந்ததாக முதலில் நினைத்தேன். ஆனால், உன் மனம், அப்போதே வேறு நினைத்திருக்கிறது!'' என்றான் அவன்.

''சௌமி விஷயமாக என்ன சண்டை போட்டாலும், நானும் உங்களையேதான் நினைத்துக் கொண்டிருந்தேன்! வசீகரன்! என்று நினைவிருக்கிறதா என்று அப்பா கேட்டபோது, எனக்கு எப்படிச் சிரிப்பு வந்தது தெரியுமா? மறந்தால்தானே என்று நினைத்தேன்!'' என்று தன் மனதின் கதையைச் சொன்னாள் அவள்!

''கூட்டத்தின் நடுவே உட்கார்ந்து, அதிக நேரம் ரகசியம் பேசுவது ஒத்துக்கொள்ளப்பட மாட்டாது. ஏதோ ஒரு முக்கியமான முடிவை எடுப்பதற்காக அனுமதிக்கப் பட்ட அவகாசம் முடிந்து விட்டது! என்ன முடிவு எடுத் தீர்கள்? இரட்டைத் திருமணம்தானே?'' என்று மூத்த முக்கியஸ்தன் போல, உதயன் வினவினான்.

''இரட்டைத் திருமணமா? ஆனால், இவர்கள் திரு மணத்துக்கு இன்னும் நாற்பது நாட்கள் இருக்கிறதே! அவ்வளவு நாள் காத்திருப்பதா? ஊகூம்! நாங்கள், ரொம் பச் சீக்கிரமாக முடித்துக் கொள்வதாக இருக்கிறோம்பா!'' என்று வசீகரன் கெத்தோடு பதில் சொல்ல, சூழ இருந் தோரின் சிரிப்புச் சத்தத்தில், அந்தத் திருமண மண்ட பமே அதிர்ந்தது!